# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.








புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 கார்த். திங்கள் 20-ம் நாள் (5—12—1965) ஞாயிற்றுக்கிழமை ஷ.·.பான்11 | இதழ் 28


## "டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தை" எதிர்த்து

# மூன்று பெரிய ஊர்வலங்கள்

## பௌத்த சங்கங்கள் செய்யும் ஏற்பாடு

---o---

## நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்த எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

எதிர்க்கட்சிகள் தங்களின் வகுப்புவாதப் பிரசாரத்தை இவ்வாரம் தீவிரப் படுத்தியுள்ளன. இதற்காக இவ்வாரம் நியமிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டுக் கமிட்டி நாடெங்கினும் பிரசாரப் பொதுக் கூட்டங்களை நடத்துவதென்றும்' முதலில் முக்கிய நகரங்களில் கூட்டங்களை நடத்துவதென்றும் முடிவு செய்துள்ளதென அறியப்படுகிறது. "டட்லி சேனநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம்" என்று பெயரால் ஓர் ஒப்பந்தத்தை இடது சாரிப் பத்திரிகைகள் வெளியிட்டிருப்பதால், அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தே இக் கிளர்ச்சி ஆரம்பமாகவிருக்கிறது.

அத்துடன் இந்த "ஒப்பந்தத்தை" எதிர்த்து நாடெங்கினும் ஊர்வலங்கள் நடத்தவும் அதற்கு முன்னோடியாக முதலில் மூன்று பெரிய ஊர்வலங்களை நடத்தவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று கூறப்படுகிறது.

டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் என்று கூறி ஓர் ஒப்பந்தத்தின் நகலை இடது சாரிப் பத்திரிகைகள் பிரசுரித்ததைத் தொட்டு நாடெங்கினும் பெரும் கிளர்ச்சிகளை நடத்த எதிர்க்கட்சிகள் தீவிர ஏற்பாடுகள் நடைபெறுவதாக நம்பப்படுகிறது.

ஒப்பந்தத்தை எதிர்த்து நாடெங்கினும் பிரசாரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, ஆகிய எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு உடனடியாகக் கூடி அனுராதபுரம், களனி. கண்டி, குருநெகல, மாத்தறை, பண்டாரவளை, காலி, இரத்னபுரி முதலிய இடங்களில் 'ஒப்பந்தத்தை' எதிர்த்து சுமார் 12 பொதுக் கூட்டங்களை மூன்று கட்சிகளும் சேர்ந்து நடத்துவதென்றும், பின்னர் இதர இடங்களிலும் பொதுக் கூட்டங்களை நடத்துவதென்றும் முடிவு செய்திருக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## மொழி மசோதா டிசம்பர் 18-க்கு மேல்

கொழும்பு மாநகர சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னரே (டிசம்பர் 18க்கு மேல்) தமிழ் மொழி மசோதாவும், மாவட்ட சபைகள் மசோதாவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென 'சிறுவஸ்தி' வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரச்சினையாக இவற்றையெடுத்திருப்பதால், தேர்தல் முடிந்த பின்னரே இம் மசோதாக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்கள் தேசிய அரசாங்கத்தை வேண்டியுள்ளார்களாம்.

ஐ. தே. கட்சி வேட்பாளர்களின் வேண்டுகோள் பற்றி கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் 'சிறுவஸ்தி' வட்டாரங்களில் பேசப்பட்டது.

## தீக்குளிப்பதாக பிக்கு அறிவிப்பு

'எத்த' (12-12-65) கீழ்க் காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:-

'மல்வத்த மகாநாயக்க தேரோவுக்கு பட்டால ராஜ மகா விஹாரைப் பிரதம குரு வண. அம்பலங்கொட அத்ததஸ்ஸி தேரோ கீழ்க்காணும் தந்தியை நேற்று அனுப்பிவைத்தார்.

மகா நாயக்க தேரோ அவர்களுக்கு
மல்வத்த விஹாரை,
கண்டி.

மகா நாயக்க தேரோ அவர்களின் சொற்படி, நாங்கள் யு. என். பிக்காகப் பாடுபட்டோம். இன்று நாடும் இனமும் தமிழரசு வாதிகளின் கையில் இருக்கின்றன. டட்லி—செல்வநாயகம் ஒப்பந்தத்தை உடனடியாக வெளியிடா விட்டால், நான் பிரதம மந்திரி மாளிகையின் முன்னிலையில் என் உடலுக்குத் தீமூட்டிக் கொண்டு நாட்டுக்காகவும்; இனத்துக்காகவும் உயிரைத் தியாகம் செய்வேன்.

அம்பலாங்கொட அத்ததஸ்ஸி
பட்டால விஹாரை,
தில்ஸமகாராம'

## செல்வா-டட்லி ஒப்பங்கள் மோசடி?

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களதும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவினதும் ஒப்பத்தை மோசடி செய்து இவர்கள் மத்தியிலுள்ள உடன்படிக்கை இதுதான் என்று கூறக்கூடியதாக ஒரு உடன்படிக்கையைத் தயார் செய்து ஐம்பது இலட்சம் துண்டுப்பிரசுரங்களை நாடு பூராவிலும் விநியோகம் செய்ய எதிர்க்கட்சிகள் முயற்சி எடுத்து வருவதாகத் தகவல் கிட்டியுள்ளது.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களுக்கும்-பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களுக்கு மிடையில் உள்ளதாகக் கருதப்படும் உடன்படிக்கையொன்றை 'ஜனதின' என்ற சிங்களத் தினசரியும், 'ஜன சத்தியா' என்ற சிங்கள

(9-ம் பக்கம் பார்க்க)


## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2-40 |
| நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| ரேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-75 |
| No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-75 |
| No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 2-20 |
| No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 3-60 |
| No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 2-20 |
| No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-75 |
| No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 8-85 |
| No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 8-80 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 8-55 |
| பிளாஸ்ரிக் சிங்கள டயறி " | 2-20 |
| பேர்ஸ் சிங்கள டயறி " | 3-80 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி " | 5-50 |
| No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) | 8-70 |
| No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி " | 3-15 |
| No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 3-15 |
| No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-75 |
| No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 4-95 |
| No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 4-40 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 5-25 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 6-50 |
| ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-85 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-75 |

இன்னும் பல உண்டு.

காகிதப் பஞ்சம் காரணமாக சொற்ப தொகையே தயாரித்துள்ளோம். பிந்தினால் கிடைப்பதரிது—இரட்டிப்பு விலை கொடுத்தும் வாங்க வேண்டி நேரிடலாம்.

மற்றும் விபரங்களுக்கு:

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
போன் : 79141
கிளை : யாழ்ப்பாணம் — போன் : 236.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்திற்கு இலட்சியம் வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் ஆலாலசுந்தரம் பேச்சு

“இலக்கியம் இலட்சிய நோக்குடன் படைக்கப்பட வேண்டும். அது எத்தகைய இலக்கியமாக இருந்தாலும் அதற்கு இலட்சியம் வேண்டற்பாலதாகும். இலட்சியம் இல்லாத இலக்கியம் உயிர் அற்ற உடலாகும். இலட்சியம் மனித குலத்தை வாழ்விக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும். சமூகத்திலுள்ள குறைபாடுகளை மட்டும் எடுத்துக் காட்டுவது இலட்சியமாகாது. சமூகத்திலுள்ள குறைபாடுகளை மாற்றுவதற்கான மார்க்கத்தைக் காட்டுவதே நோக்கமாக இருக்க வேண்டும்'' என்று அறவாதி திரு. மு. ஆலாலசுந்தரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ''கொழும்புப் பெண்'' என்ற நகைச்சுவைக் கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.


ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் தலைமையில் வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற திரு. பொ. சண்முகநாதனின் 'கொழும்புப் பெண்' வெளியீட்டு விழாவில் மேலும் திரு. ஆலாலசுந்தரம் கூறியதாவது:

'நகைச்சுவை இலக்கியத்தின் மூலம் மக்கள் உள்ளத்தில் நல்ல கருத்துக்களைப் பதிய வைக்க முடியும். வேகமாகச் சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகில் கனமான கருத்துக்கள் நிறைந்த நூல்களைக் கற்கவும், அவற்றைப்பற்றிச் சிந்திக்கவும் மக்கள் நேரமற்றவர்களாகின்றனர். ஆகவே நகைச்சுவை எழுத்தாளர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து தங்கள் இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.''

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

'எப்படி வேடம் போட்டு மேடையேறியவர்களையெல்லாம் நடிகர்கள் என்று சொல்லிவிட முடியாதோ, அப்படியே பேனா பிடித்தவர்கள் எல்லாரையும் எழுத்தாளர்கள் என்றும் சொல்லிவிட முடியாது. சமூகத்தின் குறைபாடுகளை ஏதோ ஒரு வகையில் படம் பிடித்துக் காட்டக் கூடியவனும் நிறைவைப் பிரதிபலித்து விளக்குபவனும் இருப்பவனே உண்மையான எழுத்தாளன் என்று சொல்ல முடியும். அத்தகைய எழுத்தாளர்களே நாட்டுக்குத் தேவை. இந்த வரிசையில் 'கொழும்புப் பெண்' நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதியை வெளியிட்டுள்ள இளைஞர் பொ. சண்முகநாதனைச் சேர்த்துக் கொள்ளலாம். சமூகத்தில் பூரையோடிக் கிடக்கும் தவறான போக்குகளை நகைச்சுவை மூலம் சீர்திருத்துவது சுலபமானதென்றும் அத்தகைய பொறுப்பான பணியொன்றில் திரு. பொ. சண்முகநாதன் தனது பேனாவைப் பயன்படுத்தி வருகிறார் என்றும், சமூதாயத்திலேயுள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு ஏற்ற முறையில் ஆசிரியர் தனது நகைச்சுவைத் தொகுதியில் அன்றாட மனித வாழ்க்கையில் இடம் பெறும் எத்தனையோ விடயங்களை எழுதியிருக்கிறார்' என்றும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவரும் பிரபல நகைச்சுவை எழுத்தாளருமான திரு. ரீ. பாக்கியநாயகம் அவர்கள் தனது வெளியீட்டுரையின் போது 'சதா பிரச்சினைகளுக்குள் அகப்பட்டுத் தவிக்கும் மனிதனுக்கு அப்பிரச்சினைகளை ஓரளவு மறந்திருப்பதற்கு நகைச்சுவை இலக்கியம் உதவுகிறதென்றும் இலங்கையில் நகைச்சுவை இலக்கியம் போதிய வளர்ச்சியடையவில்லை என்றும் ஈழத்துப் பத்திரிகைகள் ஏனைய இலக்கியத் துறைகளுக்கும் இடமளிப்பது போன்று நகைச் சுவை இலக்கியத்துக்கும் ஏற்ற இடமளிக்கவேண்டு' மென்றும் கூறினார்.



திரு. பொ. சண்முகநாதனின் 'கொழும்புப் பெண்' என்ற நகைச்சுவைக் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகிறார் யாழ் நகர முதல்வர் திரு. க. சே. மாதேவா. பிரபல நகைச்சுவை எழுத்தாளர் திரு ரீ. பாக்கியநாயகம் நூலின் முதற் பிரதியை வர்த்தகப் பிரமுகர் திரு. வே. க. இராசலிங்கம் அவர்களிடம் கையளிக்கிறார்'

—படம்: சித்திராலயா

திருவாளர்கள் தேவன்-யாழ்ப்பாணம், சொக்கன் ஆகியோரும் பேசினர். கலைச் செல்வி ஆசிரியர் சி. சரவணபவன் (சிற்பி) வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ்ப்பாண முதல்வர் திரு. எஸ். சி. மகாதேவா அவர்கள் விழாவைத் தொடக்கி வைத்தார்கள். திரு. வே. க. இராசலிங்கம் 'கொழும்புப் பெண்' முதற் பிரதியைப் வாங்கினார். நூலாசிரியர் பொ. சண்முகநாதன் நன்றி கூறினார்.

———

### அடி சடையா!

(நீலாவணன்)

அடிபறை அடிபறை அடிசடையா!—ஊர்
அரங்க! அரங்கவென! அடிசடையா!
அன்னம் போலத் தலையை முன்னால் நீட்டு—கையை
அப்ப டியும் இப்ப டியும் காட்டு
முன்னும் பின்னும் காலைத் தூக்கி
உன்னி யுன்னித் தாளந் தீர்த்து
அடிபறை அடிபறை அடிசடையா!—ஒரு
அவசர மில்லையினி அடிசடையா!

பாடை கட்டி முடியவில்லை ஆடு!—சனம்
பார்த்து நல்லாய் ரசிக்கட்டுமே ஆடு!
வாடைக் காற்றில் உனது வெள்ளைத்
தாடி போனால் கவலையில்லை!
அடிபறை அடிபறை அடிசடையா!—அயல்
அறிக அறிக வென அடிசடையா!

இறைச்சிக் கடை காரரிவர் சாது! —வீசும்
எலும்புக் காகப் பெட்டை நாய்கள் வசது!
பொறுக்க வந்த நாய்க்கே லும்பு
பொறுத்த தற்கு யார் பொறுப்பு?
அடிபறை அடிபறை அடிசடையா!—இவர்
அறமும் அயலறிய அடிசடையா!

தங்க மென்றால் எங்கள் முதலாளி—தானத்
தருமத் தண்ணீர் நிறைந்து பொங்குங் கேணி
தங்கக் காசின் ஓரமாகத்,
தங்கி வாழும் நீதி! தூசு!
அடிபறை அடிபறை அடிசடையா!—இனி
அதிசயம் அறிகென அடிசடையா!

சந்தி வரும் அதில் சவத்தை நிறுத்து!—இவர்
சாதி குலம் கோத்திரத்தை மதித்து
குந்திக் கொந்தி ஆடு கொட்டு!
வந்த நாலூர் காதில் முட்ட
அடிபறை அடிபறை அடிசடையா!—அவர்
அழகிய செயல்களை அடிசடையா!

குப்பை யோடு உண்மை யையும் கூட்டு—பாவம்
கொளுத்த, வெண்டு போகிறீர்கள் காட்டில்
எப்படிக் கொளுத்தினீர் மெய்
எங்கும் நின்று சிரிக்கும் என்று...
அடிபறை அடிபறை அடிசடையா!—ஊர்
அரங்க அரங்க வென அடிசடையா!

#### தபால் நிலையம் தரம் உயர....?

நாட்டிலுள்ள 'சி' பிரிவு தபால் அலுவலகங்களைத் தரமுயர்த்துவதற்கு ஆலோசனை கூறும்படி தபால் தந்தி அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுள்ளார். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள 'சி' பிரிவு தபால் நிலையங்களின் தரத்தை உயர்த்தக் கருதும் மக்கள் தத்தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினருடன் தொடர்புகொண்டு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


### ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்



இதனை தலைக்கு வைத்து வாரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண் பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், தினேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு திண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50
தபால் செலவு 1-10 சதம்

அநேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இலவசம்.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


### இலக்கிய உலகு

வேதாளம்

#### பிரச்சினைக்குரியவர்

ஈழத்தின் சிறுகதை இலக்கியவுலகில் சிறப்பானதோர் இடத்தைப்பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கும் எஸ். பொன்னுத்துரைக்குப் பல பெயர்களும், பல கைகளுமுள்ளன; பலநோக்குகளுமுள. ஏராளமாகப் பல பெயர்களுள் மறைந்து எழுதிவரும் எஸ். பொன்னுத்துரையின் சிறுகதைகளில்பெரிதும் பாலுணர்வு அதிகமாக விருப்பதாகப் பலர் கூறுகின்றனர். 'தீ' என்ற நாவல் வெளிவந்த காலக் கட்டத்தில், அவரால் எழுதப்பட்ட சிறுகதைகளிற் பாலுணர்வு அதிக மிருந்ததுண்மையே. ஆனால், அவற்றிற் கூட மிக ஆழமான நோக்கொன்று சமூகத்தைச் சுட்டி நின்றதை மறுக்க முடியாது. அவரது சிறுகதைகள் ஏனையோரது கதைகளின்றும் மாறுபட்டவை மட்டுமன்றி, சித்திரிக்கும் பாத்திரம், நிகழும் காலம், இலக்கிய வடிவம் ஆகியவற்றிற்கு இணங்கிய நடையழகும் வாய்ந்தவை.

பொன்னுத்துரை இன்று ஈழத்து இலக்கியவுலகிற் பிரச்சினைக்குரிய மனிதராக விளங்குகின்றார். அவருடைய பேச்சுக்கலைகளுக்கும் எழுத்து வேகத்திற்கும் ஈடு கொடுக்க முடியாது தத்தளிப்பவர்கள், அவரது 'பலவீனங்களை'ச் சுட்டி அவரை விமர்சிக்கின்றனர். பொன்னுத்துரை ஈழமறிந்த ஒருவராகவிருப்பதால், மனிதவியல்பிற்குரிய அவரது பலவீனங்களைப் பெரிதும் உரைக்கின்றனர். பொன்னுத்துரைக்கு அவரது 'பலவீனங்கள் தாம்' ஊக்கமளித்து, இலக்கியங்களைக் கலைந்து, ஆக்க விலக்கியம் படைக்க வைக்குமென்றால், அவற்றை ஏன் பாராட்டக் கூடாது?

எமக்குப் பொன்னுத்துரை வேண்டாம்; பொன்னுத்துரை என்பவரால் உருவாக்கப் பட்டவை தாம் வேண்டும்.

பொன்னுத்துரை மற்றவர்களது பெயர்களில் எழுதுவதை இனியாவது நிறுத்துவது மிகவும் நன்று. இலக்கியக் கணிப்பிற்கு அவ்வாறு செய்வது உதவாது என்பதோடு, கூடவே வாழ்பவர்களது பெயரில் எழுதுவதால் ஆற்றல் வாய்ந்த அவர்களது திறமை மங்கியும் போய்விடுகின்றது.

ஓர் அறிஞர் கூறினார்: “உன்னைப் பலர் பாராட்டுகின்றார்கள் எனில், நீ என்ன தீமைகள் செய்தாய் என்று யோசி. உன்னைப் பலர் குறை கூறுகின்றார்கள் எனில், நீ என்ன நன்மைகள் செய்தாய் என்று யோசி!”

—பொன்னுத்துரைக்கும் இது பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். சரஸ்வதி,
இலாபம்

கே: ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்த வர்ணங்கள் அதிகமாகப் பிடிக்கும்?

ப: ஆடையிலா? அரசியலிலா? ஆடைகளிலென்றால் ஆண்களுக்கு நீலமும் கறுப்பும், பெண்களுக்கு பச்சையும் நீலமும் அதிகமாகப் பிடிக்கும்.

கே: ஜோசியத்தில் அதிக நம்பிக்கை கொண்டவர்கள் ஆண்களா? பெண்களா?

ப: ஆண்கள்தான்! காரணம் எதிர்காலத்தைப் பற்றியும், மறு உலகத்தைப் பற்றியும் அதிகமாகக் கவலைப்படுகிறவர்கள் ஆண்களாக இருப்பதுதான். எனவே அவர்களுக்கு சோதிடம், கைரேகை ஆரூடம் முதலியவற்றில் நம்பிக்கை அதிகம். பெண்களின் கவலையெல்லாம் நிகழ் காலத்தையும் இவ்வுலகத்யையும் பற்றியதுதானே!

ஃ

எஸ். கே. ஆர். ரத்தினம்,
கொழும்பு 14.

'பத்திரிகைச் சுதந்திரம்' என்றால் என்ன? அது இலங்கையில் இருக்கிறதா?

பத்திரிகையில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக எழுத அனுமதிக்கும் சுதந்திரமே பததிரிகைச் சுதந்திரம். அது இலங்கையில் அறவே கிடையாது. இங்கு இருப்பது "பத்திரிகைத் தொழிற் சுதந்திரம்".

ஃ

மு. கந்தையா,
வடலியடைப்பு

கே: திருவாளர் பொன்னம்பலம் அவர்கள் ஐ. நா சபையில் முதன் முதலில் சிறுபான்மையோரின் விஷயங்களை எடுத்து உரைப்பேன் என்றவர் முதலிலும் இல்லை, இடையிலும் இல்லை, கடைசியிலும் இல்லையே?

ப: இலங்கைக்குத் திரும்பிய பின்னர் இங்கேயே அந்த விஷயங்களை எடுத்துக் கூறினால் அதிக பயன் ஏற்படலாமென அவர் கருதியிருக்கலாம்.

ஃ

"செந்தில்",
கோப்பாய்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கின்றேன். அவள் என்னைப் பார்த்து சிரிக்கிருள் எனக்கு கதைக்க பயமாக இருக்கின்றது. என்ன செய்வது?

ப: கதைக்க பயமாயிருந்தால், அவள் சிரிக்கும்போது நீங்களும் சிரியுங்கள். பிறகு அவளே பேசத் தொடங்குவாள். உங்களின் பயமும் தெளிந்து விடும்.

ஃ

கணபதி,
பதுளை

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைக் காதலிக்கின்றுளா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?

ப: நீங்கள் அவளைப் பார்க்காமலிருக்கும்போது அவள் திருட்டுத்தனமாக உங்கள் முகத்தைப் பார்க்கிருளா, சட்டென்று நீங்கள் அவள் முகத்தைப் பார்த்து விட்டால், அவளின் இதழ்களில் ஒரு சவர்ச்சியான புன்னகை நெளிந்தோடுகிறதா, வாயால் சொல்லாமல் குறிப்புகள் மூலம் தன் காதலை உணர்த்த முயற்சி செய்கிருளா என்பனவற்றைக் கவனித்தால் அவள் உங்களைக் காதலிக்கிருளா என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஃ

முகம்மது ஆரிப்,
கொழும்பு-15

கே: ஒரு பெண் என் நண்பனைக் காதலித்தாள். பின்பு வேறு ஒருவரைத் திருமணம் செய்துக்கொள்ளப் போகிருள். என் நண்பன் பைத்தியகாரனைப் போல திரிகிறன். இதற்கு யாது செய்வது?

ப: இப்பொழுதே அவள் பிரிந்து செல்வது நன்மையே என்றும், காதல் திருமணத்தில் முடிந்து அதன் பின் அவள் பிரிந்து சென்றால் உண்மையிலேயே பைத்தியம் பிடித்துவிடும் என்றும் நண்பருக்கு விளக்கிக் கூறுங்கள்.

ஃ

சிவ. சண்முகநாதன்,
கோணவலை.

கே: குயுக்தியாரே, இலங்கையிலேயே எல்லா உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் ஆசைப்படுகிறதே. ஆசை நிறைவேறுமா?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பபடும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: நிறைவேறும். அதற்கேற்ப தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டால்! கமத்தொழில் வளர்ச்சியின் அடிப்படை தொழில் வளர்ச்சியே. எந்த அளவுக்குத் தொழில் முன்னேறியுள்ளதோ அந்த அளவுக்குத்தான் விவசாயமும் முன்னேறும். தொழில்களை வளர்க்காமல் விவசாயத்தைப் பெருக்குவதற்காகச் செய்யும் முயற்சி விழலுக்கு இறைத்த நீர்.

ஃ

காப்பாளர்,
யாழ்ப்பாணம்

கே: யான் பஸ்ஸில் கடமையாற்றும் பொழுது பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பெண்கள் என்னுடன் கண்டபடி பாம்பு போல் சிறுகிருர்களே; காரணமென்ன?

ப: உங்களின் உருவம் அவர்களின் கண்களைக் குத்துகிறதாக்கும்.

ப: ஆசையை அடக்குவது எப்படி?

ப: ஒரு பெண் உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் கள் பதிலுக்குச் சிரிக்காமல் 'உம்' என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளுங்கள். அதுதான் ஆசையை அடக்க வழி.

ஃ

ஏ. எச். ஏ. பரீத்,
கிண்ணியா. 1

கே: கந்தையானாலும் சுசக்கிக் கட்டு என்ற ஔவையார் பொன்மொழியை இன்றைய நவ நாகரிக உலகத்தில் வாழ்பவர்கள் ஏற்பார்களா?

ப: ஏன் ஏற்கமாட்டார்கள்? இது துணிக்கு மட்டுமின்றி வேறு விஷயங்களுக்கும் பொருத்தமான உபதேசம். இன்று அதனை அனுஷ்டிப்பவர்கள் ஏழை மக்கள்தான். பணக்காரர்களிடம் கந்தை ஏது? இருந்தாலும் பட்டுப் பீதாம்பரங்கள் அல்மாரி நிறைய இருக்கும்போது கந்தையைக் சசக்கிக் கட்ட வேண்டிய அவசியமென்ன?

ஃ

ஏ. ஜி, எம். பிரகாசம்,
மட்டுநகர்

கே: தற்போதய தேசிய அரசாங்கத்தைச் சில சிங்களப் பத்திரிகைகள் 'யு என். பி. தமிழரசு அரசாங்கம்' என்கிறதே இதனல் தமிழரசுக் கட்சிக்கு இகழ்ச்சியா, புகழ்ச்சியா?


ப: இரண்டுமில்லை! தமிழரசுக் கட்சியால் சிங்களவர்கள் ஆளப்படுகிருர்கள் என்ற எண்ணத்தை சிங்களவர் மத்தியில் ஏற்படுத்தி யு என். பி. மீது அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்குவதற்காகவே இச் சொற்றொடரை இடதுசாரி சிங்களப் பத்திரிகைகள் உபயோகிக்கின்றன.

ஃ

"ரொக்கட் மணிவன்"'
கொள்ளுப்பிட்டி

கே: நான் வானவெளிக்கு ரொக்கட் ஒன்றை அனுப்ப எண்ணியுள்ளேன் இதையிட்டு நீர் எனக்கு எவ்வகையில் உதவி புரிய முடியும்?

ப: நான் உதவி செய்யவும் உங்கள் எண்ணம் ஈடேறவும் நீங்களும் நானும் ரஷியாவிலோ அமெரிக்காவிலோ இருக்கவில்லையே! இலங்கையில் அல்லவா இருக்கின்ரேம்!



## அங்கொடை எல்லை......!

அங்கொடையிலுள்ள மனநோயாளர் ஆஸ்பத்திரியில் கட்டப்பட்டுளள பேரூையிலிருந்து கொழும்பு நகரவாசிகளுக்கு பாண் விநியோகிக்கப்படும்.

—செய்தி

அங்கொடைக்கும் கொழும்பு நகருக்கும் அதிக வித்தியாசமில்லை என்பது இதனல் நிரூபணமாகி விட்டது. மனநோயாளர் ஆஸ்பத்ரிக்கு போதிய இடவசதி இடைக்கவில்லையே என்று கூறப்பட்டுவர்த குறைச்சாட்டும் இனிமேல் பெறுமதியற்றதாகிவிடும். ஏனெனில் பாண் விநியோகமாகும் இடமெல்லாம் மனநோயாளரின்இருப்பிடம் பரந்து விரிவடைந்து விடுகிறதல்லவா?

## கவலை ஏன்?

பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதத் சம்பளம் இனிமேல் ஆயிரம் ருபாயாக உயரலாம்.

—செய்தி

மேலதிகமான பணம் தேவைப்படுமே என்ற கவலை எவருக்கும் ஏற்பட நியாயமில்லை. ஏனெனில் இனிமேல் பொதுத் தேர்தலில் குதிப்போரின் தொகையும் கூடி, கட்டுப்பணம் இழப்போரின் தொகையும் அதிகரித்து விடுமல்லவா?

## காரணம் புரிகிறது

ஆர். ஜி சேனநாயக்காவின் தலைமையில் "நாம் சிங்களவர் இயக்கம்" ஆரம்பமாகிறது.

—செய்தி

'நாம் தமிழர் இயக்கம்' என்று இந்த நாட்டில் இல்லாத ஒன்றை இருப்பதாக இதுவரை கூறிவந்ததன் காரணம் இப்போதுதான் புரிகிறது.

## அவசியமானது

இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு 50 இருத்தல் கொண்ட காய்ந்த மிளகாய் மூடையிலும் 15 இருத்தல் தூசி கிடக்கிறது.

—செய்தி

தூசுகளும் இந்த நாட்டிற்கு அவசியமான பொருள் என்ற உண்மையை அயல் நாட்டு ஏற்றுமதியாள காரர் உணர்ந்துள்ளனர் போலும்.


# எச்சரிக்கை

## இந்த அறிவித்தல்

### பொது மக்களின் நலனை முன்னிட்டு வெளியிடப்படுகிறது

எமது ஏஜெண்டு அல்லது விற்பனைப் பிரதிநிதி என உரிமை பாராட்டும் எவரிடமும் எமது கையொப்பம் தாங்கிய அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கும்படி பொது மக்களை வேண்டிக் கொள்கிறோம். அடையாள அட்டையைக் காண்பிக்கத்தக்க நிலையிலிருக்கும் விற்பனைப் பிரதிநிதிகள் மாத்திரமே ஓடர்கள் பதிவு செய்து கொழும்பிலுள்ள எமது கவனத்துக்கு அனுப்பி வைக்கும அங்கிகாரம் பெற்றவர்களாவர். அங்கிகாரமின்றி எமது சார்பில் செயலாற்றுவதாக உரிமை கொண்டாடும் எவரும் பொய் வேடம் புனைந்து ஏமாற்றுபவராகவே இருப்பர்.

பொது மக்களின் நலனை உத்தேசித்தே இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்றது. ஏனெனில் யாரோ ஒருவர் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள வியாபாரிகளையும் விற்பனையாளர்களையும், சந்தித்து தாம் இந்தக் கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதி என்று சொல்லி ஆள் மாராட்டம் செய்ததுமல்லாமல், இக் கம்பனியின் ஏஜென்டுகளாக அல்லது உப-ஏஜென்டுகளாகப் பிறரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற விற்பனைப் பிரதிநிதிகளுக்குக் கூட இத்தகைய நியமனங்கள் செய்வதற்கு அனுமதி கிடையாது. சன்டோ ரொகஸ், இன் ரொக்ஸ் 8, எகா ரொக்ஸ் ஆதியன போன்ற எமது விவசாய ரசாயனப் பொருள்களை தமது சொந்த வாகனத்தை உபயோகித்து கொள்ளை லாப விலைக்கு வியாபாரிகளுக்கும விற்பனையாளர்களுக்கும் இந்த நபர் விற்பனை செய்துமிருக்கிருர். கல்முனை, வவுனியா, உயிலங்குளம், ஜாஎல, அளவெட்டி, கெபிட்டிகொல்லவ செங்கலடி, புத்தள, அச்சுவேலி, பொத்துவில், செம்பியந்தலாவ பொலனறுவை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள விற்பனையாளர்கள் இந்த ஆள் மாருட்ட நடவடிக்கை பற்றி எமக்கு முறைப்பட்டிருக்கிருர்கள்.

மேற்குறித்த வகையில் எவராவது செயலாற்ற முற்படும் சமயங்களிலெல்லாம் அன்னரின் பெயர், விலாசம் முதலிய விவரங்களைப் பெற்று, எமக்கு அனுப்பி வைக்கும்படி பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தற்சமயம் இலங்கையின் எந்தப் பாகத்திலேனும் எமது விவசாய ரசாயனப் பொருள்கள் வான்களில் விநியோகிக்கப்படுவதில்லை; அங்கீகாரம் பெற்ற எமது விற்பனைப் பிரதிநிதிகள் எவரும் ரொக்கப் பணத்துக்குக் கொடுக்கவென்று எந்த வகை விவசாய ரசாயனப் பொருளையும் கொண்டு செல்வதுமில்லை. அவர்கள், ஓடர்களைப் பதிவு செய்து எமக்கு அனுப்பி வைக்க, நாம் கொழும்பிலிருந்து பொருள்களை அனுப்புவோம்.

விவசாய ரசாயனப் பொருள்கள் உரவகைகள், மற்றும் பொருள்கள், சம்பந்தமான வர்த்தக விசாரணைகள் யாவும் எமக்கு நேரடியாகவே, அங்கீகாரம் பெற்ற, எமது விற்பனைப் பிரதிநிதிகள் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

## ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

பரந்துபட்ட வகையான விவசாய ரசாயனப் பொருள்கள், கிருமிநாசனிகள், களைநாசனிகள், தெளிகருவிகள், தூவு கருவிகள், உரவகைகள் ஆகியவற்றை அதிசிக்கனமான விலைக்குப் பெறக்கூடிய ஸ்தாபனம்.

5, மேல் ... வீதி, த. பெ. 11, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில்

'யாழ்ப்பாணம்' என்று கூறும்போது, இலங்கையின் ஏனைய பகுதி மக்களுக்கு, இரு பொருட்கள் கண்முன் நிற்கும். அவை பனைமரமும், அதனோடு சம்பந்தப்பட்ட பொருட்களும், 'சுருட்டு'மாம். அவ்வளவு தூரம் யாழ்ப்பாணக்குடா நாட்டின் சுருட்டு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதனால்தான் யாழ்ப்பாணக் குடா நாட்டின் அதி முக்கியமான கைத்தொழிலாகச் சுருட்டுக் கைத்தொழில் இயங்கி வருகின்றது.

இலங்கையில் சுருட்டுக் கைத்தொழிலிற்குப் புகழ் பெற்ற ஒரே பிரதேசமும், சுருட்டுக் கைத்தொழிலின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றியிருப்பதும் யாழ்ப்பாணக்குடா நாடு என்பது மறுக்கமுடியாததோர் உண்மை. சுமார் ஒரு நூற்றாண்டாக, ஏறத்தாழ 90 ஆண்டுகளாக யாழ்ப்பாணக்குடா நாட்டின் பிரதானமான கைத்தொழிலாக இது இயங்கி வருகின்றது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், நூற்றுக்கணக்கான சுருட்டுக் கொட்டில்களும் இதற்குச் சாட்சியாகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சுருட்டிற்கு, இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் நுகர்ச்சியாளர்கள் இருக்கின்றனர்.

## தமிழர்களின் தேசியத் தொழில்

சுருட்டுக் கைத்தொழில் தமிழ் மக்களுக்கே உரித்தானதாகக் காணப்படுகின்றது; அதுவும் முக்கியமாக யாழ்ப்பாணத் தமிழர்களின் ஏகபோக உரிமையாகவும், அவர்தம் தேசியத் தொழிலாகவும் உள்ளது. யாழ்ப்பாணக்குடா நாட்டில்தான் முதன்முதல் சுருட்டுக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டதாகையினால், இங்கு திறமையும், நுட்பமும், தேர்ச்சியும் பெற்ற பெருந்தொகையான தொழிலாளர்களுள்ளனர்; அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த உற்பத்தியாளர்களுமுள்ளனர்.

சுருட்டுக் கைத்தொழிலின் முக்கிய மூலப்பொருளான புகையிலையின் பாவனையை இலங்கை மக்கள் முதன் முதலறிய நேர்ந்தது, ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பே எனலாம். ஐரோப்பியர் சுங்கான்புகைக்கும் பழக்கத்தினர்; அவர்கள் புகையிலையைத் தூளாக்கிச் சுங்கானில் வைத்துப் புகைத்தனர். இடை வெப்பப்பகுதிகளிலிருந்து வந்த ஐரோப்பியருக்குப் புகைப்பது, குளிரைப் போக்குவதற்கு இன்றியமையாது இருந்ததுபோல, அயனப்பிரதேச இலங்கை மக்களுக்குப் புகைப்பது தேவையற்றதாக இருந்தது. ஆனால், ஐரோப்பியர் இலங்கைக்கு வந்ததன்பின்பும், அவர்களால் சுங்கான்புகைக்கும் பழக்கத்தைக் கைவிட முடியவில்லை, அவர்களது பழக்கம் இலங்கை மக்களையும் காலப்போக்கில் பற்றிக்கொண்டது.

## சுருட்டின் வரலாறு

ஆனால், இங்கு ஒன்றைக் கூறுவது மிக அத்தியாவசியமென நினைக்கின்றேன். ஐரோப்பியரின் வருகைக்கு முன்பும் இங்கு 'புகையிலை' இருந்திருக்கிறது; பலரால் புகைக்கவும் பட்டிருக்கிறது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளுள்ளன. ஆனால், வரலாற்றுக்காலப்புகைக்கப்பட்ட இலை இன்று 'ருபாக்கோ (Tobaco) என ஆங்கிலத்தில் கூறப்படும் புகையிலையன்று. ஈழத்து மன்னர்களும், முக்கிய அரசப் பிரதிநிதிகளும் 'கஞ்சா' எனும் போதை தரும் இலையைப் புகைத்திருக்கின்றனர். கி. பி. 412ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த புகழ்மிக்க யாத்திரிகரான பாகியான் என்பார், இலங்கை மன்னன் (புத்ததாசன்) 'கஞ்சா'வைப் புகைத்தான் என்று எழுதி வைத்துள்ளார்.

'கஞ்சா' எனும் அக்காலப் புகையிலை அதிகபோதையும், வெறியும் தருவதாக இருந்ததால் சாதாரண மக்கள் அதனை உபயோகியாது ஒதுக்கினர். இன்றும் கஞ்சா குடிவகைகளுள் வைத்து எண்ணப்படுகின்றது. அரசாங்கமும் தடை விதித்துள்ளது. அதனால், ஐரோப்பியரின் வருகைக்குப் பின் புகையிலை பெற்ற முக்கியத்துவத்தைக் கஞ்சா பெறமுடியாது போனது.

ஐரோப்பியர் புகையிலைப் பயிர்ச் செய்கையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். இப் புகையிலை எவ்வாறு இன்றைய சுருட்டின் வடிவத்தைப் பெற்றது என்பது நல்லதோர் கேள்வி. சுங்கான் என்ற பொருள் சுருட்டின் வடிவத்திலிருந்ததால், புகையிலையை புகைக்க விரும்பிய இலங்கை மக்கள், புகையிலையைச் சுங்கானைப் போலச் சுருட்டிப் புகைத்திருக்கலாம். மேலும் எல்லாருக்கும் சுங்கானைப் பெறுகின்ற வசதியுமில்லாதிருந்திருக்கலாம். அதனால், சுங்கானின்றிச் சுருட்டிப் புகைப்பது தவிர்க்க முடியாதது.

## முதற் தொழில்

சுருட்டின் பாவனையைக் கண்டறிந்து முதன் முதல் பயன்படுத்தியவர்கள் தமிழர்கள் என்பதில் சந்தேகமேயில்லை; ஏனெனில்; இன்று இலங்கையின் சுருட்டுக் கைத்தொழில் 99.9 வீதம் தமிழர்கள் கைகளிலேயே தங்கியிருக்கின்றது என்க. சுருட்டு உற்பத்தியாளர்களில் பெருந்தொகையானவர்கள் இன்று தமிழர்களாக இருப்பது போல, சுருட்டுப் பாவனையாளர்களில் பெருந்தொகையானவர்கள் சிங்கள மக்களாக (60 வீதப்) உள்ளனர்.

க. குணராஜா, பி.ஏ. (ஆனர்சு)
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.


சுருட்டுக் கைத் தொழில் இன்று யாழ்ப்பாணக் குடா நாட்டின் வருமானந் தரும் ஒரு தொழிலாக உள்ளது. 200க்கு மேற்பட்ட சுருட்டுக் கொட்டில்களில் (இவற்றில் குறைந்தது 75 தொழிற்சாலைகள் (Factories) என்றும் கூறலாம்) இத் தொழில் நடைபெற்று வருகிறது; 3000துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டுக் கைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 43 கோடி சுருட்டுகள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் வருடா வருடம் உற்பத்தி செய்யப்பட்டு, இலங்கை மக்களால் உபயோகிக்கப்படுகின்றன. இதனால்; யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வருடா வருடம் ஏறத்தாழ 70 இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கின்றது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இக்கைத் தொழிலையே நம்பி வாழ்கின்றன. அதுமட்டுமன்றி, இலங்கையில் விளைவிக்கப்படும் புகையிலையில் கிட்டத்தட்ட 70 விதம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெறும் இக்கைத் தொழிலிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவையாவும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத் தொழிலிற்குள்ள முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

இன்று யாழ்ப்பாணக் குடாநாடு பல துறைகளிலும் எவ்வளவோ முன்னேறியுள்ளது; எத்தனையோ வகையான சிறியளவுக் கைத் தொழில்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. எனினும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதன் முதல் ஆரம்பித்து இயங்கி வரும் கைத் தொழில், 3000க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்துள்ள கைத் தொழில், என்ற பெருமை சுருட்டுக் கைத்தொழில் ஒன்றிற்கே யுண்டு,

(அடுத்த இதழில்: யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக் கொட்டில்கள் எத்தனை? அவை எங்கெங்கு பரம்பியுள்ளன? ஒவ்வொரு கொட்டில்களிலும் எத்தனை தொழிலாளர்கள்? உற்பத்தி எவ்வளவு?—இன்னோரன்ன விடயங்கள் விளக்கப்படங்களுடன் ஆராயப்படுகின்றது)

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், வினியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 7651

## தமிழரசுத் தந்தையை கேளுங்கள்

சுதந்திரன் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் கூற தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் முன் வந்துள்ளார். தமிழரசுக் கட்சியின் நிலை பற்றியும், இன்றைய அரசியற் சூழ் நிலை பற்றியும் வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதில் கூறுவார்.

வாசகர்கள் தங்கள் கேள்விகளைத் தெளிவாகவும், ஒவ்வொரு சொல்லுக்கு மிடையில் நிறைய இடையிடு விட்டும் எழுதி அனுப்ப வேண்டும்.

கேள்வி கேட்பவர் தனது பெயரையும், முகவரியையும் தெளிவாக எழுதுவதுடன், தபால் அட்டையில் மட்டுமே இக் கேள்விகளை எழுதி அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனைகேள்விகளையும் கேட்கலாம், ஆனால் ஒவ்வொரு கேள்வியும் தனித்தனித் தபால் அட்டையில் எழுதி அனுப்பப்படல் வேண்டும்.

இத் திங்கள் 14-ம் நாள் செவ்வாய்க்கிழமை வரை வாசகர்கள் தங்கள் கேள்விகளை எழுதி அனுப்பலாம். அதற்குப்பின்னர்வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

இத் தொடரில் தமிழரசுத் தந்தை அவர்களை அடுத்து தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறுவார்.

'தமிழரசுத் தந்தையை கேளுங்கள்'
மே/பா. சுதந்திரன்
த. பெ. எண். 1183,
கொழும்பு.

இம்முகவரியை ஒட்டி அனுப்பும் தபால் அட்டைகள் மட்டுமே கவனத்துக்கு எடுக்கப்படும். ஏனையவை நிராகரிக்கப்படும்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி 1ம் திகதி முதல்

# எல்லா அலுவல்களும் சிங்களத்தில்

## 'உத்தியோக மொழி பாதுகாப்பு தொழிற் சங்க முன்னணி' ஆரம்பிக்கவிருக்கும் இயக்கம்

**"அன்னிய மொழி"யால் நடத்தப்படும் எல்லாவித அலுவல்களையும் அடுத்த ஜனவரி முதலாந் திகதியிலிருந்து பகிஷ்கரிப்பதற்கு உத்தியோக மொழிப் பாதுகாப்புத் தொழிற் சங்க முன்னணி தீர்மானித்துள்ளது. இந்த முடிவுக்கேற்ப 1.1.1966 முதல் அரசாங்கத் திணைக்களங்கள் அனைத்திலும் எல்லா அலுவல்களையும் சிங்களத்தில் மட்டும் நடத்த அவர்கள் முடிவு செய்துள்ளனர்". இவ்வாறு ஒரு செய்தியை "ஜனதின" (27-11-65) வெளியிட்டுள்ளது.**

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"முன்னாள் அரசாங்கம் உத்தியோக மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகச் செய்த முடிவுகளையெல்லாம் இரத்துச் செய்வதற்காகப் புதிய அரசாங்கத்தின் மந்திரி சபை தீர்மானித்திருப்பதைக் கண்டித்து நாடு முழுவதும் ஆரம்பிக்கவிருக்கும் இந்த அன்னிய மொழிப் பகிஷ்காரத்திற்குச் சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் முன்னணி திட்டமிட்டுள்ளது.

சிங்கள மொழிக்குத் துரோகம் செய்யும் நாசகாரிகள் சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவதற்கெதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக இந்த அரசாங்கம் சிங்களவர்களின் உரிமைகளை மறந்துவிட்டு அன்னிய மொழியில் அலுவல்களைச் செய்வதற்கு முயற்சி செய்வதாகக் கூறும் முன்னணி, உத்தியோக மொழி தெரியாதவர்களுக்குப் பதவி உயர்ச்சியும் சம்பள உயர்வும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருப்பதாகக் கூறுகிறது".

## 'அரசாங்கம் நாங்கள் கூறுவதைக் கேட்பதில்லை'

### —மகா நாயக்கதேரோ

'இந்த அரசாங்கம் பௌத்தரல்லாதோருக்கும், வெளிநாட்டாருக்குமே நன்மை செய்கிறது. நாங்கள் சொல்வது எதற்கும் இந்த அரசாங்கம் செவிசாய்ப்பதில்லை. புதிதாக நியமனம் செய்யப்பட்ட 9 அரசாங்க அதிபர்களில் 7 பேர் கத்தோலிக்கர்கள். கண்டி சுகாதார அதிபர் பதவிக்கு ஜேசுதாசன் என்னும் கத்தோலிக்க அன்னியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் நீங்கள் கூறியதைக்கேட்டு நாடும் நாங்களும் ஏமாந்தோம். எனக்குத் தொந்தரவு கொடுக்காமல் வேறு வேலையிருந்தால் போய்ச்செய்யுங்கள்' என்று மல்வத்தை ராஜகுருவண. விபஸ்ஸி மகா நாயக்கதேரோ தன்னிடம் ஓர் அறிக்கையில் கையெழுத்து வாங்க வந்த மகாசங்கப் பெரமுன பிரதிநிதிகளிடம் கூறியதாக ஜனதின (30-11-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தி மேலும் கூறுவதாவது :-

'டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தம்பற்றி மகா நாயக்க தேரோ ஏற்கனவே இட்டது. சாரிப் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அரசாங்கத்தின் மானத்தைப் பாதுகாப்பதற்காக ஒப்பந்தம் பற்றி ஓர் அறிக்கையில் அவரது கையொப்பத்தை வாங்குவதற்காக மிட்டியாகொட குணரத்ன தேரோ உட்பட நான்கு பிக்குகள் அவரிடம் சென்றிருந்தனர். ஐந்து மணிநேரமாக அவர்களைத் திட்டி, பின்னர் விரட்டி விட்டார் மகா நாயக்க தேரோ.

ஒப்பந்தம் பற்றி விளக்குவதற்கு வண. குணரத்ன தேரோ முயற்சி செய்த போது, 'அம்மையாரின் ஆட்சிகாலத்திலே இம்மாதிரி யெல்லாம் நடந்ததில்லை. நீங்கள் எனக்கு போதனை செய்ய வரவேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும்' என்று மகா நாயக்க தேரோ பதிலளித்தார்.

அவர் ஒப்பந்தம் சம்பந்தமாக பிரதமரைச் சந்தித்துப் பேசுவதென முடிவு செய்துள்ளார்.'

### தமிழரசுத் தலையிட்டால் பரீட்சை ரத்து

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்தின் விசேட வேண்டுகோளின் மீது யு. என் பி—தமிழரசு மந்திரிசபையால் அடுத்த மாதம் நடைபெறவிருந்த புகையிரத சேவை லிகிதர்கள் பதவி உயர்வுப் பரீட்சை ரத்து செய்யப்பட்டது.

இந்தப் பரீட்சை எழுத 89 சிங்கள லிகிதர்களும் ஒரு தமிழ் லிகிதரும் தகுதி பெற்றிருந்தனர். இக்காரணத்தின் மீது, தமிழரசுத் தலைவர் பிரதம மந்திரிக்கும், போக்குவரத்து மந்திரிக்கும் வேண்டுகோள் விடுத்ததால் பரீட்சை கைவிடப்பட்டது"

-'ஜனசத்திய' (28-11-65)

## சிங்கள இதழ்களில் . . .

### "தமிழில் இருந்தால் தண்டனை"

'அரசாங்கக் கடிதங்கள் சிங்களத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். சில நாசவேலைக்காரர்கள் இதற்கு முன்பு சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதங்களை இப்பொழுது தமிழிலும், ஆங்கிலத்திலும் அனுப்புவதால், அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க அரசாங்கம் தயாராகிறது.

அரசாங்கத்தின் இந்த முடிவுக்கேற்ப தண்டனை விதிப்பது பற்றிய சுற்று நிருபம் ஒன்றைத் திறைசேரி எல்லா இலாகா அதிபர்களுக்கும் அனுப்பி இருக்கிறது.

அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகளின் அனுமதியின்றி சிங்கள—எதிர்ப்பு நடவடிக்கைகளில், ஈடுபட்டுள்ள சாதாரண அதிகாரிகள் யாரென்பதைக் கண்டுபிடிக்க உயர்தர அதிகாரிகள் விசேட சிரத்தைகொண்டிருப்பதாக அறியப்படுகிறது".

—சவஸ (29-11-65)

### தமிழ் மொழி— பெயர்ப்பாளர்கள்

'டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கிணங்க தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழ் மொழியில் தொடர்பு கொள்வதால் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் அரசாங்கத்துக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றனர். எனவே எதுவித பரீட்சையுமின்றி தமிழ்மொழி பெயர்ப்பாளர்களுக்கு நியமனம் வழங்கத் திறைசேரி பொது சேவா கமிஷனிடமிருந்து அனுமதி பெறுமெனத் தெரிகிறது'

—ஜனதின [30-11-65]

### அதுபோலி பிரச்சாரம்

'டட்லி—செல்வநாயகம் ஒப்பந்தம் ஒன்று உண்டென எதிர்க்கட்சிகள் செய்யும் பிரசாரம் முழுவதும் பொய்யானதென்றும் அத்தகைய ஒரு ஒப்பந்தத்தில் தேசிய அரசாங்கத்தின் தலைவர் என்றுமே கையொப்பமிடவில்லையென்றும் மக்கந்துரயில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ராஜ்ய மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன கூறினார். 1956-ம ஆண்டு தொடடு தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்வரை உத்தியோக மொழிச்சட்டத்தை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சரிவர அமுல் நடத்தத் தவறிவிட்டார்களெனினும், தேசிய அரசாங்கம் வந்த பின்னர் அந்தச் சட்டம், அவ்விரு பகுதிகளிலும் சரிவர அமுல் நடைபெற்றிருக்கிறதென்றும், அதற்காக இந்நாட்டு மக்கள் தேசிய அரசாங்கத்துக்கு நன்றி கூறவேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்'

—லங்காதீப்ப (29-11-65)

### 'ஒப்பந்தம் உண்டு'

'யு. என். பி.— தமிழரக் கட்சிகளிடையே ஓர் ஒப்பந்தம் உண்டெனத் தமிழரசுவாதிகள் தமிழ் மக்களுக்கு அறிவித்துள்ளனர். இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக சிங்கள மக்களிடையே கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென தமிழரசுவாதிகள் 'சுதந்திரன்' மூலம் 28-11-65ந் திகதி தமிழ் மக்களை எச்சரித்துள்ளனர்.

தமிழரசுவாதிகளின் 'சுதந்திரன்' ஒப்பந்தத்துக்குச் சாதகமாகத் தமிழ் மக்களிடையே ஒரு பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கி, விரைவாக ஒப்பந்தத்தை அமுல் படுத்த முயற்சி செய்கிறது'

—ஜனதின (30-11-65)

### ஒப்பந்தம் உண்டு என்கிறார் டாக்டர்

'யு. என். பிக்கும், தமிழரசுக்கட்சிக்கு மிடையே ஒப்பந்தம் உண்டென்றும், அதன் நான்கு சரத்துகளும் உண்மையென்றும் டாக்டர் ஈ எம். வி. நாகநாதன் நேற்று ஏற்றுக்கொண்டார்.

யு என். பி. யும் பத்திரிகைகளும் அத்தகைய ஒப்பந்தமொன்று கிடையாதென பிரசாரம் செய்தாலும் கூட 'எத்த' நிருபர் ஒருவர் நேற்று டாக்டர் நாகனுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டபோது நேற்றுமுன் தினம் 'ஜனசத்திய' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒப்பந்தம் உண்மைதானென்று அவர் ஒப்புக்கொண்டார்.

இந்த டெலிபோன் சம்பாஷணை நேற்று காலை 9.30க்கு நடைபெற்றது. இதோ சம்பாஷணை:-

'எத்த' நிருபர்:- டாக்டர் அவர்களே, நேற்று 'ஜனசத்திய' பத்திரிகை வெளியிட்ட யு. என். பி.— தமிழரசு ஒப்பந்தம் உண்மையா?

டாக்டர் நாகநாதன்:- ஆம் உண்மைதான்.

(13-ம் பக்கம் பார்க்க)


### மற்றொரு ஸ்தாபனம் உதயம்

'இன்று இலங்கையர் பற்றி பேசுகிறார்களே தவிர சிங்களவர் பற்றி பேசும் தலைவர்கள் யாரும் இருப்பதாகத்தெரியவில்லை. இலங்கையர் என்ற ஓர் இனமோ, அந்த இனத்துக்கு ஒரு மொழியோ கலாசாரமோ கிடையாது. சிங்களப் பௌத்தர்களை எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றிக்கொள்ளலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்' என்று, கொம்பனித்தெருவில் குணவர்தனாராம பௌத்தாலயத்தில் நடைபெற்ற 'சிங்கள மகாஜன சபை' அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய மாதாலே சிறிலங்கா வித்தியாலய உதவி அதிபர் வண. மாத்தளை சாசன திலக்க தேரோ கூறினார்.

சிங்கள பௌத்தர்களின் தேசிய சமய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், ஏழைமக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் இப்புதிய ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

—லங்காதீப்ப (30-11-65)


# ஆனந்தா லேகியம்




இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிபேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்!

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிபாவி... நீயா?

'அன்புள்ள.........

இத்துடன் தாங்கள் பஸ் வண்டியில் தவறவிட்டுப் போன 'பக்கத்து வீடு' என்ற புத்தகத்தையும் அனுப்பியுள்ளேன். அதிர்ஷ்ட வசமாக இதை நான் கண்டெடுத்து ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டு அட்டையில் எழுதியிருந்த தங்களது விலாசத்திற்கே அனுப்பியுள்ளேன். இவ்வுதவியைச்செய்த எனக்கு நீங்கள் கட்டாயம் ஏதாவது பரிசு தரவேண்டும் நாளை மாலை நான்கு மணிக்கு வீட்டில் சந்திக்கவும். அப்போது தான் அம்மா அப்பா எல்லோரும் வெளியே போய் விடுவர். மிட்டாய் என்றால் எனக்கு தேவாமிர்தம்போலிருக்கும்.

இப்படிக்கு,

சசிகலா.

கடிதத்தைப்படித்து முடிந்ததும் எனக்குத் தலைகால் புரியவில்லை. மறுபடியும் படித்துப் பார்த்தேன். மேலும் படிக்கவேண்டும் போலிருந்தது. எழுதியிருந்த விடயத்தைவிட அடியிலிருந்த பெயரே மிகவும் பிடித்து விட்டது. 'சசிகலா' என்ன அழகான பெயர். ஆயிரம் தடவை சொன்னாலும் அலுக்காதே. பெயரே இப்படியானால் பெயருக் குரியவள் எப்படி இருப்பாள்?

பஸ்ஸில் எனக்குப் பின்புறமாக விருந்த அந்த அழகியே தான் சசிகலா. சந்தேகமில்லை. கன்னியரின் கடைக்கண் வீச்சுக்காக காலமெல்லாம் தவம் புரியும் காளையர் மலிந்த இக்கலியுகத்தில் எனக்குத் தானாக இப்படி ஒரு சந்தர்ப்பங்கிடைத்தால் நான் பூரிப்படையமாட்டேனா? அதுவும் நாளைக்கே முதல் சந்திப்பு. என்ன அதிர்ஷ்டம்!



என் மகிழ்ச்சி எல்லை மீறியது. எடிதத்தை கடுத்துக ஒண்ணில் கற்றிக் கொண்டேன். உடனே கடைக்குச் சென்று விலை உயர்ந்த மிட்டாய் டின் ஒன்றுடன் திரும்பி வந்தேன். அதன்பிறகு மறுநாள் மாலை மூன்று மணிவரைகழிந்த ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு யுகமாகவே கழித்தது.

மறுநாள் சரியாக மூன்று மணிக்கு சர்வாலங்காரங்களுடனும் விலை உயர்ந்த மிட்டாய் டின்னுடனும் கடிதத்தில் குறிப்பிட்ட விலாசத்திற்கு சசிகலாவைச் சந்திக்கப்புறப்பட்டேன். எனது மனம் இன்பக்கோட்டைகள் கட்டுவதில் ஈடுபட்டது. சிறிது நேர அலைச்சலின் பின் தான் வீட்டைக் கண்டு பிடிக்க முடிந்தது. வீட்டினுள் நுழைந்தேன்.

முன் அறையில் ஒரு சிறுமி உட்கார்ந்தவாறே பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் 'அடடே வந்துவிட்டீர்களா மாமா' என்று வரவேற்றாள்.

'நான் வருவது உனக்கும் தெரியுமா? எங்கே உன் அக்காள் உள்ளே இருக்கிறாளா?' என்றேன் ஆவலுடன்.

'என்ன மாமா எனக்கு அக்காவே இல்லையே. நான்தான் புத்தகமும் கடிதமும் அனுப்பினேன். ஏன் திகைக்கிறீர்கள்?' என்றபடியே எனது கையிலிருந்து விழப்போன மிட்டாய் டின்னைப் பாய்ந்து வந்து பிடித்துக் கொண்டாள்.

'அடப்பாவி நீயா அது? அப்படியானால் ஏன் தனியே சந்திக்கச்சொன்னாய்?' என்று கோபத்துடன் சீறினேன்.

'அதுவா......அது. வந்து.... மிட்டாய் சாப்பிடக்கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அம்மா, அப்பா, இருந்தால் ஏசுவாங்கன்னு தான் அப்படி எழுதினேன். ஏன் மாமா சொல்லாமலே போறீங்க' என்றவாறே என்னைப்பின் தொடர்ந்தாள்..............

—'இளமதி'



# மங்கையர் சங்கம்

## கருத்துமேடை

# தமிழ்ப் பண்பு பாழாகாதிருக்க வழி தேட வேண்டும்

### திரையிலும் சுவரிலும் ஆபாசம் [8]

ஆபாச சினிமா ஆபத்தானதா? என்ற கேள்வி எழும்போது இதற்குச் சார்பானதாகவும் பாதகமாகவும் ஆராயக் கூடியதாயுள்ளது. எனினும் தமிழ் பண்பாட்டைப்பொறுத்தவரை-தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆபாச சினிமா என்ற நாமமே கருத்தில் கொள்வது வெறுக்கத்தக்கது.

அடக்கமான அமைதியான சிறந்த கலாச்சாரப் பண்பாடுகளைக் கொண்டு திகழும் தமிழ் உலகம் எக்காலத்திலாவது ஆபாச சினிமாவை வரவேற்று அதற்கு முக்கியத்துவம் அளிக்குமென்றால் அது தமிழ் அன்னைக்கு நாம் செய்யும் துரோகச் செயல்களில் ஒன்றாகவே இருக்கும். ஆனால் எக்காலத்தும் எவ்விடத்தும் இவ்வாறான தீய செயல்களில் தமிழ்ப் பெருமக்கள் ஈடுபடமாட்டார்கள் என்பது திண்ணம்.

இன்று பெரும்பாலோர் தம பொழுது போக்குகளில் ஆபாச சினிமாவைக் கண்டு களிப்பதையும் ஒரு முக்கிய பகுதியாகக் கொண்டுள்ளனர். வயது வந்தவர்கள், இல்லற வாழ்க்கையில்

**செல்வி வே. யோகலட்சுமி**
காரைநகர்

இடைக் கட்டத்தை அடைந்தவர்கள், இவ்வாறான சினிமா பார்ப்பதனால் அதிக வேண்டத்தகாத உணர்ச்சி பேதங்களுக்கு ஆளாகி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்கமாட்டார்கள். ஆனால் இளங் காளையர்கள், இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கப் போகும் கட்டத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பவர்கள் இவ்வாறான சினிமாவைப் பார்ப்பதனால் அவர்

(14-ம் பக்கம் பார்க்க)

### கடந்த வாரக் கதைப்புதிருக்கு விடை

கிருபாகரன் ஒரு எழுத்தாளன். அவனுடைய சிறுகதைகள், நாவல்கள் யாவும்பிரசித்தமானவை. மிகவும் மென்மையான இளகிய மனம் படைத்த கிருபாகரன் தான் சிருஷ்டிக்கும் கதா பாத்திரங்களுடன் ஒன்றி விடுவான். அவன் எழுதும் கதைகளில் வரும் கதா பாத்திரங்களின் கருத்துக்களுடன் தன்கருத்தையும் இணைத்துவிட்டு அவற்றின் உணர்ச்சிகளுக்கேற்ப தானும் உணர்ச்சி வசப்படுவது அவனுடைய இயல்பு.

கிருபாகரனின் புதிய நாவலில் ராஜு தான் கதாநாயகன். கதையை எப்படிமுடிப்பது என்பதில் கடுமையாகச் சிந்தித்து, இறுதியில் கதாநாயகனைத் தீர்த்துக் கட்டி விட்டான். அம்முடிவை எண்ணி எண்ணி அவனே கலங்கி விட்டான். அவனுடைய துன்பத்துக்குக் காரணத்தை நொடிப்பொழுதில் உணர்ந்துவிட்ட அவன் மனைவி கருணை சிரிக்காமல்அழவா செய்வாள்?

—விஜயா

# அடக்கம் தேவையா, உரிமை தேவையா?

கேள்வி 1.

அக்கா, பழங்காலப் பெண்களைப் போல் அடங்கி நடப்பது நல்லதா? இக்காலப் பெண்களைப் போல் உரிமை உணர்ச்சியோடு வாழ்வது நல்லதா? என்ற கேள்விக்கு அடங்கியும் நடக்கவேண்டும்,உரிமையோடும் வாழவேண்டும் என்பீர்கள். ஏன்?எதற்காக? எப்படி?

மை. பரகதம்,
இறக்குவானை.

பழமையில்லாத புதுமையுமில்லை. புதுமையில்லாத பழமையும் இல்லை. நமது பண்டையப் பண்பாட்டையும் நாகரீகத்தையும் ஆராய்ந்தறிந்து சிறந்தவற்றையேற்று நமது வாழ்க்கையில்தேவைக் களவு கடைப்பிடிப்பதே நல்லது.

பெண்களுக்கு அடக்கம் அணிகலன். உரிமை வேட்கையும் அவசியம். ஆனால் அடக்கத்துடன் கூடிய உரிமை வேட்கையே நமது பண்புக்கு ஏற்றது. தலைகால் புரியாத நாகரீகத்தைப் பின்பற்றுவதைவிட தகுந்த பாரம்பரியமுடைய பண்பாட்டை ஒட்டி வாழுவது சிறந்ததல்லவா?

கேள்வி 2.

நான் ஒருவரை மனமாரக் காதலிக்கின்றேன். அவரும் என்னை மனம் விட்டுக் காதலிக்கிறார். ஆனால் என் மீது வீணாகச் சந்தேகப் கொள்கிறார். எதற்கெடுத்தாலும் என்னைக் கடிந்து கொள்கிறார். அன்பாகப் பழகினாலும் அதைப் புரிந்து கொள்ளும் தன்மையை அவரிடம் காணவில்லை. என்ன செய்லாம் என்று சொல்லுங்கள்அக்கா?

'ஞானம்'
மட்டுநகர்.

உள்ளன் போடு காதலிப்பவருக்கு வீணான சந்தேகம் ஏற்படக்காரணம் ஏதாவது இருக்கலாம். முன்பே அவர் வேறு ஒருத்தியை நம்பி மோசம் போயிருக்கலாம். அதனால் எல்லோரிடத்தும் சந்தேகப்படலாம். அவருக்கு எள்ளளவும் சந்தேகம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம், காதல் ஈடேற வேண்டுமானால் கருத்து ஒருமிப்பது முக்கியமானதாகும். அவருக்கு கோபம் வராதபடி, அவர் கருத்துக்கிசைய நடப்பதே புத்திசாலித்தனம். காரணமில்லாமல் கோபப்பட்டால் அவருடைய கருத்தில் ஏதாவது கோளாறு இருக்க வேண்டும் என்றே கருத முடிகிறது.

கேள்வி 3.

............கணவரிடமேகூறி அவருடைய ஆதரவையும் பெற்று மூவரும் அன்புடன் வாழ விரும்பும் எனக்கு ஒரு வழி கூறுங்கள்.

செ. சி.
கட்டுவன்.

பல சகோதரிகள் இத்தகைய சிக்கலான சூழ்நிலையில் சிக்கித் தவிப்பதை நான் அறிவேன். மேலை நாடுகளில் இந்நிலையிலுள்ளவர்கள் விவாகரத்துப் பெற்று இலகுவாக இன்பவாழ்வு தேடிக் கொள்ளுகின்றனர். பண்பாடு என்ற ஒன்றைத்தழுவி நிற்கும் நமது சமுதாய நிலை வேறல்லவா? விரும்பியபடி நடக்க எமக்குச் சுதந்திரமில்லை. இந்நிலையில்தான் நம்மவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்தி ஆத்மீகத்துறையில் ஈடுபடுவதற்கு மார்க்கங்களைக் கூறியிருக்கின்றனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

**செல்வி அக்காவிடம் சில கேள்விகள்**

சில கேள்விகள்
செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1188
கொழும்பு.





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

தந்தி:
தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்ட துறையெல்லாம் துலங்க வாழ்ந்த

# சேர். பொன். இராமநாதன்

**26-11-30** என்றுமே மறக்கமுடியாத துயர்தோய்ந்த நாள். ஈழத்து அரசியல வானில் இருள் கவ்விய நாளும் அன்றே. ஆம்! அன்றுதான் ஈழத்து அரசியல் உலகில் தன்நிகர் அற்ற தனிப்பெரும் தலைவராய் முடிசூடா மன்னனாய் விளங்கிய முதுபெரும் தலைவர் 'எக்காலத்திலும் தலைசிறந்த ஒருஇலங்கையர்' என்று காலம் சென்ற முதல் அமைச்சர் திரு டி. எஸ். சேனநாயக்காவால் வழுத்தி வாழ்த்தப்பட்ட சேர். பொன். இராமநாதன் தனது எண்பதாவது அகவையில் தன்வாழ்வை முடித்துக் கொண்டார். அவருக்கு இறுதிவணக்கம் செலுத்த ஈழத்தின் நாற்றிசையிலும் இருந்து இனமதம் கடந்த நிலையில் திரண்டிருந்த மக்கட்கூட்டம் அவர் பெற்றிருந்த ஒப்பற்ற நிலையை-மக்கள் அவர்பால் காட்டிய அளப்பெரிய அன்பை பாரினுக்கு பறைசாற்றியது.

### நெஞ்சில் நிலைத்துவிட்டார்

இப்பெருமகன் மறைந்து 35 ஆண்டுகள் ஆகுகின்றன. ஆண்டுகள் பல உருண்டோடியும் அவர் நினைவு எம் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது. அவரை நேரிற் காணுத—அவர் வாழ்ந்த காலத்தில் இவ்வுலகில் தோன்றுத எம்மனோர்க்கே அந்நிலையெனின் அவரோடு உரையாடி உறவுபூணும் பெரும்பேற்றினைப் பெற்று இன்னும் உயிரோடு வாழும் எம்முதியோரின் உள்ளத்தில் தோன்றும் இன்ப நினைவுகளுக்கு எல்லையில்லை என்றே கூறவேண்டும்.

சேர். பொன். இராமநாதன் ஆற்றிய பணிகள் பல துறைகளில் விரிவடைந்து கிடக்கிறது. அவர் தொடாத துறைகளில்லை. அவர் தொட்டுத் துலங்காத துறைகளுமில்லை. எனினும் பலரின் உள்ளத்தில் அவரின் அரசியற் பணிதான் தலைதூக்கி மிளிர்கிறது என்பதை யாம் மறப்பதற்கில்லை.

### அரைநூற்றுண்டு அரசியற்பணி

ஆதலால் அவரின் பல் துறைப்பணி பற்றி முதலிற் குறிப்பிட்டு இறுதியில் அவரின் அரசியற் பணிபற்றி குறிப்பாக ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அவர் ஆற்றிய அளப்பெரிய பணி பற்றி கூடியவரை விரிவாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். எனினும் இப்போதைக்கு நல்லைநகர் ஆறுமுக நாவலரின் ஆதரவோடு 1879-ம் ஆண்டில் இராமநாதனின் 28ம் அகவையில் தொடங்கிய அரசியல் வாழ்வு அவரின் எண்பதாவது அகவை வரை ஒளிவிட்டு விளங்கியதை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். வேறு சொற்களில் விளம்பின் ஈழத்து அரசியல் வரலாற்றை ஆராயும்போது அதனின் அரை நூற்றுண்டு வளர்ச்சி இராமநாதன் வாழ்வோடு இணைந்து பிணைந்து வளர்ந்திருப்பதை யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது.

### பேரறிவுமிக்க பேருரைகள்

சேர். பொன் இராமநாதனின் தமிழ்ப் புலமை, வடமொழி ஆற்றல், ஆங்கில அறிவு வியக்கத்தக்கது. மும்மொழியிலும் புலமை படைத்து உலகில் பலமொழிகளின் தன்மையை தகைசான்ற முறையில் உய்த்துணர்ந்த இம்மூதறிஞனை உலகம் வியந்து போற்றியதில் வியப்பில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் இவரின் பல்துறைஅறிவுமிக்க பேச்சுக்களைக் கேட்டு சிந்தை நிறைவு எய்திய மக்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. இதனுற்றுன் ரேஸ்பெரிதுரை அவர்கள் 'என்பேரரசின் தலைசிறந்து பேச்சாளர்' என்று கூறிச் சென்ருர் போலும்.

**ஈழவேந்தன்**

குறிப்பாக தென்னகத்திலும் ஈழத்திலும் இராமநாதன் அவர்கள் ஆற்றிய சமய மெய்ப்பொருட் (தத்துவ) சொற்பொழிவுகள் கற்றறிந்த நல் அறிஞர்க்கு நல் விருந்து. வேதாந்தத்தை விளக்கி சித்தாந்தத்தின் உட்பொருளைத் துலக்கி புத்த, கிறித்தவ, இசுலாமிய கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கி அவர் ஆற்றிய விரிவுரைகள் அவரின் பரந்த நுண் அறிவுத்திறனுக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டு.

மறைமலையடிகளாரை செயலாளராய்க் கொண்டு இயங்கிய சைவசித்தாந்த சமாசத்தில் 1906லும் பின்பு 1922லும் அதே சமாசத்தில் அவர் சித்தாந்தம் பற்றி நிகழ்த்திய பேருரைகள் அவரின் சிந்தை சித்தாந்தத்தில் மூழ்கியிருந்த தென்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் இராமநாதன் அவர்கள் ஓரிடத்தில் 'என் மார்க்கம் சைவமார்க்கம்' என்று செப்பிய கருத்துயாம் மேலே கூறிய கருத்தினை வலியுறுத்தி நிற்கும்.

### உலகிற்கு அளித்த உயர் நூல்கள்

அவர் பேச்சுக்கள் பல வெறும் காற்றோடு கலந்து பொய்யாப் பழங்கதையாய் மாது மெய்யாய் அவர் புகழ் நிலமிசை நீடுவாழும் தன்மையுடையன என்று கூறும்முறையில் அவர் வெளியிட்ட நூல்கள் சான்றுய் அமைந்து விளங்குகின்றன. அவர் வெளியிட்ட நூல்கள்.

மேற்கத்திய நாடுகளின் ஆன்மிகவளர்ச்சி, மேல் நாட்டு மாணவருக்கு கீழைத் தேய கொள்கைகளின் விளக்கம், கிறித்துவின் மாணவராகிய தூயமத்தியு, தூயயோன் எழுதிய சிறிப்புச்செய்திகளுக்த (சுவிசேடங்களுக்கு( உரைவிளக்கம். பகவத்கீதை விரிவுரை, செந்தமிழ் இலக்கணம், 1915 இனக்கலவரமும் இராணுவச்சட்டமும் ஆகியவை குறிப்பிடத்தக்கவை எனினும் எம் தீவினைப் பயனுல் அவரின் நூல்கள் பல கிடைத்தற்கரிய முறையில் செல்லரித்த நிலையில் நூல்கள் நிறம்மாறி தொட்டவுடன் கிழியும் நிலையில் உள்ளன. அவரின் நூல்களை புதியபதிப்பில் பொதுமக்கள் படித்துப்பயன்பெறும் வகையில் வெளிக்கொண்டுவருவதே அவருக்கு யாம் செய்யும் தலையாய கைம்மாறு. அறிவாற்றல் மிக்க தமிழ் அறிஞரும் பணம்படைத்த செல்வந்தரும் இப்பணியில் இணைந்து ஈடுபடுமாறு வேண்டுகிறேம்.

### அவரின் சட்டப்பணி

அவரின் பல்துறைப்பணியை முதலில் இங்கு சுருக்கிக் குறிப்பிடுவோம். சட்டப் படிப்பிற்குரிய அவையும் இலங்கை சட்டக்கல்லூரியும் தோன்றுவதற்கு இராமநாதன் ஆற்றிய பணியை யாம் எளிதில் மறக்கமுடியாது. இவரின் விடாமுயற்சியனுற்றுன் குற்றவியற் சட்ட, குடியியற் சட்ட நடைமுறை, கோவை யாக்கப்பட்டது. அத்துடன் 'புதிய சட்ட அறிக்கைகள்' என்ற சட்ட இதழின் முதல் ஆசிரியராகயிருந்து சட்டத்துறையில் அவர் ஆற்றிய பணி மிகப் பெரிது. இவற்றுடன் குடியியல் (சிவில்) சேவையில் இலங்கையரைப் பெருமளவிற் சேர்ப்பதற்கும், அஞ்சல் சேமிப்பு வங்கிகளைத் திறப்பதற்கும், இவர் ஆற்றிய பணியையும் யாம் எளிதில் மறக்கமுடியாது. சந்திரனை

(14-ம் பக்கம் பார்க்க)

# முகத்தில் தோன்றும் பெரிய பருக்கள்?

**உங்கள் நோய்**

எஸ். கணேசன்,
டயகம

கே: எனது வயது பத்தொன்பது. சுமார் ஒரு வருட காலமாக எனது முகத்தில் பெரிய பருக்களாக இருக்கின்றன. ஆங்கில வைத்தியம் செய்து யாது பலனும் இல்லை.

ப: உமது உணவு வகைகளை வரையறுத்துக் கொள்ளல் அவசியம். உணவில் மரக்கறி, கீரை வகைகள், பழவகைகள் நிறையச் சேர்க்க வேண்டும். மலபந்தம் இல்லாது தவிர்க்க இடைக்கிடை சிறுபேதி எடுக்கவும். பருக்களை கசக்குவதோ, கிள்ளுவதோ, உடைப்பதோ மகா தப்பான விஷயம். இம் மாதங்களுக்கேற்ப—தாளிசபத்திரி, கரும்பு வேர், அதிமதுரம், நாணல் வேர், தகரை வேர் ஆகிய இவற்றை சம எடைஎடுத்து நீர்விட்டு மெழுகு போல் அரைத்து இரவில் முகத்தில் பூசிக்கொள்ளவும், காலையில் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

இதை முறைப்படி ஒரிரு மாதம் செய்ய ஆச்சரியமான குணம் கிடைக்கும்.

வே. சண்முகநாதன்,
மொறகெனகம.

கே: எனதுவயது இருபத்து மூன்று. சில வருடங்களாக தலையில் சொடுகு இருக்கின்றது. முதலில் தேங்காய் எண்ணை பாவித்து இப்போ நல்லெண்ணெய் பாவிக்கின்றேன். ஆனுல் இன்னும் மாற வில்லை. தலையில் அரிப்பும் உண்டு. தகுந்த முறைகளைத் தரவும்.

ப: இது ஒரு தோலைப் பற்றிய வியாதி. தலை மயிரைச் சுத்தமாக வைத்திருக்காத படியினுல் ஒரு வகை கண்ணுக்குப் புலப்படாத நுண் கிருமிகள் காரணமாகவும் இருக்கலாம்.

வெண்மிளகை பாலில் அரைத்து தலைக்கு நன்கு தேய்த்து குளித்துவர சிறந்த பலனளிக்கும். ஆற்றிலோ குளத்திலோ குளிப்பது சிறந்தது. ஒரு போத்தல் நல்லெண்ணெயில் வேப்பம்பூ, சர்க்கரை 2 அவுன்ஸ் இட்டுக் காய்ச்சி வடித்து ஒரு போத்தலில் வைத்திருந்து காலையில் தேய்க்கவும். சிறந்த பலன் கிடைக்கும். உணவு வகையில் நிறையக் கீரை வகைகள் சேர்க்கவும்.

வ. வல்லிபுரம்
சுதுமலை

கே: மலங்கழியும் போது இரத்தம் வருகின்றது. மூளைகள் ஒன்றும் இல்லை. ஆலோசனை தரவும்.

ப: நீங்கள் கூறிய விபரங்களிலிருந்து இது பவுந்திர மூலமாக இருக்கலாம்.

உணவு முறையில் கவனமிருத்தல் வேண்டும். இலகுவில் சீரணமாகும் உணவுகளை மிதமாக அருந்தவும். உறைப்பு—புளிப்பு அதிகம் நன்றல்ல.

இன்னும், காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டைவேர், கொடிவேலி, நாயுருவி, கோட்டம், தேக்கு, சமஅளவு எடுத்து உலர்த்தி, இடித்து மவுடராக்கிப் பத்திரப்படுத்தி காலை மாலை தேக்கரண்டி அளவு சுடுநீரில்கலந்து உண்டுவரின் நித்திய குணம் கிடைக்கும். மலத்துவாரத்தில் 'குக்கில் வெண்ணை' தடவி வரல் நன்று.

து. பாலையா
நாகசேனை

கே: கடந்த நான்கு வருட காலங்களாக இரு கால்களிலும் கடுகளவு கொப்புளங்கள் சீழுடன் காணப்படுகின்றன. உடைக்க உடைக்க ... கொண்டிருக்கின்றது. ஆங்கில— ஆயுள்வேத கசாயம் குடித்தும் குணமில்லை. கெட்டபழக்க வழக்கங்கள் யாவும் கிடையாது. இதற்கு பரிகாரமே இல்லையா?

ப: ஏன் இல்லை? இது ஒரு தோலைப்பற்றிய வியாதி. கிருமிகளின் தொல்லைகளால் இது ஏற்படுகின்றது. இரத்தத்தில் மாற்றம் ஏற்பட இடமுண்டு.

எருக்கலம் வேர், ஆமணக்கம் வேர் பூதவிருக்கம், பீச்சுவிளாத்திவேர், எருமைமுல்லை வேர், கான்றை வேர், இவற்றை ஒருக்கம் பாலில் அரைத்துப் பூசக்குணமாகும்.

அத்துடன் நன்னாரிவேரை (கிழங்கிலுள்ள) காயவைத்து இடித்து வஸ்திரத்தில் அரித்து ஒரு புட்டியில் வைத்திருந்து அதில் ஒரு தேக்கரண்டியளவு காலை மாலை நெய்யில் உண்டுவரவும்.

கிழமைக் கொருதரம் ஒரு அவுன்ஸ் வேப்பெண்ணெய் குடிக்கவும். ஏறக்குறைய ஒரு மாதம் பாவிக்க நிச்சயம் குணம் கிடைக்கும்.

செ. சின்னத்துரை,
ஓமந்தை.

கே: எனது வயது 31. கிட்டத்தட்ட ஒன்றரை வருட காலமாக எனது முள்ளங்காலுக்கு மேலும், காதுப்புறத் ... ... டாக்டர்?

ப: நீங்கள் கூறுவதிலிருந்து உங்களுக்கு குஷ்டரோக ஆரம்பமாகவும் இருக்கலாம், அல்லது நரம்புப் பலவீனமாகவும் இருக்கலாம். இருந்தும் முதற்கூறியவற்றை கருத்தில் கொண்டு வைத்தியசாலைக்கு சென்று ஐயம் தீரப்பரீட்சித் தறிவதுமிக நன்றல்லவா?

த. தருமரெத்தினம்,
அம்பாறை

கே: நரம்புத் தளர்ச்சி இருவருட காலமாக உண்டு. வயது இருபது.

ப: இளமைக் காலத்தில் ஏற்படும் சில பல கெட்ட நினைவுகள் காரணமாக உம்மைப் போன்று ஏராளம் இளைஞர்கள் இதற்குப் பலியாகின்றுர்கள். என்னே பரிதாபம். பழக்க வழக்கங்களை சீரிய முறைகளாக்குவது நன்று. கெட்ட சகவாசங்களைத் தடை செய்யவும். ஒழுங்கான முறையில் நல்ல சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ளவும். உமது கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்கவும். மலசல ஒழுங்கு நியமப்படி செய்யவும். குளிர்ந்த நீரில் குளிக்கவும். தினசரி பசுப்பால் குடிக்கவும். தக்க பலன் கிடைக்கும்.

பாலன், மகறை

கே: எனது சக்தியை வீணுக்கப் பழகி விட்டதன் காரணமாக நான் மிகவும் பெலவீனமுகி விட்டேன். இதற்கு ஏதாவது தடுப்பு முறை கூறுங்கள்.

ப: நண்பர் தருமரெத்தினம் (அம்பாறை) அவர்களுக்குக் கூறிய வழிகளை கடைப்பிடிக்கவும்.

ஏ. ஆர். ஜினிபா உம்மா,
பண்டாரவளை

கே: என் மகளுக்கு வயது பன்னிரண்டு. சிறுவயதிலிருந்தே காது இரண்டிலுமிருந்து சீழ் வருகின்றது. எத்தனையோ வைத்தியர்களிடத்தும் சிகிச்சை செய்தும் குணமில்லை. இதைத் தடுப்பதற்கான ஆலோசனை தாருங்கள்.

ப: இதுஒரு உட்காதுத் தாபிதம். காதை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். வில்வ மரத்தின் வேரை ஒரு அடி நீளமுள்ளதாக எடுக்கவும். அதன் நுனியில் வேப்பெண்ணை நனைத்த சீலையை சுற்றிக் கொழுத்தும்போது, துளி துளியாக எண்ணெய் சிந்தும். இதை ஒரு போத்தலில் சேகரிக்கவும். இதில் 3, 4 துளிகளை இளஞ்சூடாக்கி காதில் விட்டுப் பஞ்சினுல் அடைத்து விடவும். பலன் கிடைக்கும்.

**குறிப்பு:-**

கேள்வி கேட்கும் நேயர்கள் தங்கள் வியாதிகளைப் பற்றித் தரும் விபரங்களுடன் வியாதியஸ்தர் ஆணு, பெண்ணு என்பதனையும் வயதையும் கூறுவதுடன் மணமானவரா அல்லவா என்பதனையும் கண்டிப்பாகத் தெரிவிப்பது முக்கியமானதாகும். இத்துடனுள்ள முகவரி துண்டைக் கத்தரித்து வினு அனுப்பும் உறையின் மேலோ அஞ்சலட்டையின் மேலோ ஒட்டி அனுப்ப மறக்க வேண்டாம்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 டிசம்பர் மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# வகுப்புவாத முன்னணி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தனக்கென ஒரு கட்சியை நிறுவிக் கொண்டுள்ளார். 'நாம் சிங்களவர் முன்னணி' என்பது அவரது கட்சியின் பெயர்.

திரு. ஆர். ஜி. என்றும் தமிழர்—எதிர்ப்பு மனப்பான்மையுள்ளவர். வகுப்புவாதக் கொள்கையில் பற்றுள்ளவர். அவரது தந்தையும் பெரிய சேனநாயக்காவின் தமையனுமான திரு. எப். ஆர். சேனநாயக்காவை சிங்கள மக்கள் இன்றும் தங்களின் தலைசிறந்த தலைவர்களிலொருவராகக் கருதுகின்றனர். தந்தை தீவிர தேசபக்தர். தனயனே தீவிர வகுப்புவாதி. தந்தையின் கொள்கைக்கு நேர் மாருன கொள்கையைத் தனயன் கடைப்பிடிக்கிருர். அண்மையில் அவரது வகுப்புவாதக் கொள்கை விபரீதமான—பயங்கரமான கட்டத்தை அடைந்து ஒரு ஸ்தாபனமாக உருவாகியுள்ளது.

தீவிர சிங்கள வகுப்பு வாதிகள் ஆர். ஜி. யின் முன்னணியில் சரணடைகின்றனர். தமிழர்—எதிர்ப்பு, இந்தியர்—எதிர்ப்பு உணர்ச்சியை சிங்களவர் மத்தியில் பரவலாக ஏற்படுத்துவதே இந்த முன்னணியின் நோக்கம். மலைநாட்டுப் பகுதியிலே இம் முன்னணி சிங்களவர் மத்தியில் தீவிரப் பிரசாரம் செய்வதாகச் செய்திகள் கூறுகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் மலையகத் தமிழ் மக்கள் பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரித்தனர். அதற்காக வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் அவர்களுக்கெதிராக மலைநாட்டுச் சிங்கள மக்களைத் திசை திருப்பி விடுவதே முன்னணியின் முயற்சி என்று தெரிகிறது.

ஆகவே இந்த முன்னணியால் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றே தோன்றுகிறது. 'டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம்' என்று அவர்களால் கூறப்படும் ஓர் ஒப்பந்தத்தை எதிர்த்துஇம்மாதம் 11ந்திகதி'நாம் சிங்களவர் முன்னணி' மலைநாட்டில் ஒரு கிளர்ச்சியைக் தொடங்க விருக்கிறதாம்.

இக்கிளர்ச்சி முற்றிலும் ஒரு வகுப்புவாதப் பிரசாரமாகும். இதனுல் மலையகத்திலே தமிழர்களுக் கெதிராகச் சிங்களவர் மத்தியில் ஒரு கொந்தளிப்பு ஏற்படக் கூடும். கொந்தளிப்பு ஏற்பட்டால் அதன் விளைவு பயங்கரமானதாக இருக்குமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. வகுப்புவாதத்தைத் தூண்டுவது எளிது—அதனுல் ஏற்படும் கொந்தளிப்பை அடக்குவது கடினம்.

கிளர்ச்சியின் மூலம் கொந்தளிப்பு—கொந்தளிப்பின் மூலம் இன, சமயக் கலவரம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த முன்னணி உருவாக்கப் பட்டுள்ளது. இரு இனங்களிடையே மட்டுமின்றி, இரு மதங்களிடையேயும் மோதலை ஏற்படுத்தினுல் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என எதிர்க்கட்சியினர் எண்ணுகின்றனர். இதற்காகப் பலவிதமான முயற்சிகளையும் கையாளுகின்றனர். அந்த முயற்சிகளிலொன்றுதான் 'நாம் சிங்களவர் முன்னணி'.

இந்த முயற்சிகள் நாட்டிலே இன, சமயக் கலவரங்களை ஏற்படுத்த உதவும் என்பதுஉண்மையே. ஆனுல்அக் கலவரங்கள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாமென்பது பகற்கனவே. தேசிய ஐக்கியத்தைக் குலைக்கவும், பொருளாதார அபிவிருத்தி வேலைகளை நாசமாக்கவும் அக் கலவரங்கள் உதவுமேயன்றி, எதிர்க்கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்ற பயன்பட முடியாது. ஆட்சியைக் கைப்பற்றும் ஆசை ஒரு புறமிருக்க, வகுப்புவாதத்தைத் தூண்டியவர்களே வகுப்பு வாதத்துக்குப் பலியாவார்கள். இது வரலாறு கற்பிக்கும் படிப்பினை ஆட்சிபீடமேற குறுக்குவழி வகுப்பவர்கள் நாட்டையும், மக்களையும் நாசமாக்க வழி தேடுகிறவர்களாவர். இத்தகைய நாசவேலைக்கும் ஜனநாயகத்தில் இடமிருக்கிறதா?

'நாம் தமிழர் இயக்கம்' இங்கு செயற்படுவதால் 'நாம் சிங்களவர் முன்னணி' அமைத்துள்ளோம் என்று கூறுகின்றனர். 'நாம் தமிழர் இயக்கம்' என்ற பெயரால் ஒரு ஸ்தாபனம் இந்நாட்டில் கிடையாது. சில சிங்களப் பத்திரிகைகள் சிருஷ்டித்த காகிதப்புலிதான் இது. இல்லாத ஒன்றுக்கு எதிராக மற்றென்றை நிறுவியுள்ளோம் என்று கூறுவது வெறும் பித்தலாட்டப் பிரசாரமாகும்.

ஆர். ஜி யின் வகுப்புவாத முன்னணிக்குப் பின்னல் சுதந்திரக் கட்சி நிற்கிறது என்பதை அனைவரும் அறிவர். 'நாசவேலை' போன்ற சிற்சில அம்சங்களைப் பொறுத்த வரையில் சுதந்திரக் கட்சி வகுப்புவாதக் கிளர்ச்சிகளில் நேரடியாகவும், வெளிப்படையாகவும் இறங்க முடியாதிருக்கலாம். அதனைச் செய்யவே இந்த முன்னணி தோன்றியுள்ளது. ஓர் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரியால் மலைநாட்டில் ஆங்காங்கு திரட்டப்பட்ட வகுப்புவாத சக்திகளும் முன்னணிக்குப் பக்கபலமாக இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதைப் போல அவர்களின் வகுப்புவாதக் கிளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் பொருட்டு டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் என்ற பெயரால் ஓர் ஒப்பந்த நகலையும் வெளியிட்டு கொண்டனர். இந்த 'ஒப்பந்தத்தின்' அடிப்படையிலே கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளனர்.

நாம் சிங்களவர் முன்னணிக்கும், ஆர். ஜி. [illegible]வர்களுக்கும், வகுப்புவாதப் பாதையே சோசலிஸப் பாதை என்று நம்புகிறவர்களுக்கும் நாம் ஒன்று கூறவிரும்புகிறோம்.

"நாட்டிலே அமைதியைக் கெடுத்து, இனத் துவேஷத்தையும் மதத் துவேசத்தையும் தூண்டிவிட்டு, மக்களை மக்களுடன் மோதவிட்டு ஆட்சியைக் கைப்பற்றலாமென்று கனவு காண வேண்டாம். இது ஓர் எதேச்சாதிகார பாஸிச முறை. இது ஜனநாயக நாடு. ஜனநாயக்கோட்பாடுகளை இந்நாட்டு மக்கள் மதிக்கின்றனர். எனவே நாட்டையும் மக்களையும் நாசமாக்காமல் [illegible] கொண்டு ஆட்சியைக் கைப்பற்றுங்கள். மக்கள் [illegible] பக்கமிருந்தால் உங்களுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும்".

# ○ நிழலுடன் போராட்டம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையடுத்து மாவட்டசபை மசோதாவும் தமிழ் மொழி மசோதாவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படலாம் என்று ஒரு செய்தி கூறுகிறது. இவ்விரு மசோதாக்களும் வரவு—செலவுத்திட்டவிவாதத்தையடுத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்று முன்னர் கூறப்பட்டது. வரவு—செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் எத்தனையோ மசோதாக்கள் பாராளுமன்றத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுசட்டமாக்கப்படும் விட்டன. ஆனுல் தமிழ் மொழி மசோதாவும், மாவட்டசபை மசோதாவும் மட்டும் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப் படவில்லை. இது தேசிய அரசாங்கத்தின் மீது தமிழ் பேசும் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு சோதனையாக உள்ளது.

மாவட்டசபை மசோதாவையும், தமிழ் மொழி மசோதாவையும் சட்டமாக்குவதில் காட்டப்படும் காலதாமதம் தமிழ் பேசும் மக்களின் பொறுமைக்கும் சோதனையாகும். இதைத் தேசிய அரசாங்கத்தின் முக்கிய அங்கமாக உள்ள தமிழரசுக் கட்சியும், அவர்களின் பிரதிநிதியாக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் உள்ளூராட்சி அமைச்சரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டியதொன்ருகும்.

## காலதாமதம் ஏன்?

'பின்னையென்பது இல்லையென்பதற்கு சரி' என்று தமிழில் ஒரு முதுமொழியும் உண்டு. 'அரசியலில் காலதாமதம் என்பது இல்லையென்று பொருள் படும்' என்று லெனின் கூறியுள்ளார். இம் மசோதாக்களைத் திலிருந்து தலையெடுக்க முடியாது இருந்தவர்கள்இவ்விரு மசோதாவுக்கும் எதிராக தீவிர பிரச்சாரத்தில் இறங்கியிருக்கவும் முடியாது. இன்று நிலைமை வேறு. நாட்டில் வகுவப்புவாதக் கூச்சலைக் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கின்றனர் இடது சாரிக் கட்சியினரும், சுதந்திரக் கட்சியினரும்.

## உடன் வேண்டும்

இன்றைய அரசியற் கால நிலை மாவட்டசபை மசோதாவையும், தமிழ் மொழி மசோதாவையும் பாராளுமன்றத்திற் சமர்ப்பிப்பதற்கு முன்னிருந்ததை விட

சுதந்திரன் அரசியல் நிருபர்

சாதகமானதாக இல்லை என்பதையும் மறுக்க முடியாது. இந்நிலை மேலும் தீவிரமடையுமேயன்றி திருந்துவதற்கு சிறிதேனும் இடமில்லை. எனவே இன்று நிலவக்கூடிய இச்சாதகமான அரசியற் சூழலில் இவ்விரு மசோதாக்களையும் கொண்டு வந்து சட்ட மாக்குவதே புத்தி சாதுரியமானதாகும். இந்த உண்மையைத் தமிழரசுக் கட்சியினர் உடனடியாகத் தேசிய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவது நன்று. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவடையும் வரை பொறுத்திருப்பது இன்றைய நிலையில் வரவேற்கக் கூடியதல்ல. அவ்வண்ணம் பிற்போடுவது தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைக்கு ஊறு விளைவிப்பதாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்த சிங்கள ஏடுகள் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தங்களில் எது உண்மையானது என்று கண்டு பிடிப்பது நமது நோக்கமல்ல. அல்லது திரு. செல்வநாயகத்திற்கும் திரு. டட்லி சேனநாயக்காவிற்கும் இடையில் ஒப்பந்தம் உண்டா-இல்லையா என்று வாதிடுவதும் நமது நோக்கமல்ல. ஆனுல் இப் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப் பிரதிகளில் எது உண்மையானதாக இருந்தாலும், அவற்றில் தவறென்ன என்று கேட்க ஆசைப்படுகிறோம்.

## தவறு என்ன?

இரு சிங்கள ஏடுகளும் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப் பிரதிகளின்படி எதுவும் தவருக நடந்துவிட்டதாக நாம் கருத முடியவில்லை. 1957-ம் ஆண்டு அன்றைய பிரதமருடன் திரு. செல்வநாயகம் அவர்கள் செய்து கொண்ட உடன்பாட்டை விட இப்போது வெளியாகியுள்ள உடன்பாடுகள் (சிங்கள ஏடுகள் வெளியிட்ட) எந்த விதத்திலும் உயர்ந்ததாக தமிழ் மக்கள் கருதவில்லை.

திரு. பண்டாரநாயக்கா அன்றைய உடன்பாட்டின் மூலம் வழங்க முன் வந்த தமிழ் மக்களின் இழந்த உரிமைகளைவிட இன்றைய உடன் படிக்கைகள் (சிங்கள ஏடுகள் வெளியிட்ட) எவற்றையும் கூடுதலாக தமிழ் மக்களுக்கு வழங்கப்போவதில்லை. இந்த நிலையில் இடதுசாரியினரும், சுதந்திரக் கட்சியினரும் போர்க் கோலம் பூணுவது ஏன்? உண்மையில் அவர்கள் மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ளவிருக்கும் பிரச்சாரம் உடன்படிக்கைக்கு எதிரானதுதானு? அல்லது இந்த பிரச்சாரத்

# ○ தாமதம்: இல்லையென்பதா?

பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இத்தனை காலதாமதம் என்ருல், அவற்றை சட்டமாக்கி அமுல் நடாத்துவதற்கு மேலும் எவ்வளவு காலமாகும் என்பதை நாம் கூறத்தேவையில்லை. எத்தனை தூரம் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தேசிய அரசிற்கு நல்லெண்ணம் இருந்தபோதிலும், நிர்வாக அமைப்பில் உள்ள வகுப்புவாதிகள் இவற்றை அமுல் நடாத்துவதைப் பிற்போட முயற்சிப்பார்கள் என்பது பலரும் அறிந்த இரகசியமாகும். இதையாரும் மறுக்க முடியாது.

மாவட்டசபை மசோதாவையும், தமிழ் மொழி மசோதாவையும் வரவு—செலவுத் திட்டத்தையடுத்து சட்டமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் பிரச்சினை சுலபமாக அமுல் நடாத்தப்பட்டிருக்கும் என்பதையும் நாம் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

பொதுத் தேர்தலில் பட்ட அடி தாங்க முடியாத இடதுசாரிகளும் சுதந்திரக் கட்சியினரும் முனங்கிக் கொண்டிருந்தனர் வரவு—செலவுத் திட்டவிவாதம் நடைபெற்ற நேரத்தில். அந்தத் தாக்கத்

## கற்பனை நாடகம்

இடதுசாரிக் கட்சிகளின் தினசரி ஏடுகள் 'நிழலுடன் போராடும்' ஒரு புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அந்தப் போராட்டத்திலும் அவர்களுக்குள் ஒற்றுமையில்லை. நாட்டின் அமைதியைக் கெடுத்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவே இந்த நிழலுடன் போராடும் முயற்சியில் இவர்கள் துணிந்துள்ளனர்.

பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழரசுத் தலைவர் செல்வநாயகத்திற்கும் இடையில் உள்ள உடன்படிக்கைக்கான உண்மையான ஒப்பந்தத்தை கண்டு பிடித்துவிட்டோம் என்று இவ் வேடுகள் வெளியிட்டுள்ள ஒப்பந்தங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருக்கின்றன, ஓய்வின்றி தொடர்ந்து நடாத்திய தீவிர முயற்சியின் பலனுக இந்த ஒப்பந்தத்தின் உண்மைப் பிரதியைக் கண்டு பிடித்ததாக அவ்வேடுகள் எழுதியுள்ளன. இந்த ஒப்பந்தம் நாட்டின் தேசியத்திற்கும், சிங்கள இனத்திற்கும் ஆபத்தானது என்றும் அவ்வேடுகள் எழுதி வருகின்றன.

தின் மூலம் மீண்டும் 1958-ம் ஆண்டை நினைவூட்ட முற்படுகிருர்களா?, அப்படி ஒரு நிலைமையை நாட்டில் உருவாக்கினுல் ஆட்சியைபலாத்காரத்தின் மூலம் கைப்பற்றி ஒரு சர்வாதிகார ஆட்சியை உருவாக்கலாம் என்பது எண்ணமா?

## அம்மையார் அறிவாரா?

இத்தகைய எண்ணமெதுவுமில்லையென்று இவர்கள் கூறமுற்பட்டால், கற்பனையில் ஒரு உடன்படிக்கையை உருவாக்கி நிழலுடன் நடாத்தும் போராட்டத்தை' ஏன் ஆரம்பிக்க வேண்டும்? கடந்த வாரம் எதிர்கட்சித் தலைவி திருவாட்டி சிறிமாவோ அம்மையார் விடுத்த அறிக்கையொன்றில் 'நாட்டில் வகுப்புக் கிளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டாம்' என்று கேட்டிருக்கிருர். இத்துடன் அம்மையார் நின்றிருந்தால் நிச்சயம் அவர் பாராட்டுக்குரியவராகின்ருர். ஆனுல், 'தேசிய அரசாங்கம் சிங்கள மக்களைக் காட்டிக் கொடுக்கிறது' என்றும் அவர் கூறுகிருர். இது தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடுவது போல் அல்லவா இருக்கிறது. இந்த இரட்டை நாக்குப் பிரச்சாரம் எதற்கு?

கற்பனையில் ஒரு செல்வ-டட்லி உடன்படிக்கையை உருவாக்கி போர்க்கொடி உயர்த்தி நிற்கும் எதிர்கட்சித் தலைவி அவர்கள் தனது கணவனின் வழிநிற்பதாகவும் கூறிக்கொள்கிருர்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1956-1965: மூடப்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்

## கா. பொ. இ. பிரேரணைக்கு பாராளுமன்றக் குழு ஆதரவு

**1956**-ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டு வரைக்கும் உள்ள இடைப்பட்ட கால எல்லைக்குள் மூடப்பட்ட சகல தமிழ்ப் பாடசாலைகளையும் மீண்டும் திறக்க வேண்டுமென்று கடந்தவாரம் கூடிய அரசாங்கப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது. இப்பிரேரணையை கிளிநொச்சித் தொகுதிப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவில்சமர்ப்பித்திருந்தார். அன்றைய கூட்டத்தில் திரு. இரத்தினம் அவர்களின் ஏழு பிரேரணைகள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

● வட—கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மூடப்பட்ட தமிழ் பாடசாலைகளையும், தமிழ்ப் பிரிவுகளையும் மீண்டும் திறக்கவேண்டும் என்று தீர்மானித்த அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழு இது பற்றிக் கல்வி அமைச்சருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழுவையும் தெரிவு செய்து அக்குழுவின் அமைப்பாளராக திரு. இரத்தினம் அவர்களையும் நியமித்துள்ளது.

★ நாவலர் நினைவு தினத்தையொட்டி நாவலர் படம் பொறித்த தபாற்தலையொன்று வெளியிடுவதென்றும் அதற்கான படத்தை கொழும்பு விவேகானந்த சபையாரிடமிருந்து பெறுவதென்றும், இத்தபாற் தலையைநாவலர்தினத்தன்று வெளியிட முடியாத நிலையில் பொங்கற் பெருநாள் அன்று வெளியிடுவதென்றும் அதற்கான ஒழுங்குகளை நிதி அமைச்சருடன் இணைந்து கவனிக்கும் பொறுப்பு திரு. இரத்தினம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

★ அரசாங்க உடமையாக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளமும் அரச ஊழியர்களுக்கு இருப்பது போன்று சகல வசதிகளும் செய்து கொடுப்பதுடன், சகல ஆசிரியர்களையும் ஒருமுகப்படுத்திய சேவை மூப்பு அட்டவணை தயாரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

★ கிராமப்புற பாடசாலைகளில் உள்ள காலியான இடங்களை உடன் நிரப்புவதுடன் சகல பாடசாலைகளுக்கும் ஆங்கில உதவி ஆசிரியர் ஒருவரும், பெண் ஆசிரியைகள் இல்லாத இடங்களுக்கு பெண் உதவி ஆசிரியைகளும் நியமிப்பதுடன், சொந்த இடங்களிலிருந்து வெளியிடங்களுக்கு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களுக்கு காலகெதியில் வசிப்பிட வசதி செய்து கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

★ சட்ட விரோத குடிவரவினரைக் கைது செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் பொது மக்களுக்கு கொடுக்கும் துன்பங்களையொட்டி விரிவாக ஆராய்வதற்கும், அவர்கள் இலஞ்சம் பெறுவது பற்றி ஆராய்வதற்கும் மூன்று பேர் கொண்ட குழுவொன்றை (பிரதமர், இராசாங்க அமைச்சர், கிளிநொச்சிப் பா. உ.) நியமிப்பதென்றும் அதன் அழைப்பாளராக திரு. கா. பொ. இரத்தினத்தை நியமிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

● தனிநபர் கட்டிடங்களில் இருக்கும் அரசாங்கப் பணிமனைகளை உடனடியாக அரசாங்கக் கட்டிடங்களுக்கு மாற்ற வேண்டுமென்றும், அங்ஙனம் அரசாங்கக் கட்டிடங்கள் இல்லாதுவிடின் புதிய கட்டடங்களைக்கட்ட வசதி செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

● ஒவ்வொரு அமைச்சரும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அவ்வவ் அமைச்சர்களின் பணிமனைகளுக்கு அண்மையில் இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய முறைப்படி உயர்தர அதிகாரிகள் ஒவ்வொரு காரியாலயங்களுக்கும் பிரயாணம் செய்வதிலேயே தங்களின் பெரும் பகுதியானநேரத்தைச் செலவிடுகிறார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

## மூன்று பெரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது எடுக்கப் படுகின்றன என்றும், இக் கூட்டங்களை அடுத்த வாரத்திலிருந்து நடத்துவார்களென்றும் தெரிகிறது.

இதற்கிடையே 1956-ம் வருடப்பாணியில்— 1956-ம் வருட தேர்தலுக்கு முன்பு, சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக வேண்டுமென நாடெங்கும் நடத்தப்பட்ட ஊர்வலங்கள்மாதிரி— 'ஒப்பந்தத்தைக்' கண்டித்து நாடெங்கும் ஊர்வலங்கள் நடத்த பௌத்த சங்கங்கள் ஏற்பாடுகள் செய்வதாகத் தெரிகிறது.

இந்த ஊர்வலங்களுக்கு முன்னோடியாக நாடு முழுவதிலும் பிரசாரம் ஏற்படக்கூடியதாக கொழும்பிலிருந்து முத்திசைகளுக்கும் செல்லும் மூன்று பெரியஊர்வலங்கள் நடத்தப்படுமாம்.

அவற்றில் ஓர் ஊர்வலம் கொழும்பில் விகாரமகாதேவி பூங்காவிலிருந்து கதிர்காமத்திலுள்ள கிரி விஹாரைக்குச் செல்லுமென்றும், மற்றோர் ஊர்வலம் இதே பூங்காவிலிருந்து நாட்டின் நடு நாயகமாயுள்ள கண்டி புனித தலதா மாளிகைக்குச் செல்லுமென்றும், பிறிதோர் ஊர்வலம் இதே பூங்காவிலிருந்து புறப்பட்டு அனுராதபுரம் ஸ்ரீமா போதி விருட்சத்தினடிக்குச் செல்லுமென்றும் கூறப்படுகிறது.

இந்த மூன்று பிரமாண்டமான ஊர்வலங்களும் சிங்கள மக்களிடையே வகுப்புவாத உணர்ச்சியைத்தூண்டிவிடுமென்றும், அரசாங்கத்தையும், தமிழரசுக்கட்சியையும் எதிர்த்து நாடுபூரா பெரும் கிளர்ச்சி ஏற்பட இந்த ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் வழிவகுக்குமென்றும் எதிர்க்கட்சியினர் எதிர் பார்க்கின்றனராம்.

## நிழலுடன் போராட்டம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று திருவாட்டி சிறிமாவோ அம்மையார்கடைப் பிடிக்கும் வழிதானு அன்று திரு. பண்டாரநாயக்கா காட்டிய வழி? அப்படியென்றால் செல்வா-பண்டா உடன்படிக்கையின் பொருள் என்ன?

எதிர்கட்சியினரின் இன்றைய அரசியல் போக்கு குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க முயல்வதைப் போன்று இருக்கிறது. வகுப்புவாதத்தைத் தூண்டி அதன் மூலம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பது. இது நிச்சயமாக வெற்றியைக் கொடுக்காது. அது மட்டுமன்றி, இந்த முயற்சி நெருப்புடன் விளையாடுவது போன்றது. ஏவிவிட்ட பிசாசு ஏவியவனையே திருப்பித்தாக்குவதும் உண்டு. இந்த உண்மையை எதிர்க்கட்சியினர் உணர்ந்தால் நாட்டில் உருவாகியிருக்கும் தேசிய ஒற்றுமைக்கு வேட்டு வைக்க மாட்டார்கள்.

### மத்திய வங்கியில் இன ஒதுக்கல்


இலங்கை மத்திய வங்கியின் நிர்வாகத்தினர் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுநீண்ட நாட்களாக இருந்து வருகிறது. வங்கி அதிகார பீடத்தினரின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பல இடர்ப்பாடுகள் பற்றி சுதந்திரன் அவ்வப்போது செய்தி வெளியிட்டு வந்தது வாசகர்கள் அறிந்ததே. கடந்த வாரம் இலங்கை வங்கி சம்பந்தப்பட்ட கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினத்தின் கேள்விகளுக்கு நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் கொடுத்தவிளக்கத்திற் எத்தகைய இன ஒதுக்கல்களும் வங்கியில் இல்லையென்று கூறியுள்ளார்.

நிதி அமைச்சர் மத்திய வங்கி நிர்வாகத்தினர் பற்றி பாராளுமன்றத்தில் கூறிய சொற்களின் ஓசை அடங்க முன்னரே, வங்கி நிர்வாகத்தினரின் இன ஒதுக்கல் நடவடிக்கை பற்றிய ஒரு அப்பட்டமான உண்மை பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளது. ஆங்கில சுருக்கெழுத்தாளர்-தட்டெழுத்தாளர் வேண்டுமென்று மத்திய வங்கியினர் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்றில் விண்ணப்பகாரர்களுக்கு சிங்கள அறிவும் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

#### வேறுபாடு

சேவையில் சேர்ந்த பின்னர் சிங்கள அறிவு பெற வேண்டுமென்று கூறுவது வேறு; வேலையில் சேரவிரும்புபவர்கள் சிங்கள அறிவுபெற்றிருக்க வேண்டுமென்று கூறுவது வேறு. முன்னைய நிபந்தனையின் கீழ் தமிழர் சிங்களவர் ஆகிய இருபாலரும் அப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், பின்னைய நிபந்தனையின் கீழ் சிங்களவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதுஇன ஒதுக்கல் இல்லையா என்று நிதி அமைச்சரைக் கேட்கவிரும்புகிறோம்.

தேசிய அரசாங்கத்தின் கீழ் இத்தகைய இன ஒதுக்கல்கள் வேண்டுமென்றே நடப்பது நன்றன்று. மத்திய வங்கி நிர்வாகத்தினரின் இந்த வகுப்புவாதப் போக்கை உடனடியாக தடுத்து நிறுத்த நிதி அமைச்சர் முன்வர வேண்டும். இந்த ஆபத்தான போக்கை உடன் தடுத்து நிறுத்த முற்படாவிட்டால் நிலைமை ஆபத்தானதாகலாம். தமிழ் பேசும் மக்கள் தேசிய அரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கெடுக்க இத்தகைய தவறுகள் வழிவகுக்கும் என்பதை நிதி அமைச்சருக்கு தெரியப்படுத்த விரும்புகிறோம்.



ஈழம்வாழ் முஸ்லிம் பெருங்குடிமக்கள் பெருமையுறும் வண்ணம் நாலரை இலட்சம் ரூபா செலவில் எழிலுயர்ந்த, முகலாய சிற்பக் கலைகளைத் தழுவி காத்தான்குடியில் அமைந்துள்ள 'ஜாமிஉல்-ழாபிரின்' பள்ளிவாசலின் எழில்மிக்க தோற்றம். ஈழத்தின் மிகப் பெரிய இப் பள்ளிவாசலின் திறப்பு விழா கடந்த 28ம் திகதி நடைபெற்றது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார ஏடும் வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. இந்த இரண்டு ஏடும் வெளியிட்டிருந்த ஒப்பந்த வாசகங்கள் ஒன்றுக் கொன்று முரண்பட்டவையாகும்.

## செல்வா...

இப்பொழுது இந்த உடன்படிக்கையின் உண்மைப் பிரதியென்று கூறக் கூடிய முறையில் ஒரு துண்டுப் பிரசுரத்தை நாடு பூராவிலும் விநியோகம் செய்ய எதிர்க் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இதற்கான முயற்சிகள் 'பெருந்தலைகளின்' ஒத்துழைப்புடன் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

திரு. டட்லி சேனநாயக்கா அவர்களது ஒப்பம் ஒன்றையும், திரு. செல்வநாயகம் அவர்களது ஒப்பம் ஒன்றினையும் வெவ்வேறு கடிதங்களிலோ அல்லது வேறு தஸ்தாவேசுகளிலோ இருந்து எடுத்து தட்டெழுத்து மூலம் ஒரு கற்பனை ஒப்பந்தத்தை உருவாக்கி அதில் இவர்களது ஒப்பங்களையொட்டி படம் எடுத்து அதை அச்சிட்டு இலட்சக்கணக்கில் துண்டுப் பிரசுரமாக நாடு பூராவும் வெளியிடுவதென்பதே இவர்களது திட்டமாகும் என்று தெரிகிறது.


மிஸிஸ் டாமோடிரன்



தோன்றும்

"சிரித்திரன்"

சஞ்சிகையைச் சிறப்பாக அச்சடித்த பெருமை சுதந்திரன் அச்சகத்துக்கே உரியது

எந்த விதமான அச்சு வேலையானாலும் சிறந்த முறையில் செய்வதற்கு

சுதந்திரன் அச்சகம்,

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 3411 தந்தி: சுதந்திரன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறிவைப் போதிக்கும் ஆசிரியர்கள் ஆசிரியர் களாகவில்லாதபோது— மாணவர்கள் மாணவர் களாகவிருப்பார்களா? 'தேவ பிதாவே, இந்த அறிவுள்ள மூடர்களை மன்னியுங்கள்!'

தமிழ்ப் பாடசாலையின் தண்டவாள மணி காலைப் பாடசாலை ஆரம்பமாகப் போகின்றது என்பதை தன் நீண்ட ஒலியால் அறிவித்தது. மணியொலி ஓயவும்-தலைமையாசிரியர் பேதுருப்பிள்ளை சிவப்புக் கூடை பூட்டிய புதிய இறலி சைக்கிளில் அவசரமாய் பாடசாலை ஆபீஸ் முன் வந்திறங்கவும் சரியாயிருந்தது. அவசரம் மாய் ஆபீஸ் அறையில் வைக்கப்பட்டிருந்த கொப்பியில் கையொப்பமிட்டு விட்டு பாடசாலையின் விறுந்தையில் மாணவர்களை நோட்டமிட்டுநடந்து விட்டு மீண்டும் ஆபீசில் நுழைந்து கதிரையில் அமர்ந்தார்.

காந்தஒளிவீசும்கண்ணுடி போட்ட கண்கள் தாமரை போன்ற மலர்ந்த முகம்! அறிவின் பெருக்கத்தைஅறிவிக்கும் சிலமயிர்களோடு கூடிய வழுக்கைத்தலை! பருத்து பூரித்த உடல்! புன்சிரிப்பு! கதர்தேசிய உடை! இவைகள் அந்த ஆசிரியரை ஆசிரியராக அணிந்தன. எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தபின் இரு பாடசாலைகளில் படிப்பித்து அதன்பின் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து பட்டம் பெற்று மேலும் இருபாடசாலைகளில் தலைமையாசிரியராய்ப் பதவி வகித்து-முடிவில் நல்லூர் அரசினர் தமிழ் பாடசாலைக்கு மாற்றப்பட்டு ஏழுவருடங்களை கடமை வாழ்வில் செலவழித்து விட்டார்.

இளமையிலேயே பல இன்னல்கள் அனுபவித்து கடின உழைப்பால்தான் முன்னேறினர். பிறந்தவன் தொண்டு செய்து தான் இறக்க வேண்டும் என்ற கோட்பாட்டோடு தன் மனைவியையும் மக்களையும் நடுத்தர வர்க்க வாழ்வில் ஓட்டிக் கொண்டிருந்தார். ஆசிரியத் தொழிலை புனித தொழிலாக-தெய்வத் தொண்டாக-நெஞ்சில் நிறுத்தி யேசுவின் புனித அடியில் வாழ்ந்து-பிரார்த்தனை மூலமும் சேவா உணர்ச்சி மூலமும் வாழ்க்கைப் படகை இதுவரை ஓட்டி விட்டார். ஓய்வு வேளைகளில் சமூகசீர்திருத்த நோக்கத்துடன் சொற்பொழிவுகளையும்-இலக்கிய ஆற்றலால் கவிதைகளையும் ஆக்கி மக்கள் சமுதாயத்துக்கும் தொண்டு செய்தார்...... காலம் உருண்டது.

அது எஸ். எஸ். சி. வகுப்பு தலைமையாசிரியர் பேதுருப்பிள்ளை வகுப்பில் நுழைந்ததும் மாணவர்கள் 'வணக்கம்' செலுத்த 'உட்காருங்கள்' என்று அமைதியாகக் கூறிவிட்டு வகுப்பு நாற்காலியில் அமர்ந்தார். அவருடைய கண்பார்வை மாணவர்களின் பக்கம் திரும்பியது. மினுக்கிய சேட்டுக்கள்-கறுப்புப்பென்சில் பூசப்பட்ட பொயின்கட் மீசைகள்-சுருட்டிவிடப்பட்ட தலைமயிர்-டெர்லின் சேட்டுகள்-அத்தனையையும் பார்த்து தன்னுள் சிரித்துக் கொண்டார். காலத்தின் மாற்றத்தை நெஞ்சில் நிறுத்தினர்-அந்த மாற்றத்துக்கு இலவசக் கல்வியும் உறுதுணைபுரிவதைஎண்ணிஉவகையற்ற சிரிப்பொன்றை உதிர்த்தார்... 'ஞானம் நேற்று படிப்பித்த கம்பராமாயணப் பாடல் நான்கையும் பாடமாக்கிவிட்டாயா? எங்கே சொல்லு பார்க்கலாம்?' அமைதியாகக்

## நல்லை அமிழ்தன்

கேட்டார் ஞானமோ திருதிருவென தன்பெரிய முழியை உருட்டினன். 'அடுத்த மாணவன்' அவரது அதிகாரந் தொனித்த குரல்...அவனும் அப்படியே நின்றன். தலைமையாசிரியருக்கு கோபம் சுவாலையாகி முகத்தில் கொழுந்தாயெரிந்தது.

பிரப்பால் அந்த எஸ். எஸ். ஸி. வகுப்பு மாணவர்களை பதம்பார்க்கஅவர் இதயம் துடித்தது. ஆனாலும் வளர்ந்த மாணவர்கள் என்ற நினைவுந்தலில் பிரம்பை எடுக்க அவரது கைகள் மறுத்து விட்டன.

'தெரிந்த மாணவர்கள் யாராவது இருக்கின்றீர்களா'! அடுத்த வினைவை கோபத்தின் ஆக்கிரமிப்பில் பெரியஒலியாய் எழுப்பினர், எஸ். எஸ். ஸி. வகுப்பு என்றுமில்லாத நிர்மானுஷ்ய நிசப்தத்தில் துயில் புரிந்தது. மாணவர்கள் சிலைகளாயிருந்தனர்.

## எமது சிறுகதை

சரி-சரி எல்லோரும் நாளைக்கு அந்த நாலு பாட்டுக்களையும் பாடமாக்கி வராவிட்டால் புத்தகத்தோடு வீட்டைப் போகவேண்டி வரும்"... என்று சொல்லிக் கொண்டே இலக்கியப் பாடத்தை தொடர்ந்தார். சுவாரஸ்யமாக பாட்டுக்கு நயம் சொல்லிக் கொண்டிருந்தவர் இடையே மாணவர்களை நோட்டம்விட்டார்.வகுப்புக்கு அருகேயிருந்த ஆபீஸ் மணிக்கூட்டைபின்வரிசையிலுள்ள மாணவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.இலக்கியப்பாடம் முடிவடைந்ததை கலாசாலை மணி அறிவித்தது. தலைமையாசிரியர் மீண்டும் மாணவர்களிடம் 'வணக்கம்' வார்த்தைகளைப் பெற்று விட்டு அமைதியாக ஆபீசுக்குச் செல்லலானார்.

'ஞானம்... உந்த பெரிய [illegible] பாடமாக்கிறது.' ஆபீசுக்கு நடந்து கொண்டிருந்த தலைமையாசிரியர் செவிகளில் மாணவர்களின் உரையாடல் விழுந்தது...என்ன செய்வது சினிமாவும் மஞ்சட் பத்திரிகைகளும் வந்து மாணவர்களை தீயவழியில் இட்டுச்செல்கின்றன. தமிழனின் பண்டைய வீரத்தை மாணவர்கள் அறிந்து அதன்படி ஒழுகவேண்டுமென்று நான அயராதுழைக்க அவர்கள் அந்தப்பாடத்தையே வெறுக்கிறார்கள். தமிழன் பண்பை வாழ்வை மாணவர்கள் அறியாவிட்டால் தரணியில் தமிழினம் எப்படி முன்னேறும்!...எல்லாம் யேசுவின் கருணையால் நிறைவேறும்' என்று தன்னுள் பிரலாபித்துக் கொண்டு நடக்கலானார்.

மணி 2-30. மதிய உணவைப்புசிக்க மாணவர்கள் சைக்கிளிலும் நடையிலுமாக வீடுகளுக்கு சென்று கொண்டிருந்தனர். தலைமையாசிரியரும் மனைவி சமைத்துக்கட்டிக் கொடுத்த உணவைஉண்டு விட்டு மாணவர்கள் சந்தடியற்ற ஒருவகுப்பில் வாங்கில்களை ஒன்றாய்ச் சேர்த்து சிறிது துயில் புரிய கண்களை மூடினர்.

'வாத்தியார் ஐயா...'

யாரோ தன்னை தட்டியெழுப்புவதை உணர்ந்து தன்னை ஆசுவாசுப்படுத்திக் கொண்டு எழுந்தார்.

'ஓ! சின்னத்தம்பியே... என்ன சங்கதி...'

'ஐயா! என்ரை பொடியன தேவராசா உங்கை தான் எட்டாம் வகுப்புப் படிக்கிறன் நான் சொன்னாலும் கேக்கிறானில்லை. உந்த தெருவெல்லாம் றவுடிமாதிரிததிரிந்த பீடி-சுருட்டும் குடிக்கிறனும். இனி நீங்கள்தான் அவனை திருத்த வேணும்...' இது போல் ஒன்று இரண்டா. தினசரி மாணவர்களை கள்ளமாங்காய் பிடுங்கினது-கிழவனுக்கு கல்லால் எறிந்தது-வீட்டில்சண்டை பிடித்தது-போன்ற புகார்கள் வந்துகொண்டேயிருக்கும்,

மாலைப்பாடசாலையும் ஆரம்பமானது கட்டிலை விட்டெழுந்த தலைமையாசிரியர் நேராக தண்ணீர் பைப்பிறகுச் சென்று முகத்தை கழுவிவிட்டு தன் நடையை ஆபீசுக்கு செலுத்தினர், அங்கே கணித ஆசிரியர் கணேசசுந்தரம் ஒரு மாணவனுடன் நந்தியாக நின்றர்.

'சார் இவனலை எனக்கு பெரிய கஷ்டம்-வீட்டுக் கணக்கு செய்யுறனில்லை. கரும்பலகையிலை கணக்கு விளங்கப்படுத்தினல்- முன்வரிசை பெட்டையளின்ரை கொப்பியை உத்துப்பாக்கிறன். ஏன்டா இப்பிச் செய்யுறாய் என்டால் என்னையே முறைச்சுப் பார்த்துப் எதிர்த்து பேசுறன்இவனை இந்தப் பள்ளிக்கூடத்திலை வச்சிருக்கக் கூடாது.......வார்த்தைகளை நிமிட வேகத்தில் ஒப்புவித்துவிட்டு அந்த இளம் கணித ஆசிரியர் தம் வகுப்புக்குச் சென்று விட்டார்...சிலையாகநின்று கொண்டிருந்த மாணவனை தலைமையாசிரியர் ஒரு முறை ஏறஇறங்க நோட்டமிட்டார்...'தம்பி அந்த வாத்தியார் சொல்லுறதைக் கேள்—எழுந்தறிவிக்கும் இறைவர்களை எதிர்த்துப் பேசாதே... உனக்கே நல்லாயிருக்கா'

'ஐயா என்னைமன்னித்து விடுங்கள். உங்கள் பொன்மொழிகள்என் இதயத்தில் பதிந்து விட்டன, ஆனாலும் ஆசிரியர்கள் தீய வழியில் சென்று மாணவர்களுக்கு அறிவுரை கூறலாமா? தன் முதுகைப் பாராமல் பிறர் முதுகைப் பார்ப்பதில் பயனுண்டா—முதலில் அவர்கள் திருந்த வேண்டும்...' வினவொன்றை எழுப்பிய மாணவன் விடைபெற்று சென்று விட்டான்...

அவன் எழுப்பிய அணுக் கேள்வி தலைமையாசிரியரின் இதயத்தில் பதிந்து இனம் புரியாத வேதனையைக் கிளப்பியது. 'அறிவைப் போதிக்கும் ஆசிரியர்கள் தீய வழியில் செல்கிறார்களா—நிச்சயம் இருக்காது' என்ற தன்னுள் எண்ணினர். ஆனல் அவரது சிந்தனை ரேகைகள் கலைந்தபாடில்லை, அவரது பார்வை பாடசாலைக்கு முன்னுள்ள வேப்ப மரத்தின் கீழுள்ள விளையாட்டு ஆசிரியர் வீரசிங்கம் பக்கம் திரும்பியது... என்ன ஆச்சரியம்...

'டேய் ராமன் தலைமை வாத்தியாருக்கு தெரியாமல் கடைக்கு ஓடிப்போய் ஒரு பைக்கட் திறீறோஸ் சிகரட் வாங்கிவா' மாணவனுக்கு பணம் கொடுத்துக் கொண்டிருந்தார் விளையாட்டு ஆசிரியர்...

மேசையிலிருந்த பைபிளைத் தொட்டு தியானத்தில் ஆழ்ந்தார் தலைமையாசிரியர். 'தழந்தை உள்ளங்களில் கொடி விசத்தை கலக்கும் இவர் மாணவர்களை எப்படித் திருத்துவார். தலைமையாசிரியரின் நெஞ்சு அனலாய்க் காய்ந்தது— இதயம் கண்ணீர் வடித்தது—தன்னை ஆசுவாசப்படுத்திய பின் எழுந்து காலியாகவுள்ள வகுப்பறைக்கு சிறிது அமைதியாக துயிலவரமெனச் செல்லலானர்... அங்கே...

கணித ஆசிரியர் கணேசசுந்தரம் இளம் ஆசிரியை ஒருத்தியை நெருங்கி ஒட்டியிருந்தார். மாணவர்கள் அதைப் பார்த்தும் பாராதவர்கள் போல் விறுந்தை யோரமாகச் செல்லலானார்கள். தலைமையாசிரியருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை—நேராக மீண்டும் ஆபீசுக்குச் சென்றர்.

மாலைப் பாடசாலை முடிவதற்கு அறிகுறியாக மணி அடிக்கப்பட்டது. பாடசாலைக் கீதத்தை மாணவர்கள் பாடிவிட்டு வீடு சென்றுகொண்டிருந்தனர், தலைமையாசிரியரும் நேராகத் தன் வீட்டிற்கு துவிச்சக்கர வண்டியில்செல்லலானர். அவர் சிந்தனைகள் சக்கரமாகச் சுழன்றன. நேராக வீட்டினுள் சென்று கைகாலை அலம்பிவிட்டு யேசு பெருமான் அமர்ந்திருக்கும் அறைக்குச் சென்று 'தீய வழியில் செல்லும் ஆசிரியர்களை திருத்தும் பிதவே' என்று கூவோ கங்களை முழந்தாளில் நின்று ஒலித்துக் கொண்டிருந்தார்.

'அந்த மாணவன் எவ்வளவு உண்மையைச்

(14-ம் பக்கம் பார்க்க)

# ஒழுக்கம்

உருவகக் கதை:-

## அறியாமை

—பட்டனைந்து—

கோடைகால வெய்யில் கொழுத்திக் கொண்டிருந்தது. பூமி, வெய்யிலின் வேட்கையால் தகித்தது. காட்டுப் பத்திரகாளி கோவிலில் அன்று வேள்வி. பலவிதமான, நிறத்திலும்-பருவத்திலும் ஆடுகளைக் கொணர்ந்து, ஆங்காங்கு கட்டப்பட்டிருந்தது மேலும் மேள வாத்தியங்களோடும், சோடனைகளோடும் ஊர்வலமாக சில ராட்சத ஆடுகளை அழைத்து வந்து கொண்டிருந்தார்கள்.

அந்த, ஆடுகளின் கூட்டத்தில் இரு நண்பர்களும் சந்தித்துக் கொண்டனர். 'நண்பா, அதோ பார்...அந்தப் புள்ளி மேனியுடையவனை...'

—'ஓம்...ஓம்... இப்போ அதற்கென்ன...?'

—'அவன், வந்த நேரத்திலிருந்தே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டேயிருக்கிறன்.... இவ்வளவு பெரிய விழாவை எங்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் போது, புரிப்படையாமல் மடையன் பிறந்த புத்தியையல்லவா... காட்டுகிறன்...!'

—'ஆமாம்...அது, எனக்குந்தான் புரியாத புதிராயிருக்கிறது...'

நண்பர்களான, 'மா' வெள்ளையும் 'கரிச்' கறுவலும் கொஞ்சத் தூரத்திற்கப்பால் கட்டப்பட்டிருந்த, 'புள்ளியனைப்' பார்த்துப் பேசிக் கொண்டார்கள்.

புள்ளி விழுந்த ஆடு, ஞானநிலையில் அமைதியாய் நின்றது. தொடர்ந்து, கறுத்த ஆடு வெள்ளை ஆட்டுடன் புள்ளி ஆட்டைப் பற்றித் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது ஒன்றுமே, புரியாத வெள்ளை ஆடு நடுநிலைமையில் ஒன்றுமே, பேசாமல் நின்று கொண்டது.

விழாக் கோலம், மும்முரமாகி களைதோன்றிக் காட்சியளித்தது. பலிப்பூசைக்கான காலம் சரியாகிவிட்டது. முதன் முதலாக, அந்தக் கறுத்த ஆடு இழுத்துச் செல்லப்பட்டது. கறுத்த ஆட்டுக்கு, இப்போதுதான் விழாவின் விளக்கம் புரிந்திருக்க வேண்டும். முன்னைய, சோபையை இழந்து மூச்சையுற்றது போல், நின்றது.

சிறிது, நேரத்தில் கறுத்த ஆட்டின் தலையை முரட்டுக்கரமொன்று தாழ்த்திப் பிடித்தது. மறுகணம், கறுத்த ஆட்டின் முறுகிய தலை தரையில் புரண்டது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வெள்ளை ஆடு, புள்ளி ஆட்டையும் ஒரு தடவை பரிவோடு பார்த்து விட்டு; வெறுப்போடு வானை நோக்கிக் குனிகிறது. அதன், கண்களில் தேங்கி நின்ற இரு சொட்டுக் கண்ணீரும் தரையில் வீழ்ந்து, பூமியைப் நனைத்து வரட்சியில் காய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டர்டெண்மெயின்ட்ஸ் அளிக்கும்

# முரடன் முத்து

தயாரிப்பு:- பத்மினி பிக்சர்ஸ்



காளிமுத்து முரடன் தான். ஆனால் அவனுடைய முரட்டுத்தனமெல்லாம் துர்மதி படைத்தவர்களிடம் தான். அவன் நல்லவன். அவன் சுபாவம் தெரியாதவர்கள் அவனை முட்டாளாக்கி விடுகின்றனர்.

அன்புள்ளம் கொண்டு அவனை ஆதரிக்கும் அவன் அண்ணனும் அண்ணியும் அவன் தங்கையும், அவனை அருகிலேயே வைத்து வளர்த்து வருகின்றனர். ஆஞ்சனேயரின் பக்தனாகி, பெண்ணாசையை வெறுத்து வாழ்ந்து வருகிறான். அண்ணன் மருதமுத்து பொம்மை வியாபாரத்தின் மூலம் பெறும் வருவாயில் குடும்பம் நடக்கிறது.

பேராசைக்காரன் ஒருவன் அந்த ஊரையே கொள்ளையடிக்கிறான். அவனுடன் மோதி, ஊருக்கு நன்மை தேட, அவனுடைய அண்ணன் மகனான அறிவுடை நம்பியுடன் காளிமுத்து சேர்ந்து விடுகிறான். இதனால் ஏற்பட்ட சிக்கலினால் தன் தங்கையுடன் ஊரைவிட்டுப் புறப்படுகிறான் முத்து. அடுத்த ஊர் சென்ற அவனுக்கு பல தொல்லைகளுக்கு மத்தியில் நல்ல வாழ்வும் கிடைக்கிறது.

கிராமப்புறச் சூழ்நிலையில் சில பணக்காரர்களால் சுரண்டப்படும் ஏழை மக்கள் எத்தனை அல்லல்களை அனுபவிக்கிறார்கள் என்பதனை விபரித்துக் காட்டும் சித்திரமாக 'முரடன் முத்து' அமைகிறது.

சோலைமலை எழுதிய இக்கதையை முன்னர் ஜுபிட்டர் நிறுவனத்தினர் ஜெமினி கணேசனை வைத்து தயாரித்து வந்தனர். ஆனால் பத்மினி பிக்சர்ஸ்தான் இக்கதையை முடிக்க வகை செய்தார்கள்.

சிவாஜிகணேசன் முரடன் காளிமுத்துவாகத் தோன்றி வெகுசிறப்பாக நடிக்கிறார். அப்பாவிபோலத் தோன்றும் போதும், ஆத்திரப்பட்டுக் குமுறி எழும்போதும் அவருடைய தன்னிகரற்ற நடிப்பின் தரத்தை நாம் அளவிட முடியவில்லை.

அண்ணன் மருதமுத்தாகத் தோன்றும் பி. ஆர். பந்துலு படத்தின் இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் உள்ளார். தம்பிமேல் வைத்துள்ள பாசத்தால் அவர் துடிக்கும் போது நாமும் அவருடன் சேர்ந்து துடிக்கின்றோம். ராஜம்மா பந்துலுவுக்கு ஈடுகொடுத்து நடித்திருக்கிறார்.

அடுத்து பணக்காரனாக வரும் வி. கே. ராமசாமியின் நடிப்பைக் கூறலாம். நாகேஷுடன் சேர்ந்து நடிக்கும் போது அவருடைய திறமை மிளிர்கிறது. தேவிகா, சந்திரகாந்தா. சி. கே. சரஸ்வதி, கருணாநிதி, அசோகன் முதலானோரும் நடித்துள்ளனர். பல வருடங்களுக்குப் பின்னர் பிரேம்நசீரையும் இப்படத்தில் காண முடிகிறது. சகிலாவின் நடிப்பும் பிரமாதம்.

கண்ணதாசனின் பாடல்கள் வெகுபொருத்தமாக வுள்ளன. லிங்கப்பா தரமான இசை அமைத்திருக்கிறார்.

வெளிப்புறக் காட்சிகள் மிகவும் சிறப்பாகவிருக்கின்றன. படப்பிடிப்பும் குறை கூற இடமில்லாமலிருக்கின்றது.

— நாதன்

# "நாட்டின் பாதுகாப்புக்காக நாரதராகப் போகிறேன்"

—எம். ஜி. ஆர்.

'இந்தியத்துணைக்கண்டத்தில் வாழும் சகல மக்களும் தங்களுக்குள் உள்ள சகலவிதமான பேதங்களையும் மறந்து ஒரே மனப்பான்மையுடனும் உறுதியுடனும் உழைகக வேண்டிய கட்டததிலுள்ளனர். இன்றுள்ள நிலையில் நம்நாட்டில் ஒற்றுமையை வளர்க்க நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன். தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்நேரத்தில் தேச மக்களை ஒற்றுமைப்படுத்தும் பணிக்காகவும், தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பதற்காகவும் நாரதராக மாறப்போகிறேன்.'

நவம்பர் 17ம் திகதி புதன் கிழமை மாலையில் சென்னை புது ஊட்லண்ட்ஸ் ஹோட்டலில், இலங்கை சென்று திரும்பிய மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜா தேவி ஆகியோருக்கு தென்னிந்திய பத்திரிகை எழுத்தாளர் சங்கம் ஒரு பாராட்டு விழாவினை நடாத்தியது.



தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மக்கள் திலகம் மேற்கண்டவாறு கூறினார். இவ்விழாவுக்கு சென்னை முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தலைமைதாங்கினார்.

எம். ஜி. ஆர். தொடர்ந்து பேசும்போது, பாதுகாப்பு நிதிக்காக தாம் தமது குழுவினருடன் சேர்ந்து சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய 'அனுசூயா' நாடகத்தை நாடெங்கும் நடத்தப்போவதாகவும், அந்நாடகத்தில் தாமே நாரதர் வேடம் தாங்கப் போவதாகவும் கூறினார். இந்நாடகம் ஜனவரிமாதம் ஆரம்பமாகும் என்றும் சொன்னார்.

'எம். ஜி. ஆரின் தாராளமான மனத்தை அறியாத தமிழரே இருக்கமுடியாது. கடல் கடந்தும் அவருடைய கொடை கொடுக்கும் கை நீண்டு சென்றுள்ளது. அவர்கள் செல்லுமிடமெல்லாம் அவருடைய வள்ளல்தன்மையும் செல்லுகிறது - அவருக்கு வான்புகழைக்கொடுக்கிறது. அவருடைய தகைமையை நாங்கள் நன்கு அறிவோம். அவருடைய சேவைக்கேற்றபடி அவருக்கு வழி சமைத்துக்கொடுக்க நாம் எப்போதும் தயாராக விருப்போம்' என்று சொன்னார்

தலைமை தாங்கிய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம்.

## ஐயாத்தேவருக்கு நிதி சேருகிறது

கல்முனைத் தொகுதியில் காடையர்கள் சிலரால் தமிழரசுப் பிரமுகர் திரு. சாமி ஐயாத் தேவரின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட செய்தி கடந்த வாரம் சுதந்திரனில் பிரசுரமாகி இருந்ததை அனைவரும் அறிவர். தீக்கிரையான வீட்டைத் திருத்திக் கொடுக்கும் பணியில் கல்முனை தமிழரசுத் தொண்டர்கள் வெகு துரிதமாக ஈடுபட்டிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இதற்கிடையில், திரு. தேவரின் இல்லத்தைப் புதுப்பிக்க நிதி திரட்டும் பணியில் ஹட்டனில் சில வாலிபர்கள் ஈடுபட்டுடிப்பதாகவும் செய்தி ஒன்று வந்துள்ளது. திரு. ஆ. வேல்முருகு, திரு. நித்தியானந்தன் ஆகியோர் இந் நிதி சேகரிப்பதாகவும், கணிசமான தொகை இது வரை சேர்ந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

'விரைவில் கல்முனையில் நடைபெறவிருக்கும்பொதுக் கூட்டத்தில் வைத்து இந்நிதி கையளிக்கப்படும் எனவும் செய்தி கூறுகிறது.

## அய்யாத்துரையின் கனவு

'என்ன சார்... அருமையான கட்டத்திலே கெடுத்துப் போட்டீங்களே! இப்பதான் சியாமளாவும் காந்தனும் காதல் பாட்டுப் பாடிட்டு சந்தோஷமா



தோட்டத்திலே ஆடிண்டிருக்காங்க அத பூரணமாப் பாக்கவிடாமக்கெடுத்திட்டீங்களே சார்!' இவ்வாறு, அப்போதுதான் தூங்கிக் கொண்டிருந்து விழிப்படைந்த அய்யாத்துரை கேட்டார்.

அருகேநின்ற டாக்டருக்கும் நர்சுக்கும்என்ன செய்வதென்றே புரியவில்லை 'என்ன சார் சொல்றீங்க? இப்போ தானே விழித்துக் கொண்டீங்க. சியாமளாவும் காந்தனும் காதல் பண்றத எங்க பாத்தீங்க?' என்று டாக்டர் கேட்டார்.

'டாக்டர்! நீங்க எனக்கு எதுக்கு ஊசிபோட்டீங்க? எனக்கு வருத்தம் குணமாகி ஒரு வாரமாச்சே நான் வியாதிக்காரன் மாதிரி படுத்திண்டாத்தான் அவங்க இருவரும் 'லவ்' பண்ணுவாங்கண்ணு நினைச்சு படுக்கையிலே கிடந்து நடிச்சிட்டிருந்தேன். அப்பிடியிருக்கக்க என்னையும் அறியாமத் தூங்கிட்டேன். நீங்க என்னடாண்ணு விபரமெதுவுமே தெரிஞ்சுக்காமே திடீரென்னு ஊசியைப் போட்டு என் இன்பக் கனவைக் கலச்சுப் பூட்டீங்க.'

அப்போதுதான் உண்மையை உணர்ந்த டாக்டர் செய்வதறியாது திகைத்தார். 'எனக்கு என்னசார் தெரியும்' என்றார்.

அய்யாத்துரை சிரித்தார், பலத்தசப்தத்துடன்.

இக்கட்டம் ஈ. வி. ஆர். பிக்சர்ஸ் 'குமரிப் பெண்' படத்துக்காக விஜயா படப்பிடிப்பகத்தில் படமாக்கப் பட்டது. அய்யாத்துரையாக ரங்கராவ் நடித்தார். டாக்டர் வேடத்தில் பிரபாகரனும் நர்சாக அங்கமுத்துவும் நடித்தனர். ராமண்ணா டைரக்‌ஷனில் இப்படம் உருவாகிறது. ரவிசந்திரனும் ஜெயலலிதாவும் ஜோடி சேர்ந்து நடிக்கும் [illegible]தின் கதை, வச[illegible] என். பாலு எழுதியுள்ளார்.



சவுக்குடன் புரட்சி செய்யப் புறப்பட்டுள்ள புரட்சி நடிகரை 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் பெற—பணம் பெற—பதினைந்து பரிசுகளைப் பகிர்ந்தளிக்கும்

# அரியதோர் 'அருந்த எண்ணெய்' அதிர்ஷ்டத் திட்டம்!

**பங்குபற்றும் பாவனையாளர்களுக்கு**

**பிரவேசக் கட்டணமில்லை ..................... தபாற் செலவு கூட இல்லை!**

**வியாபாரிகளால் விநியோகிக்கப்படும்**

## இலவச அஞ்சலட்டைகளை இன்றே வாங்கி அனுப்புங்கள்!!!

## நினைவிருக்கட்டும்: போட்டி முடிவுத் திகதி: 31-12-65

## அருந்த எண்ணெய்

### சோல் ஏஜண்டுகள்:

யாழ்ப்பாணம்: எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட்.
முல்லைத்தீவு: ஏ. வி. அருளப்பு, மெயின் வீதி.
திருமலை: பரஞ்சோதி மெடிக்கல் ஹோல்.
மட்டக்களப்பு: மயில் கடை, 8, மெயின் வீதி,
பொத்துவில்: எம். கனகரத்தினம், மெயின் வீதி
அக்கரைப்பற்று: சண்முகநாதன் ஸ்டோர்ஸ், சாகாமம் ரோட், விநாயகர் ஸ்டோர்ஸ், சாகாமம் ரோட்
சம்மாந்துறை: கதீஜா நியூஸ் ஏஜன்ஸி,
புத்தளம்: கே. ஏ. எம். ஸ்டோர்ஸ், 18, மெயின் வீதி
நீர்கொழும்பு: அலியா மரிக்கார் அன் சன்ஸ், 160 மெயின் வீதி; அப்துல் றகுமான், 107, மெயின் வீதி
குருநாகலை: எம். பி. வீரவாகு, 60, பெரகும்பா வீதி
கண்டி: சல்யாணி ஸ்டோர்ஸ, 55, பிரவுண் ரிக் வீதி
வத்துகாமம்: சென்ட்ரல் ஸ்டோர்ஸ், 4, கண்டி ரோட்
ரத்தொட்டை: ரெமி ஸ்டோர்ஸ், 49, மெயின் வீதி
மஹியங்கனை: அக்குறணை ஸ்டோர்ஸ், மஹியங்கனை
டப்புறஸ்ஸ: நேரு ஸ்டோர்ஸ், 26, டெல்டா ரோட்
நாவலப்பிட்டி: ஜி ஜேம்ஸ் சில்வா அன் சன்ஸ். 18, 20, கம்பளை ரோட்
அட்டன்: இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ், 39, மெயின் வீதி
பொகவந்தலாவ: ஸ்ரீ தெண்டாயுதபாணி ஸ்டோர்ஸ், 39, கொட்டியாக்கொலை பஜார்
மஸ்கெலியா: சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், 126, மெயின் வீதி
தலவாக்கொல்லை: யூ. கே. டி. சில்வா பிரதர்ஸ், ஸிட்டி பார்மஸி
நுவரெலியா: ஏ. எம். கோவிந்தசாமி அன் கோ., 34, 35, பழையகடை வீதி
வெளிமடை: றெப்பானியா ட்ரக் ஹவுஸ். பதுளை ரோட்
பண்டாரவளை: ஹதியா ஸ்டோர்ஸ் 38, மெயின் வீதி
ஹாலி-எல: டி. எம். பெரியண்ணபிள்ளை அன் சன்ஸ்
பதுளை: சுனில் பிரதர்ஸ், 190, லோவர் வீதி.

### யாழ்ப்பாணம்

எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி
ஏ. இராசையா அன் சன்ஸ்
வி. எஸ். கைலாசம் பிள்ளை அன் சன்ஸ்
வி. எஸ் கணபதிபிள்ளை அன் சன்ஸ்
வி. கந்தையாபிள்ளை & சன்ஸ்
சுந்தரம் பிரதர்ஸ்
ஸ்ரீ ஆனந்தபவான், ஸ்டேஷன் ரோட்
எஸ். வேலாயுத பிள்ளை
எஸ். வி. பி. கார்த்திகேய பிள்ளை

### நல்லூர்

குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
நடன முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
பி. இராசரத்தினம்

### திருநெல்வேலி

சிவன் ஸ்டோர்ஸ் பரமேஸ்வரா சந்தி
எம். நடராசா அன் பிரதர்ஸ்

### கோப்பாய்

சு. கதிரேசு, கோப்பாய் சந்தி
சிவபாதம் ஸ்டோர்ஸ் இருபாலை சந்தி

### சாவகச்சேரி

லிங்கம் ஸ்டோர்ஸ்
அம்பிகா டிஸ்பென்ஸரி
எம். எம். அப்துல் காதர் அன் பிரதர்
விநாயகர் ஸ்டோர்ஸ்

### இணுவில்

எஸ் பரமலிங்கம்
குமரகுருபர ஸ்டோர்ஸ்

### உடுவில்

எஸ். மயில்வாகனம்

### சுன்னாகம்

ராஜா மெடிக்கல்ஸ்டோர்ஸ்
யாழ்ட்டன் ஸ்டோர்ஸ்
பிருந்தா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
ஆர். எம். கான்பாய்
எஸ். வைத்திலிங்கம், சுன்னாகம் தெற்கு
எம் கே. செல்லையா, ஏ.கே சாந்தலிங்கம் } மார்க்கட்
சக்தி பார்மஸி
எம். தம்பித்துரை, கந்தரோடை ரோட்
ராணி ஸ்டோர்ஸ், புன்னாலைக்கட்டுவன்

### சுலட்டி

கே. டி. சிவகுரு, நாச்சிமார் கோவிலடி

### கோண்டாவில்

கே. கோபால பிள்ளை

### சுளிபுரம்

ஆர். துரையப்பா அன் சன்ஸ் தொல்புரம்
என். முருகேசு, மூளாய்
தொலபுரம் ப. நோ. கூ. ச.
கே. தப்பு

### சண்டிலிப்பாய்

கே. டி. நடராஜா
எம். ஐயாத்துரை

### காங்கேசன்துறை

எஸ். எஸ். வி. சந்திரன் (சந்திரா ஸ்டோர்ஸ்)
சிங்கம் பீடா ஸ்டோர்ஸ்
கே. செல்லையா அன் பிரதர்
விநாயகர் ஸ்டோர்ஸ்
சாந்தினி ஸ்டோர்ஸ்
வி. ஐயாத்துரை
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
டி. கனகசபை பிள்ளையார் ஸ்டோர்ஸ்
ஆசை ஸ்டோர்ஸ்(தையிட்டி
எஸ். இளையதம்பி

### ஊர்காவற்றுறை

பாலா பிரதர்ஸ்
வசந்தா ஸ்டோர்ஸ் அன் பேக்கரி
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
வி. எஸ். விஞசித்தம்பி அன் சன்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்
ப. நோ. கூ. ச. சமாசம், பருத்தியடைப்பு
கே. எஸ். இராமலிங்கம்
ஏ. எஸ். ஆறுமுகம்
அல்பிரட் ஸ்டோர்ஸ்

### ஆனைக்கோட்டை

ஆர். அருணாசலம், வண். வடமேற்கு

### பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. சமாசம் (சில்லறை டிப்போ)
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
எம். என். நல்லசேகரம் ஸ்டோர்ஸ்
கே. எல். அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்
வடலியடைப்பு ப. நோ. கூ. சங்கம்

### மானிப்பாய்

வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் பிரதர்
எம். சின்னத்துரை. ஆஸ்பத்திரி ரோட்

### ஆவரங்கால்

மல்லிகா ஸ்டோர்ஸ்
எம். சீவரத்தினம்

### புத்தூர்

செல்லத்துரை ஸ்டோர்ஸ்

### மாவிட்டபுரம்

ராஜா ஸ்டோர்ஸ்

### மயிலிட்டி

ஏ. மிக்கேல் பிள்ளை அன் சன்ஸ்
எஸ். நடராஜா, மயிலிட்டிகரை
கே. சிதம்பரப்பிள்ளை
ஜி. சிமியோன் பிள்ளை
எஸ். கனகசபை,பலாலி சந்தி
வி. அண்டனி
சிவன் ஸ்டோர்ஸ்

### கரவெட்டி

நடன முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
ஈஸ்வரி மெடிக்கல் ஸ்டோர்ஸ்
லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
கணேச மெடிக்கல் ஸ்டோர்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்
செல்லம் ஸ்டோர்ஸ்
கே. எஸ். வீரகத்தி, கரவெட்டி மேற்கு
ஐ. பொன்னம்பலம், துன்னாலை தெற்கு

### பருத்தித்துறை

குமாரவேல் மருந்துச்சாலை
கே. எஸ். மார்க்கண்டு
செல்லம் ஸ்டோர்ஸ்
எம். எஸ் நாகலிங்கம்

### வல்வெட்டித்துறை

எஸ். கே. சின்னத்துரை
கலாநிதி ஸ்டோர்ஸ்
சு எம் விஸ்வலிங்கம்
எஸ். கே. திருச்சிற்றம்பலம் அன் சன்ஸ்
ஏ. சின்னத்தம்பி, கிழக்குத் தெரு

### உடுப்பிட்டி

வி. சிவரத்தினம், வைரவர் கோவிலடி
எஸ். இரத்தினம் அன் சன்ஸ்
வி. எஸ். தங்கராஜா
வி. நல்லதம்பி, நாவலர் ச. நிலையம்

### அச்சுவேலி

டி. இராமலிங்கம் அன் சன்ஸ்
எஸ். கந்தசாமி
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
எம். இராசையா
கணேஷன் ஸ்டோர்ஸ்
சுகன்யா ஸ்டோர்ஸ்

### தெல்லிப்பளை

தனலெட்சுமி ஸ்டோர்ஸ்
எஸ். ரங்கநாதன்
இருஸ்ஸைஸ்

### சங்கானை

என். டி. இராசரத்தினம், மார்க்கெட்
ஆ. தா. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
கதிர்வேல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
தங்கராஜா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
சங்கானை ப. நோ. கூ. ச. டிப்போ
என். டி. இராசரத்தினம் பிரதர்ஸ்
கே. வைத்திலிங்கம், எம். தர்மலிங்கம் மார்க்கெட்
எஸ். கணபதிப்பிள்ளை, பிரைட்ஸ்

### உரும்பிராய்

விக்னேஸ்வரன் ஸ்டோர்ஸ்
எஸ். தனபாலசிங்கம்

### வேலணை

சரவணை வேலணை ப. நோ. கூ. ச.
எஸ். சுந்தரம், புளியங்கூடல் சந்தி

### மாதகல்

மாதகல் மத்திய ப.நோ.கூ.ச.
மாதகல் பரிஷ் ப. நோ.கூ.ச.

### கைதடி

லீலாவதி ஸ்டோர்ஸ்

### வவுனியா

எஸ். கே. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
எம் எம். லெப்பை
வவுனியா ஸ்டோர்ஸ்
தம்பிப்பிள்ளை ஸ்டோர்ஸ்
ஜோதி மாளிகை
சந்திரா ஸ்டோர்ஸ்
ஹாஜி எஸ். கப்பலார் அன் சன்ஸ்

### முல்லைத்தீவு

ஏ. வி. அருளப்பு

### நெடுங்கேணி

சிவகங்கா ஸ்டோர்ஸ்

### திருமலை

பரஞ்சோதிமெடிக்கல் ஹால்

### மட்டக்களப்பு

மயில் கடை
பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்
சிவநடராசா ஸ்டோர்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்
கணேஷன் ஸ்டோர்ஸ்
சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ்

### களுவாஞ்சிக்குடி

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
ரதி ஸ்டோர்ஸ்
வி. மார்க்கண்டு

### கல்முனை

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
டி. எம். மொஹிதீன்
அப்துல்காதர் அன் பிரதர்ஸ்
சோதி ஸ்டோர்ஸ்
கணேசன் ஸ்டோர்ஸ்
ரஹீம் ஸ்டோர்ஸ் (சாய்ந்தமருது)
யாழ்ப்பாண ஸ்டோர்ஸ்
ஹமீதியா டீரூம்

### சம்மாந்துறை

கதீஜா நியூஸ் ஏஜன்ஸி

### காரைதீவு

முருகன் ஸ்டோர்ஸ் (1-ம் குறிச்சி)

### வாழைச்சேனை

எம். எஸ். மீராசாய்பு, பள்ளிவாசல் கட்டிடம்
பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்

### ஏறாவூர்

சிவநடராசா ஸ்டோர்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்

### செங்கலடி

ரேவதிமெடிக்கல்ஸ்டோர்ஸ்

### அட்டாளைச்சேனை

யூ. அலியார் லெப்பை, ஸரீனா ஹோட்டல்

### அக்கரைப்பற்று

சண்முகநாதன் ஸ்டோர்ஸ்
விநாயகர் ஸ்டோர்ஸ்
கொழும்பு ஸ்டோர்ஸ்
எம். எச். எம். மொஹிதீன் மார்க்கெட்
எஸ். எம் ஜமால்தீன்

### பொத்துவில்

எம். கனகரத்தினம்
டி. தம்பிலெப்பை
டி. பி மொஹிதீன் பாவா
கணேசன் ஸ்டோர்ஸ்

### புத்தளம்

கே. ஏ. எம். ஸ்டோர்ஸ்
நலீரா ஸ்டோர்ஸ்
எச். எம். இஸ்மாயில் சன்ஸ்
எஸ். எம். சாலிஹு
விக்னேஸ்வரன் ஸ்டோர்ஸ்
மரைக்கார் ஸ்டோர்ஸ்
கிங்கொங் ஹோட்டல் அன் பேக்கரி
பி. எம். எஸ். மொகமட் காஸிம்

### மதுரங்குளி

பி. பி. உன்னிரான்
எஸ். எஸ். அப்துல் மஜீட்
மதுரங்குளி ஸ்டோர்ஸ்
எஸ். எஸ். ஹமீது

### உடப்பு

கனகா ஸ்டோர்ஸ்

### சிலாபம்

சிங்கள மெடிக்கல் ஹால்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

**கொச்சிக்கடை**
சுனேத்திரா ஸ்டோர்ஸ்
கணேசன் ஸ்டோர்ஸ்

**வென்னப்புவ**
சென்ட். ஜுட்ஸ்

**நீர்கொழும்பு**
அப்துல் ரகுமான் மெயின்வீதி
அலியா மரிக்கார் அன் சன்ஸ்

**பேலியாகொடை**
சென்ட். ஜோன் ஒயில் ஸ்டோர்ஸ்

**கொழும்பு**
காந்தி ஸ்டோர்ஸ் தெமட்டக்கொடை
அம்பாள் ஸ்டோர்ஸ் பொறளை
சுசீலா ஸ்டோர்ஸ், பொறளை
சுந்தையா ஸ்டோர்ஸ் 2வது டிவிஷன்
மஞ்சுளா ஸ்டோர்ஸ் தெமட்டக்கொடை
நாகலிங்கம் குரோஸரி ஸ்டோர்ஸ், பொரளை

**கிரிலப்பனை**
சாந்தி ஸ்டோர்ஸ்

**வெள்ளவத்தை**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**மொறட்டுவை**
பாலன்ஸ், காலிரோட்,
கந்தையா குரோஸரி ஸ்டோர்ஸ்

**அளுத்கமை**
சதானந்தன் ஸ்டோர்ஸ்

**மஹரகமை**
யாழ்ப்பாண ஸ்டோர்ஸ்

**நுகேகொடை**
யாழ்ப்பாண ஸ்டோர்ஸ்

**ரம்புக்கனை**
மெக்கா ஸ்டோர்ஸ்
கே. திருநாவுக்கரசு
புஹாரி ஸ்டோர்ஸ்

**குருநாகலை**
எம். பி. வீரவாகு

**இப்பாகமுவ**
தாஸன் ஸ்டோர்ஸ்

**மாவனெல்ல**
எஸ். ஓ. ஹோட்டல்
ஏ. எஸ். எம். அப்பாஸ் அன் கம்பெனி
புஹாரி ஸ்டோர்ஸ்
எம். ஏ. எஸ். காதர் அன் கம்பெனி
மூபாறக் ஸ்டோர்ஸ்
எம். எஸ். சப்ஸ்தீன் வெப்பை
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**மாவத்தகமை**
எம். செய்யது அஹமட் அன் பிரதர்ஸ், அரம்பொல

**வெரல்லகமை**
இஞ்யா ஸ்டோர்ஸ் ஹேதெனிய
ஏ. எம். ஹனிபா, ஹேதெனிய

**நொச்சியாகம**
மூஹரின் ஸ்டோர்ஸ்

**மதவாச்சி**
ஹாஜி ஏ. எஸ். அன் சன்ஸ்
அலி. பி. மொஹமட் அன் பிரதர்

**எப்பாவெல**
கொழும்பு ஸ்டோர்ஸ்

**ஹெதாகல**
ஏ. மதார் சாய்பு

**பொலன்னறுவை**
லக்ஷ்மி ஸ்டோர்ஸ், கதுருவெல
முருகன் ஸ்டோர்ஸ் கதுருவெல

**கைக்காவெல**
எம். எம். இப்றுஹீம்

**மாத்தளை**
வி. எஸ். கணபதி பிள்ளை, அலுவிஹார
பெர்ஷியன் ஹோட்டல் அன் பெஸ்ட் பெலஸ்
லலிதா ஸ்டோர்ஸ்
ரோயல் டீ ரூம்
ஸ்ரீ பாலன் ஸ்டோர்ஸ்
எஸ். சிவகுரு. மெயின் வீதி,
வி. நவரத்தினம், திருமலை ரோட்
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**பள்ளேபொல**
எஸ். செல்லதம்பி, மெயின் வீதி

**ரத்தோட்டை**
ரெமி ஸ்டோர்ஸ்
எம். கே. வேலும், மயிலும்

**அக்குறணை**
மஸீன் ஸ்டோர்ஸ்

**கட்டுகாஸ்தோட்டை**
இந்திரா ஸ்டோர்ஸ்
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
மர்ஜான ஸ்டோர்ஸ்

**மடவளை பஜார்**
ரஷீட் அன் மஜீட்
கே. அப்துல் ரஷீட் & கம்பனி
எஸ் எம். ஹலீம்

**கெங்காலை**
ஏ. அமிர்தலிங்கம்

**மெனிக்கின்ன**
அக்குறணை ஸ்டோர்ஸ்

**திகனை**
ரேஸான் ஸ்டோர்ஸ்

**தெல்தெனிய**
ஸ்ரீ மகாதேவா ஸ்டோர்ஸ்

**ஊருகல**
ஏ. வி. மாரிமுத்து பிள்ளை

**மஹியங்கனை**
அக்குறணை ஸ்டோர்ஸ்

**கடுகண்ணாவ**
வி. எஸ். சோமசுந்தரம் அன் பிரதர்ஸ்
அமீர் ஸ்டோர்ஸ்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

**பிளிமத்தலாவ**
சீத்தா ஸ்டோர்ஸ்

**பேராதனை**
தாஜ்மஹால் ஹோட்டல்
சாந்தி ஸ்டோர்ஸ்
ஏ. வி. எஸ். ஹமீது & சன்ஸ்
வி. ஏ. நடராசா

**வத்துகாமம்**
சென்ட்ரல் ஸ்டோர்ஸ் 4, கண்டி ரோட்

**கண்டி**
கல்யாணி ஸ்டோர்ஸ்
எஸ். எஸ். சின்னராசா, கொழும்பு வீதி
வி. எஸ். எஸ். குமாரசாமி, கொழும்பு வீதி
நீகல் வியூ ஹோட்டல் பேராதனை ரோட்
நூர் ஜஹான் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
ஸ்ரீ இராமஜெயம், திருமலை வீதி
கே. எம். ஹசன், திருமலை வீதி

**கலஹா**
ஜெயபாரதி ஸ்டோர்ஸ்
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்
பாலசண்முகா ஸ்டோர்ஸ்
ஸ்ரீ முத்துமாரி ஸ்டோர்ஸ்
ஏ. எஸ். சங்கரப்பிள்ளை & பிரதர்
பாலகிருஷ்ணா ஸ்டோர்ஸ்
எஸ். எம். நடேசபிள்ளை

**புப்புரஸ்ஸ**
நேரு ஸ்டோர்ஸ்

**தெல்தோட்டை**
அப்துல் அஸீஸ், உடுதெனிய ஸ்டோர்ஸ்
பட்டியகெமட்ரேடிங் கம்பனி

**இரட்டைப்பாதை**
டி. பி. முத்துசாமிபிள்ளை
எம். ராஜூ அன் கம்பனி
டி. ஆர். சுப்பையா அன் கம்பனி
ஆர். எம். என். நடேசன்

**புசல்லாவ**
நீலாம்பிகா ஸ்டோர்ஸ்
ஏ. பெரியசாமி, 446, நுவரெலியா ரோட்,
மஹரு(f)பா ஸ்டோர்ஸ்
ஏ. ஆர். ஏ நடராசா ஸ்டோர்ஸ்
பூமகள் ஸ்டோர்ஸ், நுவரெலியா ரோட்
டி. வைத்திலிங்கம் அன்சன்ஸ் நுவரெலியா ரோட்
இராமையா ஸ்டோர்ஸ், நுவரெலியா ரோட்

**ரம்பொட**
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
வி. இராமசாமிபிள்ளை
ஏ எஸ் மாரியாபிள்ளை
ராஜா ஸ்டோர்ஸ்
ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ்

**சங்கிலிப்பாலம்**
ஏ. எஸ். மொஹிதீன் பிச்சை
எஸ். கே. பி. நாதன்

**நியாங்கந்தர**
ஸ்ரீ தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

**பூண்டுலோயா**
பென்ஸி ஹவுஸ் (பிரதர் மெஷின்டீலர்)
பூண்டுலோயா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
நியூ ஸிட்டி ஸ்டோர்ஸ்
அம்பிகா ஸ்டோர்ஸ்
கிருஸ்ணா ஸ்டோர்ஸ்
எம். எஸ். எம். சுப்பு ரெட்டியார்
டி. ராமசாமிபிள்ளை, லோவர் பஜார்

**வட்டகொடை**
தேவராஜ் கபே
ஏ. வி. கே. அருணாசலம்

**கட்டுக்குத்தாலை**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
ஏ. இராமலிங்கம்
இராமஜெயம் ஸ்டோர்ஸ்
எம். காளிமுத்து

**மாவத்துர**
எம். பி. கிருஷ்ணசுவாமி

**உலப்பனை**
சென்ட்ரல் ஸ்டோர்ஸ்

**நாவலப்பிட்டி**
ஜி. ஜேம்ஸ் சில்வா அன்சன்ஸ்
கொத்மலை ஸ்டோர்ஸ்

**இனிகத்தேனை**
எஸ் பி. சதாசிவம்பிள்ளை அன்கோ.
லக்கி ஸ்டோர்ஸ்

**நோர்ட்டன் பிரிட்ஜ்**
கணேசன் ஸ்டோர்ஸ் கிரிவனெலியா
முத்துகுமார் ஸ்டோர்ஸ்
ஆர். வெங்கடாசலம்

**மஸ்கெலியா**
சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
நூர்ஜஹான் ஸ்டோர்ஸ்
ஸ்ரீ லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
நயான்ஸா ஸ்டோர்ஸ், லக்கம் பஜார்

**நோர்வூட்**
லங்கா ஸ்டோர்ஸ்
ஜயலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**டிக்கோயா**
ஏ. நடேசபிள்ளை. (மெடிக்கல் ஸ்டோர்ஸ்)
எஸ். பழனிநாதன், மெயின் வீதி
சு. என். இராஜேந்திரா, கார்பெக்ஸ் பஜார்

**அட்டன்**
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்
லங்கா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
இராமையா கபே, மல்லியப்பு பஜார்

**கொட்டகலை**
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

**நுவரெலியா**
ஏ. எம். கோவிந்தசாமி அன் கம்பனி, பழைய கடை வீதி
ஹோட்டல் டீ புகாரி
நியூ பாரிஸ் ஹோட்டல்
ஸ்ரீ ஜோதி விலாஸ் இந்து ஹோட்டல்
ஜாக்கப் ஸ்டோர்ஸ்

**பொரகஸ்**
புஷ்பா ஸ்டோர்ஸ், பதுளுவெல

**பண்டாரவளை**
ஹதியா ஸ்டோர்ஸ்
ஸ்ரீ விநாயகர் ஸ்டோர்ஸ்
வி. ஏ. இராமலிங்கம்
ராஜாராம் கம்பனி

**ஹாலி-எல**
முத்துராஜா ஸ்டோர்ஸ்
டி. எம். பெரியண்ணபிள்ளை அன் சன்ஸ்
ஆனந்தா ஸ்டோர்ஸ்
பி. இராமசாமி அன் பிரதர்ஸ்
மனோன்மணி ஸ்டோர்ஸ்

**பதுளை**
கனில் பிரதர்ஸ்
ஆமினா ஸ்டோர்ஸ்
ஊவா ட்ரக் ஹவுஸ்
லங்கா ட்ரக் ஹவுஸ்
ஜெகமோகன் ஸ்டோர்ஸ்
சிப்பஸ்ட் ஸ்டோர்ஸ்
ராணி ஸ்டோர்ஸ், லோவர் வீதி
சரோஜினி ஸ்டோர்ஸ்
லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
எஸ். பொன்னம்பலம், லோவர் வீதி
ஏ. பேரம்பலம், பசார் வீதி
வி. ராஜா ஸ்டோர்ஸ் லோவர் வீதி

**வெலிமடை**
றெப்பானியா ட்ரக் ஹவுஸ்
செல்வி ஸ்டோர்ஸ்
நாதன் ஸ்டோர்ஸ்
யாழ்ப்பாண ஸ்டோர்ஸ்
செல்வி ஸ்டோர்ஸ், நுவரெலியா ரோட்
இரத்தினம் ஸ்டோர்ஸ் ,,
நாதன் ஸ்டோர்ஸ் ,,
எஸ். பரமு பிள்ளை, பதுளை ரோட்

**எட்டியாந்தோட்டை**
பக்ஸான்னிஷா ஸ்டோர்ஸ்

**இரத்தினபுரி**
சாலி சன்ஸ்

**உடபுசல்லாவ**
கதிரேசன் கேஸ் ஸ்டோர்ஸ்
முருகன் ஸ்டோர்ஸ்
கணபதி ஸ்டோர்ஸ்
மங்களாம்பிகா ஸ்டோர்ஸ்

**வத்துமுல்லை**
சரஸ்வதி ஸ்டோர்ஸ், மூலால்கெல்லை

**தெஹியோவிற்ற**
எஸ். பி. நாடார் அன் கம்பனி
ஜெபமணி ஸ்டோர்ஸ்

**அவிசாவளை**
கே. என். ஜி. கணபதி அன் கோ.
ஆர். பி. எஸ். அன் கோ.

**எஹலியகொடை**
யாழ்ட்டன் ஸ்டோர்ஸ்
ரஞ்சன் ஸ்டோர்ஸ்
சுவாஸ்திகா ஸ்டோர்ஸ்
தம்பியப்பா அன் சன்ஸ்
சென்ட்ரல் ஸ்டோர்ஸ்

**றக்குவானை**
நடராஜா ஸ்டோர்ஸ்

**கொட்டப்பொல**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

# நாடெங்கிலும் பிரசாரம்?

'இந்த ஒப்பந்தத்தைத் கிழித்தெறிக' என்ற தலைப்பில் கீழ்க்காணும் செய்தியை 'ஜனதின' (23-11-65) வெளியிட்டுள்ளது.

'சிங்கள உரிமையைத் தமிழரசு வாதிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் டட்லி—செல்வநாயகம் இரகசிய ஒப்பந்தத்தையும், பரஸ்பர நம்பிக்கையின் மீது இவ்விருவரிடையுள்ள உடன்பாட்டுக்கும் எதிராக பொதுமக்களின் கண்டனத்தை எடுத்துக் காட்டுவதற்காக நாடு பூராவும் பொதுக்கூட்டங்கள் நடத்த தேசபக்தியுள்ள ஸ்தாபனங்கள் தீவிர ஏற்பாடுகள் செய்கின்றன. இக்கூட்டங்களை நடத்துபவர்களில் பிக்குகளும், பௌத்த சமய ஸ்தாபனங்களும் முன்னணியில் நிற்கின்றனர்.

இக்கூட்டங்கள்வாயிலாகக் கீழ்க்காணும் விஷயங்கள் வற்புறுத்தப்படும்.

★ ஜனதின வெளியிட்ட இரகசிய ஒப்பந்தம் பற்றி பிரதமர் டட்லி சேனநாயக்கா உடனே பொதுமக்களுக்கு அறிக்கை வெளியிட வேண்டும்.

★ மக்களுக்குத் தெரியாமல் இரகசியமாகச் செய்யப்பட்டதால் அந்த ஒப்பநதத்தை உடனே கிழித்தெறிய வேண்டும்.

★ ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய முடியாத நிலைமை இருக்குமானல், பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை மக்களிடம் விட்டு விடவேண்டும்.

இதற்கிடையே சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தைக் குற்றுயிராக்க அரசாங்கம் முயற்சி செய்வதால், மக்களுக்கு உண்மையை விளக்குவதற்காக மலைநாடு பூராவும் தொடர்ச்சியாகப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படுமென 'நாம் சிங்களவர் இயக்கத்தின்' காரியதரிசி செனட்டர் ஆனந்த தசநாயக்கா கூறினர்.

—

# இலாகாவில் தமிழரசு அதிகமாம்

'குடிசன மதிப்பு, புள்ளி விவர இலாகாவின் அதிபர் தனது இலாகாவினுள் நடத்தும் கடுமையான சிங்கள—எதிர்ப்பு நடவடிக்கையின் விளைவாக அது ஒரு தமிழரசுக்கட்சி முகாமாக மாறியுள்ளது. அதிபரின் இந்த நடவடிக்கையால் அதிருப்தி அடைந்துள்ள சிங்கள ஊழியர்கள் அவரை உடனே இடமாற்றம் செய்யும்படி நிதி அமைச்சரிடம் வேண்டிக் கொண்டுள்ளனர்.

—எத்த (1-12-65)

—

## ஒப்பந்தம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபர்:- நீங்கள் அந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒப்பந்தத்தின் ஆங்கிலப் பிரதியை வாசித்தீர்களா?

டாக்டர்:- ஆம், வாசித்தேன், இந்த ஒப்பந்தம் எப்படி, எப்பொழுது அவர்களுக்கு கிடைத்தது என்பதைப் பற்றிதான் நான் யோசிக்கிறேன்.'

—'எத்த' (30-11-65)

தயாரிப்பாளர்: பி. எம். திசாநாயக்கா, கம்பனி. - போன்: 454
—நான்கு கோவில் காரிகளின் தாயகம்—  SIVAM—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பியங்கள் காட்டும் கவினுறு நாடுகள்

2

## கோசல நாடு

இனி, கம்பன் கட்டிய கலைக்கோவிலினுள்ளே காட்சி தரும் கோசலை நாட்டின் சிறப்பினை நோக்குவோம். ஒரு நாட்டிற்கு வளனை அளிப்பது வயலும், வயல் சார்ந்த நிலமுமாகிய மருதமாகும். கோசலநாட்டு மருத நிலச் சிறப்பைக் கூறப்போந்த கம்பன் தனது உயிர்த் துடிப்புள்ள கவிதையால் அதனை ஒரு சொல்லோவியமாக நம்முன்னே நிறுத்துகிறுன். ஆடும் மயிலும், ஓசை எழுப்பும் மேகத்திட்டுகளும், கமல மலர்களும், தெண்டிரைத் தடாகங்களும், ரீங்காரம் செய்யும் சுரும்பினமும், குவளை மலர்களும் ஆங்கு நிறைந்துள்ளன. இவற்றை வைத்து ஒரு கலை நிகழ்ச்சியையே சமைத்து விடுகிருர் கவிச்சக்கரவர்த்தி.

மருதமெனும் இளவரசி அத்தாணி மண்டபத்தே கொலுவீற்றிருக்கிருள். கழனி நிலமாகிய அம்மண்டபத்தில் தாமரை மலர்கள் எனும் ஒளி விளக்குகள் பிரகாசம் எழுப்புகின்றன. தடாகங்களிலிருந்து சீறி எழும் தெண்டிரைகளே அம்மண்டபத்தின் திரைச் சீலைகள். முழக்கமிடும் மேகத்திட்டுகள் மத்தளமாக அமைந்து பேரோசை எழுப்புகின்றன. இத்தகு பின்னணியில் மயில்கள் நடனமாடத் தொடங்குகின்றன. குவளை மலர்கள் என்னும் கண்கள் இக் காட்சியினைக் கண்டு களிப்பேருவகை எய்துகின்றன. கம்பராமாயணம் என்னும் பேராழியினுள் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஒரு கவிதை முத்து; கோசல நாட்டு மருத நிலக் காட்சியினை நம் நெஞ்சத்தில் சலனப் படமாக ஓடச் செய்கிறது:

'தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின்
ஏங்கக்
குவளைகண் விழித்து
நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும்
மாதோ'!

இத்தகைய வளனுறைந்த அந்நாட்டு மக்கள் வறுமை என்பதையே அறிந்திலர். ஆங்கு போரும் பூசலும் இல. அவர்கள் மாட்டு பொய்மையும், கல்லாமையும் இல்லை. அந்நாட்டவர்கள் வள்ளற்றன்மையையே அறியாதவர்கள். ஏன் தெரியுமா? அங்கு வறுமையே இல்லாமையால் எனக. எடுப்பார் இருந்தாற்ருனே ஈவோருமிருப்பர். அவர்கள் சண்டையையும், சச்சரவையும் அறியாதவர்கள். இதனுல் தமது வலிமையைக் காட்டுவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. அங்கு பொய்யுரைப்போர் இல்லாததால் அவர்கள் மெய்ம்மையின் உயர்வைத் தெரிந்திலர். அந்நாட்டு ஆடவரும் பெண்டிரும் தெளிந்த அறிவும் நாகரிகமும் அமையப் பெற்றவராவர். இதனுல் அங்கு அறியாமை குடியேறவில்லை. இவ்வாறு கோசல நாட்டு மக்களின் வாழ்க்கை முறைமையினை எடுத்தோதுகிருன் கம்பன்:

'வண்மை இல்லை ஓர்
வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர்
செறுநர் இன்மையால்
உண்மை இல்லை மெய்
உரைஇலாமையால்
வெண்மை இல்லை பல்
கேள்வி மேவலால்'

## நிடத நாடு

நளவெண்பாவிற் புகழேந்திப் புலவர் காட்டும் நிடத நாட்டுச் சிறப்பும் நோக்கற்பாலது. உலகத்திலுள்ள வளமிகு நாடுகளுள் முன்னணியில் வைத்துப் போற்றத் தக்கது நிடதநாடு. நீர்வளமும், நிலநலனும் நிரம்பியுள்ள அந்நாடு தடாகங்களால் சூழப்பட்டுள்ளது. அத்தடாகங்களில் நீலோற்பல மலர்களும், கஞ்ச மலர்களும் மலிந்துள்ளன. அப்பொய்கையினுள் கயல் மீன்கள் களிப்பேருவகையுடன் புரண்டாடுகின்றன. தாமரை மலர்களிலிருந்து தேன் வழிந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு, தமது காவியத் தலைவனுகிய நளனின் நிடதநாட்டு இயற்கை வளனை வர்ணிக்கிருர் புகழேந்தி:

'காமர் கயல் புரள
காவி முகை நெகிழ
தாமரையின் செந்தேன்
தளை அவிழ—பூமடந்தை
தன் நாட்டம் போலும்
தகைமைத் தே சாகரஞ் சூழ்
நல் நாட்டின் முன்
நாட்டும் நாடு'

இத்தகு இயற்கை வளம் நிறைந்துள்ள நிடத நாட்டு மக்கள் எல்லாருமே கற்றவர்கள். அங்கு கல்லாதாரே இலர். அவர்களுக்குத் தெரிந்தது நூலறிவு. அவர்களாற் காண முடியாதது மங்கையரின் இடை. அந்நாட்டு மகளிர் தமது இடை தெரிய உடை அணிபவர்கள் அல்லர். அங்கு பிச்சை எடுப்பாரும் இல்லர். அந்நாட்டு மக்கள் மிக்கு செல்வம் உடையவர்கள் பாடுபடடுத் தேடிய அப்பணத்தை மறைத்து வைப்பவர்களுமல்லர்:

'தெரிவன நூல்; என்றும்
தெரியாதனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே
ஒரு பொழுதும்
இல்லாதனவும் இரவே
இகழ்ந்தெவரும்
கல்லா தனவும் கரவு'

(அடுத்த இதழில் முடியும்)

யூ. எல். தாவூத்

# ஒழுக்கம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லிவிட்டான்' என்ற அமைதியில் இரவுப் போசனத்தை உண்டுவிட்டு படுக்கையில் சாய்ந்தார்... ஒருபடியாக காலையும் வந்தது...காலைக் கடன்களை முடித்துவிட்டு நேராகப் பாடசாலைக்கு வந்து தன் வேலைகளை மும்முரமாகக் கவனிக்கலானுர்.

நெஞ்சில் 'கொடிவிடும் வேதனைகளின் பிரதிபலிப்பைக் கொட்டிவிட வெண்ணி அன்று மாலை ஆசிரியர்கள் கூட்டத்தை கூட்டினுர். அந்தக் கூட்டத்தில் அவர் வாய் பேசவில்லை. உள்ளத்து வார்த்தைகள் தான் பேசின... 'என் உடன் அன்பு ஆசிரியர்களே!

'நீவிர்! பொன்னன நேரங்களைப் வீணுப் போக்காதீர்கள், உலகில் மனிதன் அதுவும் ஆசிரியர்கள் வாழும் காலமோ மிகக் குறைவு. நீங்கள் தான் வருங்கால சமுதாயத்திற்கு அறிஞர்களையும், ஆராய்ச்சியாளர்களையும், கவிஞர்களையும், விஞ்ஞானிகளையும் ஆக்குகின்ற அறிவு இயந்திரங்கள். உங்களது ஒவ்வொரு செய்கையும் தான் மாணவர்களை நல்வழிப்படுத்தும், உண்மையையும் ஒழுக்கத்தையும் பயிறுவிக்கும் உத்தம ஆசிரியர்களான நீங்களே ஊதாரித்தனமான தீய செயல்களில் ஈடுபட்டால் மாணவர்கள் முன்னேறுவார்களா? ...... உங்கள் தீய செய்கையினுல் பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு ஊட்டாதீர்கள் ...'

ஏற்கனவே இரத்தக் கொதிப்பால் பீடிக்கப்பட்டிருந்த அவருடைய இதயம் ஆவேசப் [illegible] பட பட்டென அடித்தது கூட்டமும் கலைந்தது...

தலைமையாசிரியர் ஆபிசுக்கு செல்லலானுர். சில ஆசிரியர்கள் ஒன்ருய்ச் சேர்ந்து கதைத்துக் கொடிருந்தனர்.

'இவர் தலைமையாசிரியர் வேலையைப் பார்த்து பொடியங்களைத் திருத்துறதை விட்டுவிட்டு எங்கடை ஒழுக்கத்தைதிருத்த வாரார் ...பிளட்பிறசாலை உத்தாள் செத்தாத்தான் நல்லது'...'

ஆசிரியர்களின் அறிவற்ற விவேகமற்ற பேச்சு தலைமையாசிரியர் இதயத்தை ஈட்டி கொண்டு தாக்கி வேதனையை ஏற்படுத்தின. நேராக ஆபீஸ் அறைக்குச் சென்று சிலுவையில் அறையப்பட்டு செங்குருதி சிந்தும் கர்த்தரின் கனிந்த முகத்தைப் பார்த்து கதிரையில் அமர்ந்தார். 'பிதாவே இந்த அறிவுள்ள மூடர்களை மன்னியும்...

## அடக்கம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் கணவரிடம் துணிந்து கூறமுடியுமானல், அவர் மனம் ஒப்புவாரானுல் நல்லதே. அவர் விருப்பாவிடில்-சமூகத்தை உதாசினப் படுத்தக்கூடிய தைரியம் உங்கள் இருவருக்கு மிருக்குமானுல் பிரிந்து வாழுங்கள்.

இவ்விரண்டு முறையும் பிடிக்காவிட்டால்', நமது பண்புக்கு ஏற்றபடி மனத்தைக் கட்டுப்படுத்தி வாழுங்கள்.

கேள்வி 4.

.....................................?

'கு'
ஏருவூர்

கடந்த 21-11-65 சுதந்திரன் இதழில் இப்பகுதியில் வெளியாகிய 2வது கேள்விக்[illegible] [illegible] நீங்களே உள்ளதை[illegible] ஏற்றுக் கொள்ள வேண்டும்.

# தொட்ட துறையெல்லாம்....

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

அடைய அமைக்கப் பெறும் புகைவண்டிப்பாதை என்று பலரினுல் எள்ளி நகையாடப் பட்டபோதும் கொழும்பு—யாழ்ப்பாணப் புகைவண்டிப் பாதை அமைப்பதற்கு பெரும் காரணமாய் விளங்கியவர் இராமநாதன் என்பதை யாம் நினைவிற் கொள்ளல் நலம். அத்துடன் தமிழ்ச் சைவனுய் இருந்த போதும்' புதிய கோயிலுடைமை பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை சட்டமாக்கிய பெருமையும் இராமநாதனையே சாரும்.

### இறுதிக்காலப்பணி ஏன் இருட்டிப்பு செய்யப்பட்டது

சேர். பொன். இராமநாதனின் வரலாற்றை வரையும் கட்டுரையாசிரியர்கள் சரி, நூலிலே வடிக்கும் நூல் ஆசிரியர்கள் சரி அவரின 1915ம் ஆண்டு அரசியற் பணிக்கு முதன்மை கொடுத்து அவரின் பிற்கால அரசியற் பணி பற்றி மூடி மறைப்பவர்பலர். மேலெழுந்தவாரியாக எழுதி மழுப்புபவர்கள்மற்றும்பலர். புதுப் புதுப் விளக்கம் கூறுபவர் இன்னும் சிலர். இவர்களுள் பலர் இராமநாதனின் இறுதிக்காலம் வகுப்புவாதத்திற்கு அடிமையானது வருந்தத்தக்கது என்று கூறி முடிப்பர். இவ்விடத்தில் ஏரிக்கரைச்செய்தி இதழாகிய 'டெய்லி நியூஸ்' இராமநாதனின் நூற்றுண்டு விழாவையொட்டி 14-4-51ல் வரைந்த ஆசிரியத்தலையங்கத்தின் ஒரு பகுதியையும் அதற்கருகில் வெளியிடப்பட்ட கட்டுரையில் ஒரு பகுதியினையும்ஈண்டு எடுத்துக் காட்டல் பொருத்தமுடையது. ஆகூழ்இன்மை (அதிட்டவசமின்மை)காரணமாக தனது இறுதிக்காலத்தில் அவர்கடைப்பிடித்த அதிகரித்த பிற்போக்கு வாதத்தினுல் அவர் முன்பு பெற்றிருந் பெரும் மதிப்பையும் அன்பையும் ஓர் அளவு இழக்க நேர்ந்தது. 'டொனமோர் சீர்திருத்தத்திற்கும்' பொதுமக்கள் வாக்குரிமைக்கும் அவர் காட்டிய தீவிர எதிர்ப்பையும் அவருடைய அரசியற் சிந்தனையை மறைத்து வந்த, அதிகரித்த வகுப்பு வாதமும் அவரின் புகழ்மங்குவதற்கும் காரணமாய் இருந்தன. பிற்கால வரலாறு அவரின் இத்தகைய எண்ணங்கள் தவருனவை என்பதைக் காட்டியுள்ளது. ஆனுல் இக்கொள்கைகள் கொண்டிருந்த அவரைப்பற்றிய எம்நோக்கும் கால ஓட்டத்தில் மென்மை பெற்றுவிட்டது அத்துடன் நாட்டிற்குச் செய்த முன்னைய பணியை உரிய முறையில் கணிக்கவும் துணை செய்துள்ளது.

'பிற்காலத்தில் தன்கொள்கையை தளர விட்டிருந்தாரேயாயினும் சேர். பொன். இராமநாதனின் பெருமையும் நாட்டிற்காற்றிய அவரின் வியத்தகுபணியும் எல்லோராலும் மதிக்கப்பட்டது. நன்றி உணர்வுள்ள மக்களால் பதினுறு ஆண்டுகளுக்குப்பின் அவர் நினைவாக ஒரு உருவச்சிலை நிறுவப்பட்டது.

### நினைவுச்சின்னம்

இராமநாதன் நாட்டிற்காற்றிய நல்லபணியை நினைவு கூர்ந்து சிலை எழுப்ப 'நன்றியுணர்வுமிக்க மக்கள்' பதினுறு ஆண்டுகள் கழித்து அதாவது 1930-ல் மறைந்த அவருக்கு 1946-ல் தான் சிலை எழுப்பினுர்கள் என்து இங்கு நினைவிற்கொள்ளத் தக்கது. அத்துடன் சேர். பொன். அருணுசலத்தின் சிலையின்கீழ் அவரின் பல்துறைப்பணியின் பாங்கினை 'நிரம்பிய கல்விப்புலமையையும் அரசியல் வன்மையும் ஆளும் திறனும் வாய்ந்த சிறீமான் சேர். பொன். அருணுசலம் 1853—1924—தேசசேவைக்கென்று தன் நாட்களை அர்ப்பணம் செய்த பெருந்தகையாளர் சட்ட மன்றத் திருத்தத்தினை அரிதின் முயன்று முற்றுவித்த வீரர். இலங்கையின் சர்வகலாசங்கம் அமைப்பதற்காய் அருந்தவம் ஆற்றித் தளராது உழைத்த பெருமகன். இவரது நன்றிகளை மறவா இலங்கைவாசிகளால் நிறுவிய நடுகல்.' எனப்பொறித்த சிங்கள அரசாங்கம், சேர். பொன். இராமநாதன் சிலையின் கீழ் வேண்டா வெறுப்பாய் பின் வருமாறு உள்ளம் தொடாத முறையில் பொறித்துள்ளது. 'மன்னர் நியாயதுரந்தரர் மைக்கல் ஜோர்ஜ் திருத்தொண்டர்களின் தோழர், சட்டநிரூபண சபையில் இலங்கையரின் அங்கத்தினர் பொதுசனப் பண உதவியால் ஸ்தாபிக்கப்பட்டது (1915).' இதற்குக் காரணம் சேர். பொன். அருணுசலம் தனது இறுதிக்காலத்தில் 'தமிழ் அவையை' (Tamil League) தோற்றுவித்து உரிமைகுரல் எழுப்பியிருப்பினும் இவ்வவை தோற்றுவிக்கப்பட்டு ஓர் இரு ஆண்டுகளுக்குள் அருணுசலம் மறைந்துவிட்டார். ஆனுல் இராமநாதன் அவர்கள் தமிழர்கள் சார்பில் எழும்பிய போர்க்குரல் காரசாரமாய் விளங்கியதோடு நெடுங்காலம் நீடித்து சிங்கள அரசியல் தலைமைப் பீடத்தையே ஆட்டம் காணச்செய்தது. இவ்விடத்தில் மேற்குறித்த 'டெயிலிநியூஸ்' ஆசிரிய தலையங்கத்தையும், அதன் அருகில் வெளிவந்த கட்டுரையையும் எதிர்த்து திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் எழுதிய 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற கட்டுரை சுவையையூட்டுவதோடு சிந்தனைக்கும் வேலைகொடுக்கிறது.

(வளரும்)

## தமிழ்ப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சில தகாத உணர்ச்சி பேதங்களுக்கு ஆளாகுவதுடன் அவர்களால் சில தீய நடத்தைகளும் விபரீதங்களும் ஏற்படலாம். ஆனுல் எல்லோரையும் குறை கூறி விடவும் முடியாது. உணர்ச்சியை, மனத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாலேயே தீமை ஏற்படலாம்.

ஆபாச சினிமாவைப் பார்த்துக் களிப்புற்ற உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத காளையர்கள் தாமும் சினிமாவில் கண்டவாறு செயல் முறையிலும் இறங்கிவிட முயல்வார்கள். அவர்களது முயற்சிக்குப்பல பெண்களே பலியாகிவிடுகிருர்கள். இதனுல் எத்தனையோ பெண்களின் சிறப்பக அமையக் கூடிய எதிர்கால வாழ்வு பாழாகிவிடுகிறது. இதனை நாம் பத்திரிகைகள் தரும் செய்திகளிலும் வேறு பல வழிகளாலும் அறிய முடிகிறது.

எனவே பாரோர் போற்ற உலக மக்களுக்கு முன்னேடிகளாக விளங்கிப் புகழடைய வேண்டிய தமிழ் அன்னையின் மக்களாகிய நாம், ஆபாச சினிமா நம் நாட்டில் வேரூன்றி தழைத்து ஓங்கி வளரவிடாது ஆரம்பக் கட்டத்திலேயே வேரோடு அறுத்து அதன் அழிவுக்கு வழிதேடி நம் முன்னேர் கூறிய நல்ல வழியிலே வாழ்க்கைப் பாதையைச் செலுத்தி அவர்களது பெருமையை நிலைநாட்டுவோமாக.

ஏமாற்ற நினைப்பவரையும் வழிக்கிழுக்க இதைவிட வேறு மார்க்கம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரோர் போற்றும் பெரியார்கள்-7

# ஆபிரகாம் லிங்கன்

அடிமைத் தளையை அறுத்தெறியும் பணிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து அதற்கே தன் உயிரையும் பலியாக ஈன்று உலகப் பெரியார்களின் வரிசையிலே ஓர் உன்னத இடத்தைப் பெற்றுவிட்டார் அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஆபிரகாம் லிங்கன். கெண்டகி என்னுமிடத்தில் காட்டுப் பக்கமாக கம்புதடிகளால் கட்டப்பட்ட ஒரு சின்னஞ் சிறு வீட்டில் 1809-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ம்திகதி இவர் பிறந்தார்.

ஆபிரகாம் லிங்கனின் தந்தை தோமஸ் லிங்கன் ஓர் ஏழை விவசாயி. படிப்பு வாசனை அறியாத அவருக்குத் தன் சொந்தப் பெயரைக் கூடச் சரிவர எழுதத் தெரியாது. ஆபிரகாமின் தாயார் நான்சி காங்ஸ் அடக்க ஒடுக்கமும் பயபக்தியும் நிறையப் பெற்ற ஒரு நல்ல பெண்மணி. வறுமையில் உழன்றவாறு அங்குமிங்கும் அலைந்து திரிந்த லிங்கன் குடும்பம் ஈற்றில் 1816-ம் ஆண்டு இந்தியானு என்னும் இடத்தை அடைந்து வாழ்ந்து வந்தது. அங்கே ஆபிரகாம் லிங்கன் பத்து வயதுப் பையனுக இருக்கும் போது தனது அன்னையை இழந்துவிட்டார்.

ஆபிரகாம் லிங்கன் ஒரு சின்னப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து சில மாதங்களில் ஓரளவிற்கு எழுத வாசிக்கப் பழத்துக்கொண்டார். இவரது பள்ளிப் படிப்பு ஒன்பது ஆண்டுகள் வரையில் நீடித்தது. இக் காலத்தில் இவர் பள்ளிக் கூடம் போய் வந்த நாட்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் மொத்தம் ஒரு வருடத்திற்கும் குறையத்தான். காடுகளை வெட்டிச் சுத்தமாக்குதல், நிலத்தைக் கொத்திப் பண்படுத்தல், பயிர் செய்தல் முதலான வேலைகளில் தன் தந்தைக்கு ஒத்தாசை புரிவதோடு அயலிலுள்ள விவசாயிகளுக்கும் இவர் சிறு வேலைகள் செய்து கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வளவு கடுமையான உழைப்பின் பின்னரும் களைப்பாற எண்ணுது நெடுந்தூரம் நடந்துசென்று நூல்களை இரவல் வாங்கிப் படிப்பார் ஆபிரகாம் லிங்கன். எழுதுவதற்குக் காகிதம் இல்லாததால் ஒரு கரித்துண்டினுல் பலகையில் எழுதிப் படித்தார். காகிதம் கிடைத்த காலத்தில் ஒரு காட்டுப் பறவையின் சிறகைப் பேனுவாகவும் ஒரு வகை மரத்தின் வேரில் ஊறும் திரவத்தை மையாகவும் பயன்படுத்தித் தன் பாடங்களை எழுதிப் படிக்கலானுர்.

## அன்ரனி பெர்னுண்டோ

தான் வாசித்த கதைகளைத் தன் கிராமவாசிகளுக்குச் சொல்லி அவர்களை மகிழ்விப்பதில் ஆபிரகாம் லிங்கன் ஒரு தனி இன்பத்தைக் கண்டார். உருவத்தில் மிக உயர்ந்து ஆறு அடி நான்கு அங்குல அளவிற்கு வளர்ந்துவிட்டிருந்த இளைஞன் ஆபிரகாம் லிங்கனிடம் எதிலும் நீதியாக நடந்துகொள்ளும் உயர்ந்த பண்பும், நீதியை நிலைநாட்ட எதையும் செய்யத் தயங்காத குணமும் இயல்பாகவே அமைந்திருந்தன. அடிக்கடி நீதி மன்றத்திற்குச் சென்று வழக்கு விசாரணைகளைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பார். வக்கீல்கள் வாதாடும் விதத்தை நுணுக்கமாகக் கவனித்து வந்த இவர் சட்ட நூல்களைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் கொள்ளலானுர். நூல்களை வாங்குவதற்குப் பணம் இல்லாததால் பன்னிரெண்டு மைல் தூரம் நடந்து சென்று அவற்றைக் கற்று வந்தார்.

வறுமை நிறைந்த தன் வாழ்க்கையிலே துன்ப துயரங்களை எல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொண்ட லிங்கன் விடாமுயற்சி காரணமாகப் படிப்படியாக முன்னேறி நாளடைவில் ஒரு சிறந்த வக்கிலாகிப் புகழடைந்தார். நீதி மன்றத்திலே நல்ல சுவையான கதைகளைச் சொல்லித் தன் கட்சியைத் தெட்டத் தெளிவாக்கிக் காட்டுவதில் லிங்கனுக்கு நிகர் லிங்கனே தான். சிறு வயது முதலே உண்மையுள்ளவராக வாழ்ந்து மக்களின் அன்புக்குப் பெரிதும் பாத்திரமான இவர் உண்மையான வழக்குகளை மட்டுமே ஏற்று வாதாடுவதைத் தன் வழக்கமாக்கிக் கொண்டார்.

படைத் தலைவனுகப் போர் முனை சென்று போரிட்ட லிங்கன் நாளடைவில் அரசியலில் புகுந்து சட்டசபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். துரிதமாக முன்னேறி வந்த இவர் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். இவரது ஆழ்ந்த கருத்துள்ள பேச்சுக்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. 1861-ம் ஆண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட இவர் பெருந்தொகையான மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். சிறு குடிசையில் வாழ்ந்த ஆபிரகாம் லிங்கன் தன் சுய முயற்சியால் முன்னேறி அமெரிக்க குடியரசுத் தலைவராகி "வெள்ளை மாளிகை"யில் வாசம் செய்யும் வாய்ப்பையும் பெற்றுர்.

ஒருமுறை நியூ ஓர்லியன்ஸ் நகரில் கறுப்பு மனிதர்களான நீக்கிரோக்கள் அடிமைகளாக விற்கப்படுவதை லிங்கன் கண்டார். 'கறுப்பாக இருந்தாலும் இந்த அப்பாவி மனிதர்களை இப்படி மிருகங்களைப் போல விற்பனை செய்வது பெரிய அநியாயமன்றோ!' என லிங்கனின் உள்ளம் மிகுந்த வேதனையடைந்தது. அதிலிருந்து, அடிமை முறையை ஒழித்துக் கட்டுவதற்காக இவர் அயராது உழைக்கலானுர். இதை விரும்பாத ஒருவன் குடியரசுத் தலைவரான லிங்கனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டான். மறு நாள், அதாவது 1865-ம் ஆண்டு ... திகதி ஆபிரகாம் லிங்கன் மரணத் திரையுள் மறைந்தார். மறைந்து நூறு ஆண்டுகள் ஆகியும் இவரை மறந்துவிடாது இன்னும் பாரோர் போற்றிப் புகழ்கின்றனர்.

- உங்கள் பகுதியான வளர்மதியில் பிரசுரிப்பதற்கு சிறு கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், வினு விடைகள், சுவையான செய்திகள் தேவைப்படுகின்றன.
- ஒவ்வொரு விடயமும் முழு அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
- தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாகவும், நிறைய இடைவெளிகள் விட்டும் எழுத வேண்டும். இவற்றையனுப்பும் கடித உறையின் வலது மூலையில் அனுப்பும் விடயம் கட்டுரையா, கதையா, வினு விடையா, செய்தியா என்பதைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்ப்போம்.

# தமிழென்ற தாய்!

'நவாலியூர்க் கவிராயர்'

என்ன மெனும் இல்லத்தில் ஒன்றுமவள்
எழிலுற்றே பூத்திருந் தாள் பூவையவள்!
இன்னமெனும் குவலயத்தில் தேடிவைன்
கோடியின்பம் எந்தனுக்கே தந்துவிட்டாள்!

தன்னகத்தே தூர்பரிய மனம் படைத்தாள்
தாயகையாய்த் தரணியிலே தோன்றி
விட்டாள்!

என்னகத்தே எழிலுருவாய் மாறிவிட்டாள்
எல்லாமே இனிதாகத் தான் தந்தாள்!

மண்ணகத்தில் பெண்மையதாய் பூத்திட்டாள்
மஞ்சகத்தில் என் மனதை மாய்த்திட்டாள்!
பண்ணகத்தில் பாவினுக்கோர் பாதை விட்டே
புறகத்தில் கற்பினுக்கோர் கதை படித்தாள்!

அமிழ்தென்ற சுவைக்கு மேல் தாபமிட்டாள்
அழகென்ற அரணங்காய் வந்து விட்டாள்!
தமிழென்ற தாயினுக்கு ஏற்றி விட்டாள்
திடமொன்று தரணியிலே தானும் ஒன்றுபட்டே!

# "மண்ணிற்கு மேலே"

புதிய வளர் கதை

19-12-65ம் திகதி இதழில் ஆரம்பமாகிறது

எழுதுபவர்:
அரியாலையூர் த. இந்திரலிங்கம்

## தொடுத்தோம்

1 தூரதிருட்டி கண்ணுடியைக் கண்டு பிடித்தவர் யார்?

2 உணவைத் தடிகளால் ஏற்றி உண்பவர் எத்தேசத்தவர்?

3 மோட்டார் வண்டியைக் கண்டு பிடித்தவர் யார்?

4 உலக அதிபார குத்துச் சண்டை வீரர் யார்?

5 பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்தவர் பெயரென்ன?

6 ரொடீசியா எப்போது சுதந்திரம் (ஒரு தலைப்பட்ட) பெற்றது?

7 உலகத்தின் முதல் வானவெளி வீரர் யார்?

8 பேனுவை கண்டு பிடித்தவர் யார்?

9 மலாயா பிரதமரின் முழுப்பெயர் என்ன?

## விடுத்தோம்

(1) கலிலியோ.

(2) சீன தேசத்தவர்.

(3) சேர். கென்றி போட்.

(4) கசியஸ் கிளே (தற்போதைய பெயர் முகம்மது அலி)

(5) சேர். அலெக்சாண்டர் பிளமிங்.

(6) 11ந் திகதி நவம்பர் மாதம் 1965 வருடம். (11-11-65)

(7) மேஜர் யூரி ககாரின்.

(8) வாட்டர்மேன்.

(9) தந்திரமத் மகா முல்லா சிறீ பாதுகா, பாகீத்ரயாங்தி பெர்ட்டுவான் அகாங் மகாமூல்ய பாதுகா பாகீத்ர யாக்ய இந்தரா துங்கு அப்துல் ரஹ்மான்.

சேகரித்தவர்.
முஹம்மது பௌஸி

## வினு விடை

கொய்யாக்கனி எங்கிருந்து முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது?

பிரேசில் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது.

'பசிபிக்' என்று பசிபிக் சமுத்திரத்திற்குப் பெயரிட்டது யார்?

மகெலன் என்ற ஸ்பானிய மாலுமி.

உடலில் இரத்த ஓட்டம் நடைபெறும் இரத்த நாடிகளின் நீளமென்ன?

62000 மைல்கள்.

உலகத்தின் கூரை என்று புகழ்பெற்ற மேட்டு நிலமெது?

பமிர் மேட்டு நிலமாகும்.

'லொஸ் ஏஞ்செல்ஸ்' என்ற துறைமுகம் எங்கேயுள்ளது?

வட அமெரிக்காவில் உள்ளது.

சீன மாமதிலைக் கட்டியது யார்? அதன் நீளமென்ன?

'திசின்சி' எனும் சீன மன்னன். அதன் நீளம் 1800 மைல்கள்.

தோட்டத் தொழிலாளருக்கு அளிக்க வேண்டிய கட்டாய வைத்தியசேவை பற்றிய சட்டம் எப்போது இயற்றப்பட்டது?

1865-ல்.

அமெரிக்காவின் 8 வது அணுகுண்டுப் பரிசோதனை எப்போது நடைபெற்றது?

14-11-1963-ல் நடைபெற்றது.

எந்தத் தேசாதிபதியின் காலத்தில் இலங்கையில் யூரித் திர்ப்பு முறை ஏற்படுத்தப்பட்டது?

'மெயிற்லண்ட்' தேசாதிபதி காலத்தில்.

அலெக்சாந்திரியா என்ற நகரைக் கட்டியது யார்.

'மகா அலெக்சாந்தர்' என்ற மன்னன்.

தொகுத்தவர்:-
வை. குலோத்துங்கன்

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யில் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

**வளர்மதி**
**சுதந்திரன் மாணவர் மன்றம்**
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 6

பெயர் ____________________

பாடசாலை ____________________

முகவரி ____________________

____________________

____________________ ____________________
பெற்றேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ஜனத்திரள் நிறைந்த தியேட்டர்களில்

# இப்பொழுது காட்சி தருகிறுன்!

**சென்ட்ரல்** [மருதானை] **ஈரோஸ்** [பாமன்கடை] **ராணி** [யாழ்ப்பாணம்]

**ராஜேஸ்வரா** [மட்டக்களப்பு] **ஜோதி** [திருகோணமலை] **லிபேர்டி** [ஹட்டன்] **லிபேர்டி** [பதுளை]

- குழந்தை உள்ளம் படைத்தவன் முத்து! ஆனுல்......அவன் முரடன்!
- பெற்ருராலும் அடக்க முடியாத அவனைத் தூய அன்பினுல் கட்டிப் பிணைத்து விடுகிருள் சீதா!

இது ஓர் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம்!

★ நடிகர் திலகம் முரட்டுப் பாத்திரத்தில் சிறப்பாக நடித்திருக்கிருர்!

சிவாஜி கணேசன்—தேவிகா—பந்துலு—ராஜம்மா—அசோகன்—பிரேம் நசிர்
சந்திரகாந்தா—நாகேஷ்—கருணுநிதி—வி. கே. ராமசாமி—பேபி ஷகிலா
மற்றும் பலர் நடித்த

**பத்மினி பிக்சர்ஸ்**

# முரடன் முத்து

பாடல்கள் : கண்ணதாசன்

டைரக்ஷன் : பி. ஆர். பந்துலு

---

# அனைவரும் போற்றும் 7வது வாரம்!

பார்த்தோரை மீண்டும் மீண்டும்
பார்க்கத் தூண்டும் பாங்கான திரைச் சித்திரம்!

**கிங்ஸ்லி பிளாஸா நவா**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **கல்யாணி** (நாவலப்பிட்டி)


**சந்தியா** (கம்பளை) **விஜிதா** (ஹட்டன்) **லட்சுமி** (இரத்தினபுரி)

**எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி, நம்பியார், ரங்கராவ், பண்டரிபாய், தங்கவேல், ரத்னு, நாகேஷ், பேபி சகிலா**

மற்றும் பலர் நடித்த

# எங்க வீட்டுப் பிள்ளை

(கண்கவர் ஈஸ்ட்மென் வர்ணம்)



---

உல்லாசப் பொழுது போக்குக்கு உயர்ந்த தனிச் சித்திரம்!

**3வது வாரமாக**

**கெயிட்டி** (கொட்டாஞ்சேனை)

வேறு சில திரைகளிலும்



எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, தங்கவேலு, அசோகன் நடித்த

# உல்லாசப் பயணம்

---

## அன்பின் நிறைவென்ன? அதன் தன்மையென்ன?

இவற்றை விளக்க

**சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு**

**விரைவில் வருகிறது!**



**சிவாஜி கணேசன், தேவிகா, நாகேஷ், பாலாஜி**

தோன்றும்

# அன்புக் கரங்கள்

---

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் [illegible] ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1965-ம் வருடம் டிசம்பர் மாதம் [illegible] திகதி [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org